
"என் கடன் பணி செய்து கிடப்பதே"


85
OFFICE OF THE STATE EDITOR
37/Gu/74
11 APR 1974
21/4/74
GAZETTEER UNIT, MADRAS-8



# திருக்கோயில்

85

OFFICE OF THE STATE EDITOR
37 | 64/74
11 APR 1974
GAZETTEERS UNIT




மாலை 16 | ஆனந்த—சித்திரை | ஏப்ரல்—1974 | மணி 7

பொருளடக்கம்

1. இராமகிருஷ்ண மாமுனிவர்
2. அம்பிகையின் அழகு வெள்ளம்
3. சபரிமலை தரிசனம்
4. பஞ்ச புராணம்
5. கண்டவர் விண்டது
6. சன்மார்க்கக் கொள்கைகளின் விளக்கம்
7. திருமூலர் காட்டும் கடவுள்
8. அங்கயற்கண்ணி ஆனை விடு தூது
9. திருநல்லூர்ச் சிறப்பு
10. கல்வெட்டுக்களில் சித்திரைத் திங்கள்
11. தமிழ்ஞான சம்பந்தன்
12. அருளுணர்வு

**சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!**

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும். தனிப் பிரதி விலை ரூபா ஒன்று மட்டும்.

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல் இதழ்கள் தவறுமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

# இராமகிருஷ்ண மாமுனிவர்

(வாழ்வும் போதனையும்)

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.



158591

**முன்னுரை :**

நமது இந்திய நாடு, தொன்று தொட்டு எண்ணற்ற எத்தனையோ பல சான்றோர்களும் அருளாளர்களும் ஞானிகளும் தோன்றிய சிறப்புடையது. அத்தகைய அருளாளர்களும் ஞானிகளுமாகிய பெருமக்களின் வரிசையில் ஒருவராக, ''வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவனன்றோ'' என இராமலிங்க வள்ளலார் பாடுவதுபோல, நம் இந்திய நாட்டில் தோன்றியருளியவர் இராமகிருஷ்ணர். இராமகிருஷ்ணர் இணையற்ற ஓர் அருட் பெருந் தோன்றல் (அவதார புருஷர்). அவர்தம் வாழ்க்கையும் போதனைகளும் மங்கி மழுங்கி ஒளி இழந்து கிடந்த நம் இந்து மதம், புதிய எழுச்சியும் வளர்ச்சியும் பொலிவும் பெற்று, மறு மலர்ச்சியுறச் செய்துள்ளன. நமது இந்திய நாட்டின் ஐம்பது கோடி மக்களின் ஐயாயிரம் ஆண்டுக்கால ஆன்மிக அருள் ஞானத்தின் முழு நிறைவான எடுக்காட்டாகத் திகழ்பவர் இராம கிருஷ்ணர் எனலாம். ("The consummation of 500 million people for 5000 years.")

**வாழ்வும் போதனையும் :**

வங்காளத்தில் ஹூக்ளி மாவட்டத்தில், கமார்புகூர் என்னும் சிற்றூரில், குதிராம் என்னும் தந்தையாருக்கும், சந்திராமணி தேவி என்னும் அன்னையாருக்கும் நான்காவது மைந்தராக, இராம கிருஷ்ணர் தோன்றினர் (17-2-1836). அவர் தம் இயற்பெயர் கதாதரர் என்பது. இளமையிலேயே தந்தையாரை இழந்த இராமகிருஷ்ணர், இராம்குமார் என்னும் தம் தமையனரின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார். கல்கத்தா நகருக்கு வடக்கே ஐந்து கல் தொலைவில் கங்கையாற்றின் கரையில், தட்சிணேசுவரம் என்னும் இடத்தில், இராணி இராசாமணி அம்மையார் கட்டிய காளி கோயிலின் பூசகராகத் தமது 19 ஆம் வயதிற் சென்று பணி புரியும் வாய்ப்பு இராமகிருஷ்ணருக்குக் கிடைத்தது. இங்கேயே இராமகிருஷ்ணர் அன்னை காளியின் அருட் பேறு

---

சென்னைத் திருமயிலை இராமகிருஷ்ண மடத்தில் நடைபெற்ற 139-வது ஜயந்தி விழாவில், நீதிபதி மாட்சிமிகு திரு. பி. ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது (3—3—74).

—ஆசிரியர்.

N74.6.7

பெற்றார்; தமது ஆன்மிக அருள் வாழ்க்கை, முழுவதையும் நடத்தினார். இராமகிருஷ்ணரின் தவ வாழ்க்கை நிலையமாகத் தட்சிணேசுவரம் திகழ்ந்தது. இராமகிருஷ்ணர் பள்ளிப் படிப்பு மிகுதியும் பெற்றிலராயினும், அவர் தம் வாழ்வும் போதனைகளும் தெய்விக நலம் நிரம்பி, ஈடும் எடுப்புமற்று, எவருள்ளத்தையும் கொள்ளை கொண்டு உய்விக்க வல்லனவாக அமைந்துதிகழ்கின்றன. ''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்'' என்னும் திருவள்ளுவர்பெருந்தகையின் மொழிக்கேற்ப, இராமகிருஷ்ணரின் அருமை பெருமைகள், அவர் அருளிச் செய்துள்ள உபநிடதங்கள் போன்ற உபதேச மொழிகளால் தெளிவுறப் புலனாகின்றன.

அருளாளர்கள் அல்லது ஞானிகள், வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு சூழ்நிலைகளில் தோன்றினாலும், அவர்தம் போதனைகளும் வாய்மொழிகளும், எத்தகைய மாறுபாடும் இன்றிப் பெரிதும் ஒத்துக் காணப்படும் இயல்பினவாகவே திகழும். "விஞ்ஞானிகள் தம்முள் ஒருவர்க்கொருவர் முரண்படுவர்; அவர்தம் கொள்கைகளும் கூற்றுக்களும் வேறுபடுதலும் மாறுபடுதலும் உண்டு. ஆனால் மெய்ஞ்ஞானிகள் தம்முட் சிறிதும் முரண்படுவதில்லை. அவர்தம் அநுபவங்களும் அருள் மொழிகளும் சிறிதும் மாறுபாடு இன்றி ஒத்தியைந்து எங்கும் எப்போதும் ஒரு தன்மைத்தாகவே விளங்கும்'' இவ்வுண்மைக்கு ஏற்ப இராமகிருஷ்ணரின் இனிய அருளுபதேசங்களுள், பற்பல, இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், நம் தமிழகத்தில் வாழ்ந்தருளிய அருளாளர்கள் பலரின் பாடல்களையும், போதனைகளையும் நமக்கு நினைவுறுத்துகின்றன.

" While the science of a thousand years ago seems ludicrous and even that, of a century ago seems quaint, men who report religious experience can speak to one another across chasms of time, without difficulty. What St. Paul calls 'the fruits of the sprit' are in the opinion of many competent students of religious experience, remarkably similar in all lands."

—ELTON TRUEBLOOD,
*The Trustworthiness of Religious Experience.*

**தர்க்கமும் குதர்க்கமும் :**

''வெறும் சாத்திர ஆராய்ச்சியால் ஒரு நலனும் உண்டாகாது ; வெறும் சாத்திர ஆராய்ச்சியிலேயே உழன்று உழன்று உண்மையை உணர முடியாமல் அழிந்தவர் எத்தனையோ பலர். பரம் பொருளைப் பற்றிய ஞானம் நூலறிவால் ஒருபோதும் வாய்ப்பதில்லை. வெறும் ஏட்டுக் கல்வியால் யாதொரு பயனும் இல்லை. சாத்திர ஞானம் ஒரு வகையில் இடையூறேயாகும். தர்க்க சாத்திரப்புலமையாலும், சொற்போர் புரியும் திறனாலும் கடவுளை ஒருபோதும் அறிந்து கொள்ள முடியாது'' என்று இராமகிருஷ்ணர் அவ்வப்போது கூறுவதுண்டு. இவ்வாறே,

(1) நம்முடைய தமிழ் நாட்டில் தோன்றிய திருஞான சம்பந்தப் பெருமான், "தர்க்கசாத்திரங்களில் வல்லவர்கள், குதர்க்கமாகக் கூறுகின்ற வீண் வாதங்களைக் கேட்டு மயங்காதீர்கள். அவற்றால் உங்களுக்குத் தீங்குகளே விளையும். அவர்களின் குதர்க்கங்களைக் கேட்டு மயங்காமல், எல்லோரும் இறைவனை ஏத்தி வழிபடுங்கள்'' என்கின்றார்.

''தடுக்கமரும் சமணரொடு
தர்க்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரும் மொழிகேளாது
ஈசனையே ஏத்துமின்கள்''

(2) ''தர்க்க சாத்திரங்களில் வல்லவர்கள் பிரதிக்ஞை ஏது திருட்டாந்தம் உபநயம் நியமனம் என்னும் பலவகைக் கூற்றுகளாலும், எடுத்த மொழிகளாலும் இறைவனைச் சோதித்து அறிய முற்படுவார்கள். சொல்லின் எல்லையையும், சொற்பொருளின் வரையறைகளையும் கடந்து நிற்பவன் இறைவன். அவனை நாம் சொல்லும், சொற்பொரு

ளும், தருக்க ஞானமும் கொண்டு அறிதல் இயலாது. வானத்திலுள்ள சூரியனின் பேரொளியைப் பிறவிக் குருடர்கள் காண்பதில்லை. எனினும் சூரியன் தன் பேரொளியை உலகெங்கணும் பரப்பிக் கொண்டிருத்தல்போல, இறைவனும் சோதி வடிவினனாகச் சுடர் விட்டுத் திகழ்ந்து கொண்டிருக்கின்றான். அவனிடத்தில் நம்பிக்கை கொண்டு அன்பு செலுத்தி வழிபட்டால் உங்களுடைய துன்பங்கள் எல்லாம் நீங்கும். நீங்கள் எல்லா இன்பங்களையும் அடையலாம்.''

''ஏதுக்க ளாலும் எடுத்த
மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா; சுடர்
விட்டுளன் எங்கள் சோதி ;
மாதுக்கம் நீங்கல் உறுவீர்;
மனம்பற்றி வாழ்மின்;
சாதுக்கள் மிக்கீர் இறையே
வந்து சார்மின்களே''

எனப் பிறிதோர் இடத்தில் அறைகூவியழைத்து, நமக்கு அறிவுறுத்துகின்றார் திருஞானசம்பந்தர்.

*(3)* கடவுளை நாம் நம்முடைய புத்தக அறிவினால் புரிந்து கொள்ள முடியாது. எவ்வளவுதான் நூல்களை ஓதினாலும், நூலறிவு ஒருபோதும் கடவுளை உணர்த்தாது. இறைவன் நம் உள்ளத்துக்குள்ளே உயிர்க்கு உயிராய் இருந்து வருகின்றான். 'நாமேதும் அறியாமே நம்முள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டி நிற்கின்றான்.' நம் உள்ளத்துக்குள்ளே இருந்து எழும் அவனது மெல்லிய இனிய குரலொலியைக் ("Small still voice within") கேட்கப் பெறும் உண்மை ஞானத்தினாலேயே, இறைவனை நாம் உணரவும், பிறர்க்கு உணர்த்தவும் இயலும்.

''கீதம் வந்த வாய்மையாற்
கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதி வந்த வாய்மையால்
உணர்ந்து உரைக்க லாகுமே?''

என்பது திருஞானசம்பந்தப் பெருமானின் திருமொழி.

**உள்நோக்கிக் காணல் :**

இன்னோரன்ன பாடல்கள் பலவும், இராமகிருஷ்ணரின் அருள் மொழிகளையே வலியுறுத்துவனவாகத் திகழ்தல் காணலாம். இராமகிருஷ்ணர் எளிய இனிய சிறு சிறு கதைகளின் வாயிலாக உயரிய உண்மைகளை மக்களுக்கு எடுத்துணர்த்தும் இயல்புடையவர். அவர் திருவாய் மலர்ந்தருளிய சிறு கதைகள் பலவற்றுள் பின்வருவதும் ஒன்று :

விறகுத் தலையன் ஒருவன் வனத்திலிருந்து விறகு சுமந்து கொண்டு வெளியே வருவதைச் சாது ஒருவர் பார்த்தார். 'உள் நோக்கிப் போ' என்று மொழிந்து விட்டு, அவர் தம் வழியே போனார். அடுத்த நாள் விறகுத் தலையன் வனத்தினுள் மேலும் உள் நோக்கிச் சென்றான். சந்தனக் கட்டைகள் கிடைத்தன. சில நாட்களுக்குப் பிறகு மேலும் உள் நோக்கிச் சென்றான். தாமிரக் கட்டிகள் கிடைத்தன. இன்னும் சில நாட்களுக்குப் பிறகு உள் நோக்கிச் சென்றான். வெள்ளிக் கட்டிகள் கிடைத்தன. கொஞ்ச நாளைக்குப் பிறகு இன்னும் உள் நோக்கிச் சென்றான். பொன் வைரம் முதலியன கிடைத்தன. மனிதன், தனது மனத்தினுள் உள்நோக்கிச் செல்லுமளவும் அரிய பொருள்களைப் பெறுவான்; உணர்வினைப் புறத்தேசெலுத்தாமல், அகத்தே செலுத்தினால்தான் இறைவனை நாம் உணர முடியும் என்னும் உண்மையினை, இச் சிறு கதை உணர்த்துகின்றது. இதனையே, நம் தமிழகத்தில் தவராச யோக நெறிச் சக்கரவர்த்தி எனத்தாயுமானவர் போற்றிப் புகழ்ந்த திருமூலர் பெருமான்,

''முகத்திற் கண்கொண்டு
காண்கின்ற மூடர்காள்!
அகத்திற் கண்கொண்டு
காண்பதே ஆனந்தம்''

''எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதனைக் கண்டறி வார்இல்லை;
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினல்
கண்ணாடி போலக் கலந்துநின் றானே''

என அருளிச் செய்துள்ளார். இங்ஙனமே, திருநாவுக்கரசர் பெருமானும் உள் நோக்கிக் காணும் உபாசனையாகிய வழிபாட்டின் சிறப்பினை,

''மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறை எனும் நீரைப் பாய்ச்சித்
தம்மைஉள் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பர் ஆகிற்
சிவகதி விளையும் அன்றே''

எனவரும் தேவாரத் திருப்பாடலில் அழகுற உருவகம் செய்து அருளிச் செய்திருத்தல் அறிந்து இன்புறத் தக்கது.

**மடை மாற்றம் :**

இராமகிருஷ்ணர் எதனையும் நடைமுறைக்கு எட்டாமலும் ஏலாமலும் சொல்லுபவர் அல்லர். எளிய இனிய நடைமுறைக்கு ஏற்ற வகைகளிலேயே அவர் தம் அருள் மொழிகள் அமைந்திருக்கும். ''யான் எனது என்னும் செருக்குஅஞ்ஞானத்தினின்று உதிப்பது. அஞ்ஞானம் நீங்க வேண்டுமாயின் இத்தகைய செருக்குகளை அகற்றுதல் வேண்டும். இவ்வாறே காமம் குரோதம் போன்ற தீய குணங்களையும் நாம் கைவிடுதல் வேண்டும். இவற்றை அறவே அழித்துவிட நம்மால் இயலாது. இவைகளைக் கடவுள்பால் திருப்பி விட்டால், தீங்கு செய்வதற்குப் பதிலாக இவைகள் நமக்கு நலம் புரிவனவாக அமையும்'' என்பது, இராமகிருஷ்ணரின் இனியதோர் உபதேசமாகும். இதனையே முழுவதும் தழுவி ஏற்கும் வகையில்,

''அஞ்சும் அடக்கடக்கு என்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கில்லை
அஞ்சும் அடக்கில் அசேதனமாம் என்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவுஅறிந் தேனே''

''தானே புலனைந்தும் தன்வசம் ஆயிடும்
தானே புலனைந்தும் தன்வசம் போயிடும்
தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே''

என வரும் திருமூலர் திருமந்திரப் பாடல்கள் அமைந்திருத்தல் காணலாம். காமம் குரோதம் முதலியவற்றை இறைவன்பால் திருப்பி விட்டால், தீங்கு செய்வதற்குப் பதிலாக அவைகள் நலம் புரியும் என்னும் இராமகிருஷ்ணரின் கருத்தையே, ''அஞ்சும் அடக்கா அறிவறிந்தேனே'' என்றும்; ''தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்'' என்றும் திருமூலர் கூறியிருக்கும் நுட்பம் கருதி மகிழ்தற்குரியது. ஐம்பொறி புலன்களை, நாம் உலகப் பொருள்களின் பாலன்றி இறைவன்பால் தொண்டு செய்வதற்குச் செலுத்துதலையே 'அஞ்சும் அடக்கா அறிவு' எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார். நம்முடைய காமக் குரோதங்கள் முதலியனவற்றை இறைவன்பால் திருப்பிவிடின், அவைகள் மடைமாற்றம் (Sublimation) பெற்று, தீங்கு செய்வதற்கு மாறாக நலம் புரியும் இயல்பினவாக மாறும் என்பதனையே திருமூலர் ''தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்'' என்று குறித்தருளினார். இவ்வாற்றால் இராமகிருஷ்ணருக்கும் திருமூலருக்கும் உள்ள கருத்தொப்புமை, பெரிதும் உணர்ந்து போற்றத்தக்கது.

**அழுகையும் அருட்பேறும் :**

இராமகிருஷ்ணர் தம்முடைய அன்பர்கள் பலரையும், ''நீர் இறைவனை அடைய விரும்பி அழுதது உண்டா?'' (Have you wept for God ? Have you shed tears for Him ?) எனக் கேட்பது வழக்கம். இதற்குக் காரணம், அன்னை காளிதேவியின் அருளை அவர் பலகால் அழுதழுது பெற்றமையே யாகும். ஒவ்வொரு நாளும் பொழுது சாயும் மாலை வேளைகளில், 'ஐயோ! அன்னையின் காட்சி கிடைக்காமல் இன்று ஒரு நாள் வீணாகப் போய் விட்டதே! அன்னையின் அருட் காட்சியைப் பெறாமல் நாட்கள் ஒவ்வொன்றாகக் கழிந்து கொண்டிருக்கின்றனவே!' என்று இராமகிருஷ்ணர் அழுது புலம்பி அரற்றும் இயல்புடையவராக இருந்த

னர் என்பது வரலாறு. இறையருளைப் பெறுதற்கு அழுகையும் ஒரு சாதனம் போலும்.

''யானேபொய் என்நெஞ்சம்பொய்
என் அன்பும் பொய்;
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே'' (1)

''அழுமதுவே யன்றி மற்றுஎன் செய்கேன்
பொன்னம்பலத்து அரசே'' (2)

''அடியேன் அயலே மயல்கொண்டு அழுகேனே'' (3)

''அழுகேன் நின்பால் அன்பாம் மனமாய்'' (4)

என மணிவாசகப் பெருமான், தமது திருவாசகத்தில் ஆங்காங்கே இராம கிருஷ்ணரைப் போல அழுகையின் இன்றியமையாமையினைக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

**இராமலிங்கர் :**

இறையுணர்வும் வழிபாட்டு ஒழுக்கமும் எல்லார்க்கும் எளிதில் வாய்ப்பதில்லை. தெய்வமென்பதோர் சித்தம் பெரும்பாலோர்க்கு எளிதில் ஏற்படுவதில்லை. இறையருள் வாய்த்தால்தான் நாம் இறைவனை வணங்க முடியும். கடவுள் உணர்வு கைகூடுதல் என்பது ஓர் அரும் பெறல் நற்பேறு ஆகும். அதன் அருமைப் பாட்டினை இராம கிருஷ்ணர் ''உலகத்தவர்களுள் பெரும்பான்மையோர் தங்கள் வயிற்றுப் பிழைப்பிலேயே அல்லும் பகலும் தங்கள் கருத்தைச் செலுத்தி வருகின்றனர். கடவுளைப் பற்றிக் கருதுவாரைக் காண்பது அரிதிலும் அரிது'' எனக் குறிப்பிட்டுள்ளார். உலக மக்கள் வயிற்றுப் பிழைப்பிலேயே அல்லும் பகலும் கருத்தைச் செலுத்தி வருதலைக் குறித்து வருந்தி,

''அவல வயிற்றை வளர்ப்பதற்கே
அல்லும் பகலும் அதில்நினைவாய்க்
கவலைப் படுவ தன்றிச்சிவ
கனியைச் சேரக் கருதுகிலேன்;
திவலை ஒழிக்கும் திருத்தணிகைத்
திருமால் மருகன் திருத்தாட்குக்
குவளைக் குடலை எடுக்காமல்,
கொழுத்த உடலை எடுத்தேனே''

''தொல்லைக் குடும்பத் துயர்அதனில்
தொலைத்தேன் அந்தோ காலமெல்லாம்;
அல்லல் அகற்றிப் பெரியோரை
அடுத்தும் அறியேன் அரும்பாவி;
செல்வத் தணிகைத் திருமலைவாழ்
தேவா! உன்றன் சந்நிதிக்கு
வில்வக் குடலை எடுக்காமல்,
வீணுக்கு உடலை எடுத்தேனே''

என இராமலிங்க வள்ளற் பெருமான் இரங்கிப் பாடியுள்ள இனிய திருப்பாடல்கள், இங்கு நாம் கருதியுணர்ந்து மகிழ்தற்குரியன.

**சமய சமரச நோக்கம் :**

நமது தமிழகத்தில் தோன்றிய தவஞானச் சான்றோர்களில் தலைசிறந்த ஒருவர் தாயுமானவர். இராமகிருஷ்ணரின் அருளுபதேசங்கள் பலவும், தாயுமானவர் பாடல்களில் அமைந்து கிடத்தலைக் காண்கின்றோம். இராமகிருஷ்ணர் இந்து மதத்தில் மட்டுமின்றி இசுலாமியம், கிறித்தவம், சைவம், வைணவம், சாக்தம் முதலிய பல நெறிகளையும் ஏற்ற பெற்றி போற்றி ஒழுகினார். மதங்கள் தம்முள் ஒன்றோடொன்று மாறுபடுவன அல்ல. எல்லா மதங்களும் முடிவில் ஒன்றாகவே திகழ்கின்றன என்னும் உண்மையினைத் தம் வாழ்க்கையினாலும் போதனையாலும் வலியுறுத்திய பெருமை, இராமகிருஷ்ணருக்கு உரியது.

''வேறுபடு சமயமெலாம்
புகுந்து பார்க்கின்,
விளங்கு பரம்பொருளே
நின்விளையாட்டு அல்லால்,
மாறுபடும் கருத்தில்லை;
முடிவில் மோன
வாரிதியின் நதித்திரள்போல்
வயங்கிற்று அம்மா''

என நம் தமிழகத்துத் தாயுமான சுவாமிகளும், சமய சமரச நோக்கினை வலியுறுத்திப் பாடியிருப்பதைக் காண்கின்றோம்.

''ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத்
தார்களே!''

எனவரும் திருமூலர் திருமந்திரப் பாடலும், இங்கு நாம் இயைபு பற்றி எண்ணி இன்புறுதற்கு ஏற்றதாகும்.

**இரண்டும் மேன்மையே :**

சமய உணர்வும் ஆர்வமும் உடைய மக்கள் சிலர் இல்லறம் சிறந்ததா? துறவறம் சிறந்ததா? என்னும் சர்ச்சை செய்வதுண்டு. ஒரு சிலர் துறவறத்தை உயர்த்தியும், இல்லறத்தைத் தாழ்த்தியும் பேசுவர். இராமகிருஷ்ணர், அம்மை சாரதா தேவியுடன் வாழ்ந்ததனுல் இல்லற நெறியையும்; அவரைத் தம் மனைவியாகக்கருதாமல் அன்னையின் வடிவமாகவே உணர்ந்து போற்றியதனுல் துறவற நெறியையும் உலகுக்கு உணர்த்தியருளினர். எந் நிலையில் நின்ருலும், எக்கோலம் கொண்டாலும், மன்னியசீர் இறைவன்தாள் மறவாமைதான் இன்றியமையாததாகும் என்று உணர்த்திய சிறப்பு, இராமகிருஷ்ணருக்கு உரியது. தாயுமான சுவாமிகளும்,

''சாட்டையிற் பம்பர சாலம் போல்எலாம்
ஆட்டுவான் இறையென அறிந்து நெஞ்சமே
தேட்டமொன் றறஅருட் செயலில் நிற்றியேல்
வீட்டறந் துறவறம் இரண்டும் மேன்மையே''

என்னும் திருப்பாடலில், இல்லறம் துறவறம் என்னும் இரண்டுமே மேன்மையானவைகள்தான் என்று அறிவுறுத்தி இருத்தல், நாம் சிந்தித்துத் தெளிந்து இன்புறுதற்குரியதாகும்.

**மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்:**

சமயவாதிகள் ஒரு சிலர் இவ்வுலகம் இருள் மயமானது, துன்பம் நிறைந்தது, கொடியது, வெறுக்கத் தக்கது என்றெல்லாம் இகழ்ந்து கூறுவது உண்டு. இத்தகைய மருள் நோக்கு (Pessimism) உடையவரல்லர் இராமகிருஷ்ணர். இவ்வுலகம் இழிந்தது என்றும், மனிதர்களாகிய நாம் பாவிகள் என்றும், சிலர் இடைவிடாமல் கூறிக் கொண்டிருப்பதை இராமகிருஷ்ணர் ஏற்றுக் கொள்வதில்லை. இராமகிருஷ்ணர் தெருள் நோக்கு (Optimism) மிக்கவர். இவ்வுலகில் எங்கும் எதிலும் இறையருள் தன்மையைக் காணும் பேறுபெற்றவர். ஆதலின் அவர் இவ்வுலகை இருள்மயமாக அன்றி, எழில் மயமாகக் கண்டார். இவ்வுலகம் கொடியதும் வெறுக்கத் தக்கதும் இழிந்ததும் அன்று; இவ்வுலகில் நாம் செவ்விதின் வாழ்தல் இயலும் என்பது, இராமகிருஷ்ணரின் திருவுள்ளம். இக்கருத்தினையே பெரிதும் ஏற்றுப் போற்றி வலியுறுத்தும் வகையில்,

''மண்ணில் நல்ல வண்ணம்
வாழலாம்; வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு
யாதுமோர் குறைவிலை;
கண்ணில் நல்லஃ துறும்
கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும்
பெருந்தகை இருந்ததே''

எனத் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்திருத்தல், ஒப்பிட்டு நோக்கி மகிழ்ந்து உணர்தற்பாலது. 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்; வைகலும் வாழலாம்; எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை' என வரும் திருமொழிகள், திருஞானசம்பந்தப் பெருமானின் தெருள் நோக்குக் கொள்கையினை, எத்துணை அழுத்தம் திருத்தமாகத் தெரிவிக்கின்றன, காண்மின்கள்!

**கள்ளக் காதற் காரிகை :**

நாம் உலக வாழ்க்கையில் பலதுறைகளில் ஈடுபட்டாலும், இறைவனை மறவாதிருத்தல் வேண்டும். இதனை வலியுறுத்துதற்கு, அவர் ஓர் உவமை கூறுவார். ''கள்ளக் காதலனுடைய காதலி ஒருத்தி தன் வீட்டுக் காரியங்களையெல்லாம் குறைவின்றிச் செய்து வருகின்ருள். ஆனுலும் அவளுடைய மனம்,

தன் கள்ளக் காதலனை மறவாமல் நினைந்து கொண்டிருக்கின்றது. கடவுள் நாட்டத்தில் அத்தகைய மனப்பான்மை வேண்டும்'' என இராமகிருஷ்ணர் அருளிச் செய்வர். இக் கருத்து, வாதவூர் அடிகள் என்னும் மாணிக்கவாசகப் பெருமான், தாம் அரிமர்த்தன பாண்டியன்பால் அமர்ந்து உலகியற் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், தம் மனத்தில் மட்டும் இறைவனை மறவாது நினைவுகூர்ந்து கொண்டு வந்தார்; அவர்தம் தன்மை, கள்ளக் காதலன்பால் அன்பு வைத்துக் கலந்து ஒழுகும் உள்ளத்துக் காரிகை ஒருத்தியின் செயல்போல இருந்தது, எனக் கூறுகின்ற,

''கள்ளக் காதலன் இடத்தன்பு
கலந்துவைத் தொழுகும்
உள்ளக் காரிகை மடந்தைபோல்,
உம்பரைக் காப்பான்
பள்ளக் காரிகை உண்டவன் இடத்து
உள்ளன்பு பதிந்து
கொள்ளக், காவலன்இடைப்புறத்
தொழிலும்உட் கொண்டார்''

எனும் திருவிளையாடற் புராணச் செய்யுளில், பரஞ்சோதி முனிவரால் பாடப் பெற்றிருத்தல், 'பெரிய உள்ளங்கள் ஒரே வகையாகவே நினைக்கும்' (Great minds think alike) என்னும் உண்மைக்கு அரண் செய்கின்றது.

**எல்லாம் இறை செயல் :**

எல்லாம் இறைவன் செயல். நம்மால் ஆகும் செயல் ஒன்றும் இல்லை. இறைவன்தான் நம்மைக் காப்பாற்றுகின்றான். நம்மைக் காப்பாற்றும் பொறுப்பும் கடமையும் அவனுக்கு உண்டு. நம்மால் நம்மைக் காத்துக் கொள்ளுதல் இயலாது என்று கருதுவது ஞானிகளின் இயல்பு. ஆனால் அஞ்ஞானத்தில் உழல்கின்ற நாம், எல்லாம் நம் செயல்தான், நம்மால் முடியாதது ஒன்றில்லை, எதனையும் நாம் செய்து முடித்தல் இயலும் என்றே பெரும்பாலும் எண்ணி வருகின்றோம். அருளாளர்களும் ஞானிகளும் ஒருபோதும் இவ்வாறு எண்ணுவதில்லை. ''என் செயலாவது யாதொன்றுமில்லை எல்லாம் உன் செயலே என்று உணரப்பெற்றேன்'' என்று பட்டினத்தடிகள் பாடுவதுபோல, ஞானிகள் அனைவருமே கருதுவர். இறைவனை வணங்கும்போது நாம் நம் தாளும் தடக்கையும் கூப்புகின்றோம். தாள்களைக் கூப்புவது இனி உன்னைத் தவிர எமக்கு ஒரு போக்கிடமும் புகலிடமும் இல்லை என்பதை உணர்த்தும். தடக்கைகளைக் கூப்புவது, இனி எம்மாற் செய்யத் தக்கது எதுவுமில்லை, எல்லாம் உன் செயலே என்று உணர்த்தும் குறிப்பாகும். நீயே எமக்குப் புகல், எல்லாம் உன் செயலே என்று உணர்ந்து, தன்னைச் சரண் அடைபவர்களையே இறைவன் காத்து அருள் புரிகின்றான். இவ்வுண்மையினை உணர்த்த இராமகிருஷ்ணர் பின்வரும் ஒரு சிறு கதையினை இயம்பியருள்கின்றார் :

''ஒரு சமயம் திருமாலும் திருமகளும் வைகுந்தத்தில் இனிது கலந்து உரையாடி மகிழ்ந்து கொண்டிருந்தனர். அப்போது திருமால் திடீரென்று எழுந்து வெளியே சென்றார். அப்போது திருமகள் அவர் எங்குச் செல்கின்றார் என்று அறிய விரும்பினாள். அதற்குத் திருமால் 'என் பக்தன் ஒருவனைக் காப்பாற்றப் போகிறேன்' என்று சொல்லிச் சென்றார். ஆனால் அவர் ஒரு நொடிப் பொழுதிலேயே திரும்பி வந்துவிட்டார். அது கண்ட திருமகள் 'இவ்வளவு விரைவில் திரும்பி விட்டீர்களே, ஏன்?' என்று கேட்டாள். அதற்குத் திருமால், வண்ணான் ஒருவன் புல்தரையில் விரித்திருந்த வெளுப்புத் துணிகளின் மீது, தன்னை மறந்து மகிழ்ந்திருந்த நிலையில் என் பக்தன் ஒருவன் கால் வைத்து மிதித்து விட்டான். வண்ணான் அப்பக்தனை அடிக்க ஓடினான். அப்பக்தனைக் காப்பாற்றுவது கடமை என்று கருதி நான் புறப்பட்டேன். ஆனால் அப்பக்தனே வண்ணானைத் திருப்பி அடிக்கக் கல் ஒன்றை எடுத்தான். உடனே நான் இனி நமக்கு அங்கு வேலை இல்லை என்று திரும்பி விட்டேன் என்று திருமால் கூறினார்.'' இது

இராமகிருஷ்ணர் கூறிய ஓர் இனிய சிறு கதை. யான் எனது என்னும் செருக்கும், என் செயல் என்னும் முனைப்பும் அற்றொழிந்தால்தான், நமக்கு இறையருளும் ஞானமும் கைகூடும் என்பது இதன் கருத்து.

''வான்கெட்டு மாருதம் மாய்ந்து,
அழல்நீர் மண்கெடினும்
தான்கெட்டல் இன்றிச்
சலிப்பறியாத் தன்மையனுக்கு,
ஊன்கெட்டு உயிர்கெட்டு
உணர்வுகெட்டு என்உள்ளமும்போய்
நான்கெட்டவா பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ''

''கயல்மாண்ட கண்ணிதன் பங்கன்
எனைக் கலந்தாண்டலுமே
அயல்மாண்டு, அருவினைச் சுற்றமும்
மாண்டு, அவனியின்மேல்
மயல்மாண்டு, மற்றுள்ள
வாசகம்மாண்டு, என்னுடைய
செயல்மாண்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ''

எனவரும் திருவாசகப் பாடல்களில், மாணிக்கவாசகர் தமக்கு நான் என்னும் செருக்குணர்வும், என்னுடைய செயல் என்ற முனைப்புணர்வும், இறையருளால் கெட்டு அழிந்தொழிந்த தன்மையினை விதந்தெடுத்துக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

**முடிவுரை :**

இங்ஙனம் எத்தனையோ பல இனிய அருளுபதேசங்கள் இராமகிருஷ்ண மாமுனிவரால் திருவாய் மலர்ந்தருளப்பெற்றுள்ளன. அவைகளுள் ஒவ்வொன்றும் நம் அறிவுக்கு விருந்தாய், ஆருயிர் நலத்திற்கு அமிழ்தமாய்ச் சிறந்து விளங்குகின்றன. அருளாளர்களின் அமிழ்த மொழிகள், வாழ்க்கையாகிய வழுக்கு நிலத்தில் வீழ்ந்து தடுமாறும் நம்மனோர்க்கு வழுக்காமல் நடந்து செல்ல உதவும் ஊன்றுகோல் போலப் பயன்படுவனவாகும். ''இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்'' எனத் திருவள்ளுவர் பெருமான் அருளி செய் திருத்தலும் இவ்வுண்மையைத் தெளிவுறுத்தும். ஆதலின், நாம் நம் இராமகிருஷ்ணரின் தெய்விக வாழ்க்கையினையும், சிறந்த போதனைகளையும் பின்பற்றிக் கடைப்பிடித்தொழுகி,வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத் திருவருள் பெற்று உய்ய முற்படுவோமாக!


## நன்கொடை வேண்டுகோள்

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில், அஷ்டபந்தன சுவர்ண பந்தன மகா கும்பாபிஷேகம் நாளது ஆனந்த வருடம் ஆனித் திங்கள் 12-ம் நாள், 26-6-1974 புதன்கிழமை அன்று நடத்த அறங்காவலர் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இத்திருக்கோயிலில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவை ஒட்டிச் சுமார் ரூ. 7,00,000.00 செலவில் திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மேலும் திருக்குட நன்னீராட்டுவிழா, சுமார் ரூ. **3,00,000** செலவில் அதி விமரிசையாக நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மெய் அன்பர்கள் தாங்களும் தங்களுடைய குடும்பத்தினரும், நண்பர்களும் நன்கொடை வாரி வழங்கி, அனைவரும் அன்னை அங்கயற்கண்ணி ஆலவாய் அண்ணல் அருள்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. நன்கொடைத்தொகைகளை, டிராப்ட், செக், மணியார்டர் மூலம் அனுப்பலாம். நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி:

''நிர்வாக அதிகாரி,
அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில்,
மதுரை.''

ஒம்./-என்.எஸ். இராமச்சந்திரன்,
நிர்வாக அதிகாரி.

முற்றொடர்ச்சி

# அம்பிகையின் அழகு வெள்ளம்

(சவுந்தரிய லகரி)

## (15) கயிலைக் கடவுள் வாழ்வு :

கயிலை மலையில் எழுந்தருளியிருக்கின்ற கடவுள் சிவபெருமான். அச்சிவபெருமானுக்குச் செல்வ மனைவியாகத் திகழ்பவள் அம்பிகை. அவளுடைய திருவுருவமானது மழைக்காலத்தில் விளங்குகின்ற மதியம் போன்றுளது. அவளுடைய சடையானது வளைந்த பிறையை அணிந்திருப்பது. அவள் தன் நான்கு கைகளிலும் முறையே அபய முத்திரையும், வரதமுத்திரையும், படிக மாலையும், புத்தகமும் ஏந்தியிருக்கின்றாள். இத்தகைய நிலையில், அம்பிகை கலைமகளாக விளங்குகின்றாள். அவளை மனத்தினால் நினைக்கவும், வாக்கினால் வழுத்தவும், மெய்யினால் வணங்கவும் வேண்டும். அவ்வாறு நினைத்து வழுத்தி வணங்குபவர்கள், தேனும்பாலும் பழமும் கலந்தாற்போன்று சுவைமிகுந்த கவிதைகளைப் பொழியும் நாவலர் ஆவர்! ஏனையோர் அவ்வாற்றலைப் பெற மாட்டார்கள்.

உனதுசரற் காலமதி அனைய மெய்யும்,
உடல்குழைத்த பிறைச்சடையும், கரங்கள் நான்கும்
அனவரதம் உறும் அபய வரத ஞான
அருட்பளிங்கு வடமொடு புத்தகமும் ஆக
நினைகிலர், முன்வழுத்திலர், பின்வணங்கார், எங்ஙன்
நிறைத்தபசுந் தேனும், அடு பாலும், தூய
கனியுமென மதுரம்விளைந்து ஒழுகு பாடல்
கவிதைபொழிவது? கயிலைக் கடவுள் வாழ்வே!

ஒரு பெண் தன் கணவனுக்குச் சிறப்பைத் தேடித் தருபவளாகவும், அவன் விரும்பி மகிழ்ந்து போற்றிப் பாராட்டத் தக்கவளாகவும் விளங்குதல் வேண்டும். ஆதலின், ''கயிலைக் கடவுள் வாழ்வே'' எனச் சிறப்பித்தார். மழைக் காலத்தில் தோன்றும் மதியமானது மாசுமறுவற்று, வெண்மையும் தண்மையும் ஒண்மையும் வாய்ந்து அழகியதாக விளங்கும். ஆதலின் அம்பிகையின் திருவுருவைச் ''சரற்கால மதியனைய மெய்'' என்றார். சரற்காலம்-மழைக்காலம். சிவபெருமானைப்போல இறைவியும் தவக்கோலம் உடையவளாகத் திகழ்தலாலும், கணவனுக்குரியன மனைவிக்கும் உரியனவாதலாலும், அம்பிகையைப் 'பிறைச் சடை' உடையவளாகக் குறிப்பிட்டார். பிறையானது, தன் இரு கோடுகளும் உயர்ந்து, நடுவில் வளைந்து இருக்குமாதலின் 'உடல் குழைத்த பிறை' என்றார். குழைத்த-வளைந்த. அம்பிகை நான்கு திருக்கைகளுடன் முறையே வலக்கைகள் இரண்டில் அபயமுத்திரையும், படிகமாலையும், இடக்கைகள் இரண்டில் வரதமுத்திரையும், புத்தகமும் ஏந்தியிருக்கும் சாத்விக நிலை, 'வாக்பாவ கூடம்' எனப்படும். இந்நிலையில் அம்பிகை கிரியா சக்தியாகத் திகழ்கின்றாள். இங்ஙனம் அவளை வழிபடுவோர் சிறந்த கவிதை நாவலராக ஆகும் பேறு பெறுவர். வழிபடும் முறை இது என்பார், நினைத்தல் வழுத்தல் வணங்குதல் என, முறையே நிகழும் மன மொழி மெய் என்பவற்றின் செயல்களைக் குறிப்பிட்டார். கவிதையின் சுவையினை, ''நிறைத்த பசுந்தேனும், அடுபாலும், தூய கனியும் என மதுரம் விளைந்து ஒழுகு பாடற் கவிதை'' என விதந்தார். கவிதை என்பது இத்தகைய சுவை மிக்கதாகத் திகழ்தல் வேண்டும் என்பது கருத்து. கவிதை ஆற்றல் பெற விரும்புவோர், அம்பிகையை வழிபடுவதற்குரிய முறை இதனால் கூறப்பட்டது. இது 'வாக்குச் சித்தி தந்திரம்' என வழங்கப் பெறும்.

## (16) தவள நிற வாணி :

அம்பிகை ஒளிமிகுந்த திருவுருவை உடையவள். அவளது திருவுருவின் பேரொளியானது, இளஞாயிறுகிய உதய சூரியனின் ஒளியைப் போன்றுளது. அவளது தனங்கள், கச்சு அணிந்து மலைபோல விளங்குகின்றன. அவள் சிவந்த நிறம் உடையவளாக அழகுமிக்குத் திகழ்கின்றாள். கவிஞர்களின் மனமாகிய தாமரைக்காடு

மலரும்படி, அவள் எழுந்தருளுவாள். இந் நிலை, அம்பிகையின் இராசத நிலையாகும். இராசத குணத்துக்குரிய நிறம் சிவப்பு. ஆதலின் அவள் செந்நிறம் உடைய அருணை என்னும் தேவியாக, இச்சா சக்தியாக வழங்கப்படுவள். அதுபோது, காமராஜ கூடத்தில் எழுந்தருளி வீற்றிருப்பள். இவ் வாறு அவளைத் தியானித்து வழிபடுவோர், சிருங்காரம் என்னும் காதற்சுவை மிக்க கவிதைகளை மிகுதியாகப் பொழிய வல்லவ ராவர். அவர்கள் பாடும் பேரின்பக் காதற் சுவை முதிர்ந்த, அமிழ்தம் போன்ற கவிதை வெள்ளம், உலக மக்களையெல்லாம் மகிழ் விக்கும் மாட்சிமை பெற்று விளங்கும்.

வார்இன்ப முலைமலை மடந்தை! கவி நாவலர்
மனக்கமல வனம்அலர நீள்
தேர்இன்ப இளவெயில் தழைக்கும் ப்ரபை
செய்ய
செவ்விநிறம் உணரும் உரவோர்,
தார்இன்ப நறவொழுகு சுருள்ஓதி இருள்விரவு
தவளநிற வாணி! கலைதேர்
பேரின்ப மதுரஅலை எறிஅமுத கவிதைகொடு
பேருலகை மகிழ்விப்பரே

அம்பிகையின் திருவுருவச் சிறப்பினைத் ''தேரின்ப இளவெயில் தழைக்கும் பிரபைச் செய்ய செவ்வி நிறம்'' எனப் புகழ்ந்து, ''வாரின்ப முலைமலை மடந்தை'' என்று அம்பிகையைத் துதித்தார். பிரபை-ஒளி. செவ்வி-பக்குவம். வார்-கச்சு. மடந்தை-இளமை மிகுந்தவள். தன்னை வழிபடும் அடியவர்களுக்குக் கவிதையாற் றல் பெருகுமாறு அளிக்கும் நிலையில், அம் பிகை கலைமகளாக விளங்குகின்றாள் ஆத லின், ''தார் இன்ப நறவு ஒழுகு, சுருள் ஓதி இருள்விரவு, தவள நிற வாணி'' என்றார். தார்-மாலை. நறவு-தேன். ஓதி-கூந்தல். கூந்தலானது சுருண்டு கறுத்து இருத்தல் சிறப்புடையதாதலின் 'சுருள் ஓதி இருள்' எனப்பட்டது.

கலைமகளின் நிறம் வெண்மையாதலின் 'தவளநிறவாணி' என்றார். தவளம்-வெண்மை. வாணி-கலைமகள். அறிவும் அநுபவமும் சுவையும் பயனும் நிறைந்த தாகத் திகழ்தற்குரியதாதலின் 'முது கவிதை' என விதந்து ஓதினர். இத்தகைய கவிநாவலரின் சிறந்த கவிதைகளால், உலக மக்களெல்லாம் புகழ்ந்து இன்புறு வர் ஆதலின், ''கவிநாவலர் கலைதேர்முது கவிதைகொடு, பேருரவோர் மகிழ்விப்பர்'' என்றார். உரவோர்-அறிவாற்றல் மிக்கவர் கள்.



இப்பாடல், இன்பச்சுவை பொதுளும் கவிதை பாட விரும்புவோர், அம்பிகையைச் செந்நிறம் உடையவளாகவும், வரதம் அபயம் புத்தகம் படிகமாலை என்னும் இவற்றை ஏந்திய நான்கு கைகளையுடைய வளாகவும் தியானித்தல் வேண்டும் எனக் கூறுகின்றது. இதற்குக் 'காமராஜகூட தந்திரம்' என்பது பெயர்.

## (17) தேவியின் அருணநிற வடிவம் :

மலையரையன் பெற்ற மங்கையாகிய் அம்பிகை, சிவந்த (அருண) நிறத்துடன் திகழ்கின்றாள். வசனி காமேசுவரி மோகினி விமலை அருணை சயினி சர்வேசுவரி கவுளினி என்னும் மடந்தையர் எண்மர், அம்பிகை யைச் சூழ்ந்திருக்கின்றனர். தேவியைப் போல அவர்களும் தம்முடைய நான்கு கைகளிலும், அபயம் வரதம் படிகமாலை புத்தகம் ஆகியவற்றை ஏந்தியுள்ளனர். இவ் வெண்மரையும் முக்கோணத்தைச் சூழ்ந்த எண்கோணங்களில் இருக்கின்றவர் களாகத் தியானித்தல் வேண்டும். இந்நிலை 'சக்திகூட தந்திரம்' என வழங்கப்பெறும். இம்முறையில் அம்பிகையை முறைப்படி தியானிப்பவர்கள், சிறந்த காவியங்களைச் செய்தற்குரிய அரிய கவித் திறத்தைப் பெறுவார்கள்.

இந்து சிலையைப் பிளந்து உள்நிறம் வகுத்தனைய
எழில்வசினி ஆதி மடவார்,
அந்தஇணை நால்வர் புடைசூழ, மலைமங்கை
தனது
அருணவடிவு உணர அறிவோர்,
கொந்தவிழ விரிதவள மலர்மங்கை முககமல
கோல பரிமள கவிதையால்,
செந்தமிழின் வடகலையின் முதுமொழிக்
காவியத்
தெளிபாடல் செய்யும் அவரே!

வசனி முதலிய மடந்தையர் எண்மரும் வெண்மை நிறம் உடையவர்கள் ஆதலின், அவர்களை ''இந்து சிலையைப் பிளந்து, உள்

நிறம் வகுத்தனைய, எழில் வசனியாதி மட வார்'' என்றார். அவர்கள் எண்மர் என வரையறுத்துக் குறிப்பிடுதற் பொருட்டு, ''அந்த இணை நால்வர்'' என்றார். உணர் தல் தியானித்தல். தியானிக்கும் முறை அறிந்து தியானிக்க வேண்டுமாதலின் ''உணர அறிவோர்'' என்றார். கலைமகளைக் ''கொத்து அவிழ விரி தவள மலர் மங்கை'' எனப் புகழ்ந்தார். கொந்து-கொத்து. தவளமலர்-வெண்தாமரை மலர். கவிதைக் கலையின் சிறப்பை வியந்து, அதைக் கலை மகளின் முகத்தில் இருப்பதாகவும், அழ கும் மணமும் உடையதாகவும் குறிப்பிட்டு ''முககமல கோல பரிமள கவிதை'' எனப் புகழ்ந்தார். பரிமளம்-நறுமணம். கோலம் -அழகு.

தேவியையும் வசனி முதல் எண்மரை யும், பாசம் அங்குசம் கரும்புவில் பூங்கணை வரதம் அபயம் புத்தகம் படிகமாலை என்ப வற்றோடு கூடிய எட்டுக் கைகளுடன் தியானிக்க வேண்டுமென்றும் சில நூல்கள் கூறும். இப்பாடல், காவியங்கள் இயற்று தற்கு விரும்புவோர் தேவியின் திருவுரு வைத் தியானிக்கும் முறையைக் கூறியது.

## (18) மலையரையன் உதவும் மயில் :

அம்பிகையின் திருவுருவ நிறம், இளம் சூரியனது வெயிலின் ஒளியைப் போன்றது. அவ்வொளியில் மூவுலகங்களும் மூழ்கித் திளைக்கின்றது. அத்தகைய தேவியின் திரு வுருவத்தை முறைப்படி நினைந்து தியானிப் பவர்கள், ஊர்வசி முதலிய தெய்வப் பெண்களாலும் விரும்பப்படும் சிறப்பைப் பெறுவர்.

உனதுநிறம் எனும்இளைய கதிர்இரவி
வெயில்முழுகும் உலகடைய என நினைகு வோர்,
விணைெழுமு கொலைமறலி அனையவிழி
உருவசிமுன் விரவும்அரமகளிர் விழைவோர்;
அனவரதம் எனதமுது பொழிகவியும்,
உனதருளும், எனதுடலும், உயிரும், உயிர் சூழ்
மனமும், அதில் உணர்வும் வருகளியும் என
நினைவுருக, மலையரையன் உதவும் மயிலே!

இப்பாடல் தேவியைத் தியானிப்பத னால் அடையக்கூடிய பயனைக் கூறுகின்றது. தேவியைத் தியானிப்பவர்கள் தெய்வ மகளிராலும் விரும்பப்படுவர். எனவே அவர்களை மானிட மகளிர் விரும்புதல், தானே பெறப்படும். இதற்குச் 'சமரிட தந்திரம்' என்று பெயர். மூவுலகங்களும் தேவியின் அழகிய நிறமாகிய காந்த சக்திக் குக் கட்டுப்பட்டு உள்ளன. மூவுலகங் களின் உள்ளும் புறம்பும் தேவியின் திரு வளுள் ஒளி நிரம்பித் திகழ்கின்றது. அவ ளுடைய அழகிய செந்நிறம், உலகெங்க ணும் பரவி விரவி நிறைந்திருக்கின்றது. இத்தகைய தேவியின் நினைவு, அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயம் என்னும் ஐந்து கோசங் களால் இயன்ற நம் உடலின்கண் ஊடுருவச் செய்வோமாயின், நாம் பெற இயலாத பேறு ஒன்றுமில்லை. ஆதலின் தேவியின் நினைவினால் நாம் பரவசப்பட்டு, அவளை இடையறாது நினைந்து தியானித்து வருதல் வேண்டும்.

நூலாசிரியர் தம்முடைய தியான அனு பவ அருள்நிலையினை ''என்னுடைய அமுதம் பொழிகின்ற கவிதைகளும், அவற்றின் பொருளாகிய உனது அருளும், எனது உடலும், உடலுட் பொருந்திய உயிரும், உயிர் சூழ்ந்த மனமும், மனத்துடன் கூடிய அறிவும், அறிவுடன் கலந்த மகிழ்ச்சியும் ஆகிய இவை, ஒன்றினுடன் ஒன்றி எப்படிக் கலந்திருக்கின்றனவோ, அப்படி நின் தியானத்தால் என் நினைவு பரவசப்பட்டு எப்போதும் உருகுகின்றேன்'' என்னும் கருத்தமைய, ''அனவரதம் எனது அமுது மொழி கவியும், உனது அருளும்; எனது உடலும் உயிரும்; உயிர் சூழ்மனமும், அதில் உணர்வும் வரு களியும் என நினைவு உருக மலையரையன் உதவும் மயிலே'' எனக் குறிப்பிட்டருள்கின்றார். இது மகளிர் வசியம் வேண்டினோர் தியானிக்கும் இயல்பு கூறியது.

## (19) தேவியைத் தியானிக்கும் முறை :

அம்பிகையை வழிபடும் முறைகள், அன் பர்களின் விருப்பத்திற்கும் தகுதிக்கும் ஏற்பப் பலவகைகளில் அமையும். 'மன்மத கலாப் பிரயோகம்' என்பது ஒருவகைத் தியானம். அத்தியானத்தை முறைப்படி செய்பவர், மன்மதனைப் போன்று அழகிய

திருவுருவையும், தேவ மகளிரும் காதலித்து விரும்பத் தகுந்த சிறப்பையும் பெறுவர். ஒரு பெண்ணினுடைய முகத்தை எப்பொருளுக்கும் முதலாய் இருக்கின்ற விந்துவாகவும், அதன்கீழ்ப் பொருந்திய இரு நகில்களை அவ்விந்துவின் இரு வடிவமாகவும், அவற்றின் அருகே தாழ்ந்து குற்றமற்றுச் சுடர்விட்டு ஒளிரும் மறைவிடத்தை முக்கோணமாகவும் பாவித்து, அம் மூன்று இடங்களிலும் மன்மத கலைக்குரிய ''க்லீம்' என்னும் மந்திர விதையெழுத்தை வைத்து நினைப்பவர்கள் யாரோ, அவர்கள் பிறர் எவரையும் தம் வயப்படுத்திக் கொள்ளும் பேராற்றலை எளிதில் பெறுவர். உலகமே அவர்கள் வயப்பட்டு, அவர்களின் ஆணைக் குட்பட்டு நிகழும்.

ஆதி விந்துவை முகம்என, இணைமுலை
கீழ்இரண்டு அதன்வடிவுஎன, அருகுதாழ்
கோதறும் சுடர்எழ அழகுஒழுகும் த்ரிகோணம்
ஒன்றுஎன, உனதுஎழில் இரதிதோய்
காதலன்கலை தமதிடம் நினைப்பவர்,
காணும் மங்கையர் கலைகொளல் அரியதோ?
ஓதில், இங்கு இருசுடர் முலைஅனைய
உலக மங்கையை மயல்செய்வர்;
கமலையே!

விந்து என்னும் சுத்த மாயையினின்றே எல்லாப் பொருள்களும் தோன்றுமாதலின் அதனை 'ஆதிவிந்து' என்று சிறப்பித்தார். மறைவிடத்தினை எளிதாகக் கருதி இகழலாகாது என்பார் ''கோதுஅறும் சுடர் எழ அழகு ஒழுகு திரிகோணம்'' என்றார். தேவியின் திருவருளாலேயே அழகிய வடிவம் வாய்க்கப் பெற்றவன் ஆதலானும், இரதி தேவிக்குக் கணவனாய் அவள் தழுவி மகிழும் சிறப்பைப் பெற்றவன் ஆதலானும், மன்மதனை, ''உனது எழில் இரதி தோய் காதலன்'' என்றார். இப்பாடலில் கூறப்பெறுவது மன்மத கலாப் பிரயோகம் என்பது ஆதலின், அதனை ''எழில் இரதி தோய் காதலன் கலை'' என்று விதந்து உரைத்தார்.


இத் தியானத்தை முறைப்படி புரிவோர் தேவமகளிரும் தம்மை விரும்பிக் காதலிக்கும் பேற்றை எளிதிற் பெறுவார் என்பார், ''நினைப்பவர் மங்கையர் கலை கொளல் அரியதோ?'' என்றார். உலகம் முழுவதுமே அவர்களை வியந்து நயந்து நிற்கும் என்பார் ''உலக மங்கையை மயல் செய்வர்'' என்றார். உலகத்தினை மங்கை என உருவகம் செய்ததனால், சூரிய சந்திரர்கள் ஆகிய இரு சுடர்களையும் அதற்கேற்பக் கொங்கைகளாகக் கூறினார். அன்பர்களின் மனமாகிய கமலத்தில் எழுந்தருளி விளங்குபவள் ஆதலின், அம்பிகையைக் 'கமலை' எனப் புகழ்ந்தார். (19)

## (20) கருட பாவனைத் தியானம் :

உலகில் ஆற்றல் மிக்க பொருள்கள் பல உள. மின் ஆற்றலையும், அணுவாற்றலையும் இதுபோது நாம் நன்கு அறிவோம். ஒருவகையில் இவற்றினும் மிக்கது மனவாற்றல், அதனினும் மிக்கது, மனத்தை ஒருமுகப்படுத்திக் கணிக்கும் மந்திரங்களின் ஆற்றல் என்பர் பெரியோர். அத்தகைய ஆற்றல் மிக்க மந்திர கலைகளில் வல்லவர்கள், கருடபாவனைத் தியானம் செய்து பயின்று பழகி, அம்மந்திர ஆற்றலாற் பாம்பு கடித்ததனால் ஏற்படும் நஞ்சு முதலிய தொல்லைகளைத் தீர்ப்பர். இத்தகைய மந்திர சித்தி பெற்றவர்கள் தாம் இருந்த இடத்தில் இருந்துகொண்டே, நெடுந்தூரத்தில் பாம்பு கடித்து நஞ்சு ஏறி இறக்கும் நிலையில் உள்ளவர்கள் உயிர்த்தெழச் செய்து வருதலை, நாம் பலகாலும் கண்டும் கேட்டும் வருகின்றோம். இத்தகைய நிகழ்ச்சிகளால் மந்திரங்களுக்கு ஆற்றல் உண்டு என்பது தெளிவாகப் புலனாகின்றது. எல்லா நாடுகளிலும் சமயங்களிலும் மொழிகளிலும் இத்தகைய மந்திரங்கள் உள்ளன எனத் தெரிகின்றது.

இப்பாடலில், கொடிய பாம்புகளின் நஞ்சினைத் தீர்க்கவல்ல கருட பாவனைத் தியானம் என்பது, சுட்டப்பெறுகின்றது. ஆதி பவுதிக கருடன், ஆதி தைவிக கருடன், ஆதி ஆன்மிக கருடன் என்று கருடன் மூன்று வகைப்படும். இவ்வாறு பொருள்தோறும் மூவகை உண்டு. இவற்றுள் உலகத்திற் காணப்படும் கருடன் ஆதி பவுதிக கருடன். இதற்கு அதி தெய்வமாய் மாந்திரிகனின் மனத்தில் அது போல வைத்துக் கருதிச் செய்து காணப்படும் மந்திரம், ஆதி தைவிக கருடன், அம்மந்திரத்தின் இடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன்கொடுப்பதாகிய சிவசக்தி, ஆதி ஆன்மிக கருடன் எனப்படும்.

பாம்பு கடித்த நஞ்சின் கொடுமையைத் தீர்க்கலுறுவோர், பாம்புக்குப் பகையாகிய கருடனுக்குரிய மந்திரத்தைக் கணித்தல் வேண்டும். அம் மந்திரமே, ஈண்டு ஆதி தைவிக கருடன் எனப்பட்டது. அக்கருடனை நாள்தோறும் மனத்தில் பாவனை செய்து பழகிப் பெற்ற பயிற்சியின் வலிமையால், மாந்திரிகன் அக் கருடனுக்குரிய ஆற்றலைப் பெறுவான். அங்ஙனம் இம் மந்திர சத்தி பெற்ற மாந்திரிகன், மந்திரக் கண் கொண்டு பாம்பு கடியுண்டவனை உற்றுநோக்கின், கருடனின் முன்னிலையில் பாம்பு மாய்ந்தொழிதல் போல, பாம்பு கடியுண்டவன் நஞ்சு தீர்ந்து நலம்பெற்று உயிர்த்து எழுவான்.



ஆடல் அம்பிகை இமகர சிலைவடிவு
ஆளும் நெஞ்சினுள் வழிவுறு கிரணம், மேல்
ஓடி எங்கணும் உடல்பெருகு அமிழ்தென
ஊடெழும் ப்ரபை தமதிடம் உணர்குவோர்,
நாடவும் கொடுவிடம் ஒரு கலுழனை
நாடும் வெங்கொலை அரவென முறியும்; மேல்
மூடு அருஞ்சுரம் விழிபொழி அமுதினின்
மூழ்க, என்பொடு அழல் உடல் குளிருமே.

இப்பாடல் 'காருடப் பிரயோகம்' என்னும் மந்திர தியானம்பற்றி இனிது விளக்குகின்றது. அம்பிகை ஆனந்த நிருத்தம் செய்பவள். அவளது வடிவம் சந்திர காந்தக் கல் போன்று, தண்மையும் வெண்மையும் உடையது. அத்தகைய அம்பிகையின் எழில் வடிவையும் ஒளிச் சிறப்பினையும் ஒருநெறிய மனம்கொண்டு நினைந்து தியானிப்பவர்கள், எல்லா வகையான ஆற்றல்களையும் பெறுவர். அவர்களின் பார்வையினால், கருடனைக் கண்ட அரவுபோலக் கொடுமை மிக்க நஞ்சும் முறிந்துபோம். அவர்களின் அருளமுதப் பார்வையினால் கொடிய வெப்புநோயும் எளிதில் விரைவில் தணிந்து, நீங்கி நலம்பெறும்.

உலகுயிர்கள் எல்லாம் உய்தற்பொருட்டு, அம்பிகை மகிழ்ந்து ஆடல் புரிவாள். ஆதலின் ''ஆடல் அம்பிகை'' என்று புகழ்ந்தார். அம்பிகையின் வடிவம் குளிர்ச்சித் தன்மையும் ஒளிச்சிறப்பும் வாய்ந்ததாதலின், அதனை ''இமகர சிலைவடிவு'' என்றார். இமகரசிலை-சந்திரகாந்தக்கல். அவ்வடிவத்தினை நினைந்து தியானிக்கும் நெஞ்சினை 'வடிவு ஆளும் நெஞ்சு' என்றார். அவ்வாறு தியானிப்போர்க்கு அம்பிகையின் அருட்கதிர்களாகிய அமுதவெள்ளம், அவர்தம் உடலுறுப்புக்களிலெல்லாம் பரவிப் பெருகிநிற்க, அவர்கள் அருள்மயமாகத் திகழ்வர். ஆதலின், அவர்களை ''வழிவுறு கிரணம் மேல் ஓடி எங்கணும், உடல்பெருகு அமிழ்து என ஊடு எழும் பிரபை, தமது இடம் உணர்குவோர்'' என்று சிறப்பித்தார். பிரபை-ஒளி. கிரணம்-கதிர்.

இவ்வாறு அம்பிகையை ஒருநெறிய மனத்தால் தியானித்து அருள்மயமாகப் பெற்றவர்கள், பிறர் அடையும் சுர நோயையும், விடநோய்களையும் தீர்க்க வல்லவராவர். பிறர்க்குத் தீர்ப்பர் எனவே அவர்களை இத்தகைய நோய்கள் சிறிதும் அணுகா என்பது வெளிப்படை. கலுழன்-கருடன். அரவு-பாம்பு. முறியும்-தீர்ந்து போகும். அழல்-நெருப்புப் போலும் வெப்புநோய். குளிரும்-தணியும்.

(தொடரும்)

—ஆசிரியர்.

# சபரிமலை தரிசனம்

கவிஞர் திரு கு. செ. இராமசாமி, M. A.,
மன்னர் நினைவுக் கல்லூரி, சிவகங்கை.

(காப்பு)

அபயம் அடைவோரின் தடைநீக்கி
ஆவல் நிறைவேற அருள்வோனே!
செபமும் தவவாழ்வும் உடையோரைச்
சேரும் கணநாதப் பெருமானே!
உபய பதம்சூடும் அடியார்க்கே
உயிரின் உயிரான இறையோனும்
சபரி கிரிராசன் புகழ்பாடச்
சந்தத் தமிழ்வாக்குத் தருவாயே!

---

(குருவணக்கம்)

காணும் பொருளும் நீ;
காட்டுபவன் நீ; உனது
மாணவனை ஆசானே
வாழ்த்திடுவாய்!—பேணி
மொழித்துணையாய் வந்த
முதல்வா, நீ இன்று
வழித்துணையாய் என்னோடு வா.

---

*அரிஅர சுதனென உமையவள் மகனென
அடியவர் பரவிடும் இறையவனே!
கருவென, உயிரென, கதியென, விதியெனக்
கருணைகள் பலபல தருபவனே!
திருமுக தரிசனம் பெறவரும் அடியவர்
பவவினை பொடிபட அருள்பவனே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (1)

இருமுடி தலையினில், திருவடி மனதினில்,
இதயங்கள் யாவும்உன் ஆலயத்தில்-
சரண(ம்) மொழிந்திடும் அடியவர் குரல்ஒலி
எதிரொலி செய்திடும் வான்வெளியில்-
திருவளர் நெடுமலை வலமுற வருகையில்
சிந்தை குவிந்திடும் சேவடியில்-
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (2)

கொலைபுரி களிறுகள் கரடிகள் எருமை(கள்)
குரங்குகள் உலவிடும் நெடியமலை!
புலியொடு விடமிகும் அரவுகள் அரணைகள்
புதர்தொறும் எதிருறும் கடியமலை!
செலவரி தெனினும்உன் அடியவர் இடர்
கெடச்
செழுமை தரும்மலை சபரிமலை!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (3)

காந்த மலை; மணி கண்டன் மலை; மனக்
கவலை அனைத்தும் களைந்தமலை!
சாந்த மலை; சிவ சக்தி மலை; அருள்
சந்நதம் கொண்டு வளர்ந்தமலை!
சேர்ந்து படிந்த உயிர்த்தொகை யாவும்
சிறந்த நிலைபெறும் சபரிமலை!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (4)

எழுதிய படமென அறிவில் இலங்க
இசைந்தனை ஆயினும் தவமிருந்தோம்!
மெழுகென உருகிய மனதொடும் அடியவர்
வெற்பிடை ஏறி நடந்துவந்தோம்!
செழுமை நிரம்பிய சிகரம் அடைந்துனைச்
சிந்தை மயங்க வணங்குகிறோம்!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (5)

கார்த்திகை மாலை கழுத்தினில் ஆடக்
கலந்த மனத்தொடு பாடுகிறோம்!
கோத்தகை யோடு குனிந்து நிமிர்ந்துனைக்
கூவிய நாவுடன் ஆடுகிறோம்!
சீர்த்தி நலங்கள் செறிந்து நிறைந்தஉன்
தெரிசன வேட்கையில் வாடுகிறோம்!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (6)

ஞான வெளிச்சுடர் வானில் பிறந்திடும்
நாளை நினைந்து நடந்திடுவோம்!
யானை சிறுத்தைகள் பாதை மறிக்கையில்
ஐயன் பெயர்கள் முழங்கிடுவோம்!
தேனில் விழுந்து திளைத்திடும் ஈயெனத்
தெய்வ நலத்தில் மகிழ்ந்திடுவோம்!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (7)

---

† "அயிகிரி நந்தினி நந்தித மேதினி
விஸ்வ விநோதினி நந்தநுதே" என்னும்
ஸ்ரீமகிஷாசுரமர்த்தினி திருப்பாடலுக்குரியஇசை.

கொல்ல வரும்புலி உன்பெயர் சொல்லக்
குனிந்து வணங்கி நகர்ந்துசெலும்!
அல்லல் தரும்பரல் கல்லொடு முள்வகை
அழகிய பஞ்சணை ஆகிவிடும்!
சில்லென வீசிய வாடையும் தூறலும்
தென்றல்பன் னீரென மாறிவரும்!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (8)

உலகு நலம்பெற அடவி மலைத்தொடர்
உச்சியில் ஏறி அமர்ந்தவனே!
நிலவு முகத்தினர் உறவை மறந்து
நிலைத்த தவத்தில் நிறைந்தவனே!
சிலையை நிகர்த்துத் தவப்பொலி வால் இருள்
தீர ஒளிர்ந்து திகழ்பவனே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (9)

ஐந்து தலத்தில் அமர்ந்தவ னே!படி
ஆறொடு மூன்று கடந்தவனே!
பந்தள மன்னன் குமாரன் எனப்புலிப்
பாலொடு வந்த பராபரனே!
சிந்துர வண்ணன் சிதம்பர தேசிகன்
சேயென நின்ற கணதிபனே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (10)

பூரணி காதலன் புஷ்கலை நாயகன்
பொரவரும் அசுரர் குலாந்தகனே!
நாரணி வாணி மனோன்மணி மைந்தன்
நராதிபன் ஞான மனோலயனே!
தேரொடு யானைகள் நால்வகைச் சேனைகள்
செருவில் நடத்தும் மகாரதனே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (11)

அம்பிகை பாலன் அருந்தவ சீலன்
அடைக்கலம் நல்கிய காவலனே!
பம்பையில் வாசன் பதம்தரும் ஈசன்
பணமுடி சூடிய நாயகனே!
செம்பொனின் ரூபன் செருப்பவர் காலன்
சிவன்மகன் வெம்புலி வாகனனே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (12)

படிபதி னெட்டிலும் முடிதொட நெஞ்சினில்
பரவச வெள்ளம் பரந்ததுவே!
அடிமை சுமந்து நடந்த முடிச்சுகள்
ஐயன் பதத்தில் அவிழ்ந்தனவே!
செடி,கொடி,பறவை, விலங்கும் வணங்குமுன்
தேசினில் சிந்தை கலந்ததுவே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (13)

நித்திய நிர்க்குண நிர்மத நிர்மல
நிஷ்கல நிர்ப்பவ வித்தகனே!
சத்திய சற்குண ஷண்மத சாத்திக
சகல சராசர தத்துவனே!
சித்தில் அசித்தில் சிவத்தில் அவத்தில்
செறிந்து பிரிந்திடும் உத்தமனே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (14)

நெகிழ்ந்து நெகிழ்ந்து நினைந்து நினைந்து
நிரம்பிய நெஞ்சு ததும்பியதே!
உகந்து மகிழ்ந்து மொழிந்த இலக்கினில்
உள்ளம் இணைந்து கலந்ததுவே!
திகழ்ந்து விளங்கு திருச்சபை நாயகன்
திருவருள் எங்கும் மலர்ந்ததுவே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (15)

இனியொரு பகையிலை துயரிலை மூப்பிலை
ஏக்கமும் தேக்கமும் வாழ்விலி(ல்)லை!
தனியொரு துணையென அருகினில் நீவரச்
சத்தியம் சத்தியம் தோல்வியி(ல்)லை!
தினமும்எம் அறிவும்உ டம்பும் செழித்திடும்
தீவினை நோய்நொடி ஏதுமி(ல்)லை!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா (16)

கிங்கிணி தண்டை சிலம்பொடு பட்டம்
கிரீடம் அணிந்தவன் வாழியவே!
மங்கல அந்தணன் மஹிஷி குலாந்தகன்
மகர விளக்கினன் வாழியவே!
தெங்கு நிரம்பி வழிந்திடும் நெய்யினில்
சிந்தை குளிர்ந்தவன் வாழியவே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (17)

இருவினை பொடிபட எமதிடர் விலகிட
அருளிய பதமலர் வாழியவே!
ஒருமுறை இருமுறை பலமுறை வழிபட
உதவிய கருணையும் வாழியவே!
திருமலி நெடுமலை, தரு,மலர், சுனை,எழில்
எனும்இவை யாவையும் வாழியவே!
ஜெயஜெய ஜெயஜெய சபரி கிரீசா,
திருவடி சரணம் சரணமய்யா! (18)

# பஞ்ச புராணம்

'ஆராய்ச்சிப் பேரறிஞர்'
திரு மு. அருணசலம் அவர்கள், M.A.,
திருச்சிற்றம்பலம்.

ஏழாம் நூற்ருண்டு தொடங்கித் தமிழில் எழுந்த அருட்பாசுரங்கள் பின்னர் ஒழுங்குபடுத்தித் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. சம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்கள்-திருமுறை 1,2,3; அப்பர் பாடிய தேவாரப் பதிகங்கள்4,5,6; சுந்தரர் தேவாரம் 7; மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும், அவர் பாடியதாகக் கருதப்பெறுகிற திருக்கோவையாரும் 8; திருமாளிகைத்தேவர் முதலான ஒன்பது பேர் பாடியவை 9; திருமூலர் அருளிய திருமந்திரம் 10; இறையஞர் திருமுகப் பாசுரம் முதல் நம்பியாண்டார் நம்பியின் பிரபந்தங்கள் முடிய உள்ள 40 பிரபந்தங் களும் 11; சேக்கிழார் பாடிய திருத்தொண் டர்புராணம் 12; இந்தத் தொகுப்புக்கள் திருமுறை எனப் பெயர்பெறும். 11-ஆம் திருமுறை வரையில் நம்பியாண்டார் நம்பி யாலும், 12-ஆம் திருமுறை சேக்கிழார் காலத்திலும் வகுக்கப்பெற்றன. இவற் றுள் திருமுருகாற்றுப்படை, திருமந்திரம், காரைக்காலம்மையார் பாடல்கள் போன் றவை, ஏழாம் நூற்ருண்டுக்கு முன்பு செய்யப் பெற்றிருந்தன.

தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்ற காலம் முதல், அந்தந்தச் சிவாலயங்களில் உரிய தேவாரங்களைப் பாடுவது வழக்கமா யிருந்திருக்கிறது. இப்படிப் பாடுவோருக்கு ஆதரவாகச் சோழ மன்னர்கள் மானியம் அளித்தார்கள். திருமுறைகண்ட சோழ ஞகிய முதல் இராசராசசோழன் (985-1014), தான் எடுப்பித்த தஞ்சை இராச ராசேச்சரத்தில் திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய 48 ஓதுவார்களையும், அவர்களுக்குத் துணையாக உடுக்கை வாசிப்போர் மத்தளம் முழக்குவோர் இருவரையும் ஏற்படுத்தி, இவ்வைம்பது பேருக்கும் நிபந்தங்கள் அளித்திருந்த செய்தியைக் கல்வெட்டால் அறியலாம். அப்படியே திருஆமாத்தூரில் 16 குருடர்கள் நாள்தோறும் திருப்பதிகம் விண்ணப்பம் செய்து நிபந்தம் ஏற்படுத்திய செய்தி அவ்வூர்க் கல்வெட்டில்காணலாம்.



நூற்றுக்கணக்கான திருக்கோயில்களில் தேவாரம் பாடுவதற்குப் பல திட்டங்கள் இருந்தனவென்று கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இராசராசசோழன் ஆட்சிக்கு முன்னரே திருஎறும்பியூர், பழுவூர், திருவாவடுதுறை, திருநல்லம், அநீதுல நல்லூர் முதலான பல தலங் களில் திருப்பதிகம் பாட நிபந்தங்கள் ஏற்படுத்தப் பெற்றிருந்தன. தேவாரம் பாடுவதைக் கல்வெட்டுக்கள் ''திருப் பதியம் விண்ணப்பித்தல்'' என்றே குறிப் பிடுகின்றன.

இனி தேவார காலம் கடந்து திருமுறை வகுப்பு ஏற்பட்டுத் திருத்தொண்டர் புரா ணமும் 12-ஆம் திருமுறை என்ற திருமுறை அடைவு ஏற்பட்ட பிறகு, தேவாரப்பாடல் மட்டுமன்றி, பன்னிருதிருமுறைகளும் திருக்கோயில்களில் பாடப்பெற்று வந்திருக் கின்றன. யாவும் திருப்பதிகம் விண்ணப் பித்தல் என்ற பெயராலேயே நிகழ்ந்திருக் கின்றன.

பன்னிரு திருமுறைகளில் திருமுறைக்கு ஒரு பாடல் வீதம் பாடி வந்தார்கள் போலும். எனினும், 8-ஆம் திருமுறையில் திருவாசகம், திருக்கோவையார் என்ற இரண்டில் ஒவ்வொன்றிற்கு ஒரு பாடல் வீதமும், 9-ஆம் திருமுறையில் திரு விசைப்பா திருப்பல்லாண்டுக்கு ஒவ்வொரு பாடல் வீதமும் பாடிவந்தார்கள் என்றும் யூகிக்க இடமுண்டு.

ஆனல், பின்னர் ஒரு காலத்தில், பன்னிரு திருமுறைப் பாடல்களையும் பாடு வதற்கு அதிககாலம் பிடிக்கிறது என்று கருதி, இவற்றைச் சுருக்கிப்பாடிநேரத்தைக் குறைக்க வேண்டுமென்ற உணர்வு எழுந்தது என்பது தெரிகிறது. இவ்வுணர் வின் விளைவே திருப்பதிகம் விண்ணப்பித் தல் என்பது பஞ்சபுராணம் பாடுதல் என்று மாறியதாகும்.

பஞ்சபுராணம் என்பது தேவாரம் (ஏழு திருமுறைகள்), திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் ஆகிய ஐந்தில் ஒவ்வொரு பாடல் பாடுவது என்று இன்று வழக்காற்றில் உள்ளது. இவ்வழக்கு யார் ஏற்படுத்தினர், எக்காலத்தில், புராணம் என்ற சொல் இங்கு எவ்வாறு பொருந்தும் என்ற விவரம் எதுவும் தெரியவில்லை. ஓதுவார்கள் பெருமான் சந்நிதியில் திருப்பதிகம் ஓதுகிறார்கள்; இந்த மரபை ஒட்டியே ஓதுகிறார்கள், ஆனால் இதற்கு விளக்கம் அவர்களுக்குத் தெரியாது. மிகவும் வயது முதிர்ந்த ஓதுவார்களும் இது மரபு என்று சொல்லுகிறார்களேயன்றி, இதற்கு ஆதாரம் எதுவும் குறிப்பிடுவதில்லை. வேறு யாருக்குமே தெரிவதாயுமில்லை.

பஞ்சபுராணத்துக்கு ஒரு தோற்றுவாயைத் திருக்கோவையாருண்மை என்ற நூலில் காண்கிறோம். இவ்வுண்மை எழுதினர் யாரென்பது விளங்கவில்லை. சுந்தர தேசிகர் என்பவர் எனச் சிலர் கூறக் காண்கிறோம். இக்கூற்றுக்கு ஆதாரம் யாது என்று விளங்கவில்லை. இவ்வுண்மையை 1885-இல் சுவாமிநாத பண்டிதர் எனப் பின்னர் பெயர் வழங்கிய சி. தம்பையா பிள்ளை அச்சிட்டார். ''திருக்கோவையாரின் துறைகளுக்கு ஆகமார்த்தமாகிய குறிப்புப் பொருளைத் திருச்சிற்றம்பலக் கோவையாருண்மை எனப் பெயர் தந்து எழுதி வைத்த அருந்தவக் கொள்கை அறிஞர் பெருமானர் இன்னர் என்பது தெரியவில்லை'' என்பது அவர் குறிப்பு. இவ் அறிஞர் காலமும் அறிதற்கியலவில்லை.

இந்நூலின் தொடக்கத்திலுள்ள ஒரு பகுதி இங்கு ஆராயத்தக்கது. ''சந்தான சாரியார் திருவாக்குக்கள் சாத்திரமாயிருக்கும்; சமயாசாரியார் திருவாக்குக்கள் அதன் அனுபவப் பயனகிய தோத்திரங்களாயிருக்கும். அந்தத் தோத்திரங்களாகிய மெய்ஞ்ஞானத் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் என்னும் இவைகள் சைவத்துக்கும், சிவபூசைக்கும், சிவாலயநித்திய நைமித்திகத்துக்கும், அடியவர் பூசைக்கும், நியமமந்திரங்களாயிருக்கும்'' என்ற பகுதி காண்க. இங்கு இவர் கூறியுள்ள திருமுறைகளே பின்னர்ப் பஞ்சபுராணம் என ஐந்தாதாக வருவதற்குத் தோற்றுவாய் என நாம் கருதலாம். இவர் கூறும் திருவாசகம் திருக்கோவையார் என்ற இரண்டும் எட்டாம் திருமுறை. இவ்விரண்டையும் ஒருவரே பாடியமையால் ஒன்ருகவே கொண்டு எண்ணினல், ஐந்து நூல்கள் கிடைக்கின்றன. சம்பந்தர் பாடல் திருக்கடைக்காப்பு என்றும், அப்பர் பாடல் தேவாரம் என்றும், சுந்தரர் தேவாரம் திருப்பாட்டென்றும் வழங்கின. எனினும் மூவர் பாடலும் தேவாரம் என்ற ஒரே பெயருள் அடங்குகின்றன. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு வெவ்வேறு. திருவிசைப்பா பலர் பாடியிருப்பினும், திருப்பல்லாண்டு பாடியவர் அவருள் ஒருவர் மட்டுமே; மேலும் சைவத்தில் பல்லாண்டு கூறும் நூல் வேறு இல்லாமையாலும், வைணவர் நித்தியானுசந்தானத்தில் பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டு சேர்ந்திருத்தலாலும், இத்திருப்பல்லாண்டும் சைவப்பதிகம் பாடும் நியமத்தில் தனியான இடம் பெறுதற்குரியது என்று நம் முன்னேர் கருதினர் போலும். எனவே திருக்கோவையாருண்மை யாசிரியர் கூறியுள்ள நூல்களைப் பின்வருமாறு எண்ணி ஐந்தாகக் காட்டலாம் :

1. தேவாரம்.
2. திருவாசகம்-திருக்கோவையார்.
3. திருவிசைப்பா.
4. திருப்பல்லாண்டு.
5. திருத்தொண்டர் புராணம்.

இவை ஐந்தாகின்றன. இவ்வகுப்பே பின்னல் வழங்கிய பஞ்சபுராணம். இப்பெயரின் ஈற்றில் வழங்கும் புராணம் என்பதுகூட இவ்வைந்து நூல்களுள் இறுதியிலுள்ளது புராணம் என்று முடிவதால் அப்படியே அமைத்துக் கொள்ளப்பெற்றதென்று நாம் யூகிக்கலாம்.

இனி இவர் கூற்றில் மற்ருெரு பகுதி இங்குக் கருதத்தக்கது. இத்தோத்திரங்கள் ''சைவத்துக்கும் சிவபூசைக்கும் சிவாலய நித்திய நைமித்திகத்துக்கும் அடியவர் பூசைக்கும் நியமமந்திரங்களாயிருக்கும்'' என்று கூறுகிருர். இதன் பொருளாவது, சிவாலயத்தில் சிவாசாரியர் சிவபூசை செய்து முடித்து வேதமந்திரங்களை ஓதுவது போல, இத்தோத்திரங்கள் தமிழில் ஓதத்

தக்க மந்திரங்களாகும் என்பதே; வேத மந்திரங்களை வடமொழியில் வேதியர் ஓதிவர, இத்திருமுறை மந்திரங்களை ஓதுவார்கள் தமிழில் ஓதி வந்தார்கள்.

இந்த நூலில் இவ்வாசிரியர் இவ்வாறு குறிப்பிட்டிருப்பது இன்றுள்ள நடைமுறைக்குப் பொருத்தமாயிருக்கிறது. ஆனல் முன்னிருந்த நடைமுறையை மனத்துட்கொண்டு இவர் இவ்வாறு எழுதினரா, அல்லது இவர் இவ்வாறு எழுதியதே பின்னர் நடைமுறையாக வழக்கத்துக்கு வந்துவிட்டதா என்பது விளங்கவில்லை. அன்றியும், பஞ்சபுராணம் பாடுவது பற்றிய குறிப்பெதுவும் வேறெங்கும் காணப்படவில்லை. சித்தாந்த சாத்திரம் செய்த உமாபதியார் காலம் 14-ஆம் நூற்ருண்டின் தொடக்கம். திருக்கோவையாருண்மை ஆசிரியர் சந்தான குரவர் எனக் குறிப்பிடுவதால், அவர் இதற்குப் பிற்பட்டவராவது தெளிவு. இந்நூல் செய்த காலம் 15—16 நூற்ருண்டு ஆகலாம் எனக் கருத இடமுண்டு.

திருக்கோவையாருண்மை யாசிரியர் கூறியுள்ள கருத்துக்களையும், அவர் காட்டும் பேரின்பப் பொருளையும் திருவாசக உரைசெய்த காழித்தாண்டவராயர் அப்படியே ஏற்றுக்கொண்டு அவற்றை இடைப்பெய்து தம் உரையை எழுதியிருக்கிருர். இவர் காலம் சென்ற நூற்ருண்டின் தொடக்கம்.

சைவப் பாதிரியாராகச் சென்ற நூற்ருண்டில் விளங்கியவர் ஆறுமுக நாவலர். அவர் இராமலிங்க சுவாமிகள் பாடிய பாடல்களைத் திருவருட்பா என்று வழங்குவது தவறு என்றும், தேவாரம் முதலிய அருட்பாக்களை மட்டுமே அருட்பா என்று வழங்க வேண்டும் என்றும் கூறி, இது பற்றிய பல கண்டன நூல்கள் எழுதி வெளியிட்டார். இக்கண்டனங்களில் அக்காலத்திலிருந்த சைவ அறிஞர் பலர் பங்குகொண்டு இருந்தனர். இக்கண்டன நூல்களிலிருந்து ஒரு குறிப்புக் கிடைக்கிறது. ஆறுமுக நாவலர் எழுதிய கண்டன நூலொன்று, போலி அருட்பா மறுப்பு என்ற பெயரால் 1866-ல் வெளிவந்தது. இது மாவண்டூர்த் தியாகேச முதலியார் பெயரில் அச்சிடப் பெற்றது. இதனுள் திருவாவடுதுறை ஆதீன மாணுக்கரான இராமசாமிப்பிள்ளை நாவலருக்கு எழுதிய நீண்ட கடிதம் ஒன்று வெளியாகி இருக்கிறது. அதனுள் காணும் பின்வரும் பகுதி இங்கு கருதத்தக்கது.

''தேவாரம் முதலிய பன்னிரண்டு திருமுறைகளும் திருவருளினலே பாடப்பட்டனவே. அவற்றுள் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் துதிரூபம் அல்லாமையாலும், பதினேராம் திருமுறைப் பிரபந்தங்கள் பெரும்பாலும் பண்ணுக்கு இசையாத பாவினங்களாகியும் விநாயகக் கடவுள் முருகக் கடவுள், நாயன்மார் இவர்கள் பரமாக விரவி இருத்தல் முதலிய காரணம் பற்றியும், அவ்விரண்டு திருமுறைகளல்லாத தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்தும் நைமித்திகங்களிலே பண்டைக் காலந்தொடங்கி ஓதப்பட்டு வருவருகின்றன. இவை யோகரூடியாக அருட்பா என்று ஆன்ருேராலே தொன்றுதொட்டு வழங்கப்படுகின்றன. அருட்பா என்னும் பெயர்க்காரணம் கருதாவழி இடுகுறி மாத்திரையாகத் தேவாரம் முதலிய ஐந்திற்கே சென்றும், காரணம் கருதியவழி ஏனைய அருள் பெற்ருேரால் பாடப்பட்ட பாவுக்குச் சென்றும் வருகிறது. (காரணங் கருதிய வழி என்பது, சிவஞான தேசிகர் பாடிய துண்டிவிநாயகர் திருஅருட்பா, கதிர்காம வேலவர் திருஅருட்பா, தட்சிணுமூர்த்தி திருஅருட்பா முதலியன). பின்னரும் இக்கடிதத்தில் ''சிவாலயம் ஆதீன மடாலயம் முதலியவற்றிலெல்லாம் தேவாரம் முதலிய ஐந்திற்கும் அருட்பாவென்றும் திருநாமம் வழங்கிவருவதை ஓதுவார் முதலானவர்களைக் கொண்டு நேரே ஒப்புவித்து, இன்னும் ஆதீன முதலியவற்றில் விசாரித்தால் ஐயந்தீர்ந்துய்யலாம் என்றும் .......கூறினேன்'' என்று காணப்படுகிறது.

இங்கு ஆன்ருேராலே ஆலயத்தில் பண்டைக்காலந்தொடங்கி ஓதப்பட்டு வருகின்ற பாடல்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரிய புராணம் என்ற ஐந்து எனவும் சொல்லப்பட்டுள்ளது. இவரும் பண்டைக் காலந்தொடங்கி இவை சிவாலயங்களிலே ஓதப்பட்டு வருகின்றன என்று கூறினரேயன்றி இவற்றை மட்டும் தொகுத்தது யார், எக்காலம் என்று கூறவில்லை; இவற்றிற்குப் பஞ்சபுராணம் என்பது பெயர் என்பதையும் கூறவில்லை.

அருட்பா மருட்பா கண்டனமும் வழக்கும் ஏற்பட்ட காலத்தில், ஆறுமுக நாவலர் அருட்பா என்று மேற்குறிப்பிட்ட ஐந்து நூலையும் ஒரே புத்தகமாக அச்சிட்

டார். தேவாரம் என்பது நூல்பெயராகியும்கூட, அது மிகவும் விரிந்ததானபடியால் சிறுநூலாக்கக் கருதிய ஆறுமுக நாவலர், அகத்தியர் திரட்டை மட்டுமே தம் தொகுப்பினுள் சேர்த்தார். அவர் அச்சிட்ட அருட்பாத் தொகுப்பு பின்வரும் ஐந்து நூல்களைக் கொண்டது.

1. அகத்தியர் தேவாரத்திரட்டு.
2. திருவாசகம் முழுமையும்.
3. திருவிசைப்பா முழுமையும்.
4. திருப்பல்லாண்டு முழுமையும்.
5. பெரியபுராணச் செய்யுள் திரட்டு (37 பாட்டு)

இவைகளே பஞ்சபுராணம் பாடுவதற்கான ஆதார நூல் என்ற கருத்தோடு, பாடுகின்ற ஓதுவார்களுக்கு உதவியாக இருக்கவல்ல அடக்கமான கைப்புத்தகமாய் இருக்கும்படி, வெளியிடப் பட்டன என்று நாம் கருதலாம். இப்பெரியபுராணச் செய்யுள் திரட்டு என்பது, ஆறுமுக நாவலர் காலத்துக்கு நெடுநாள் முன்னதாகவே வழக்கில் இருந்தது என்றும் அறிகிறோம். பாட்டு வழக்கிலும் இத்திரட்டு பயின்று வந்தது; ஓலைச்சுவடியாகிய ஏட்டு வழக்கிலும் இருந்திருக்கிறது. நாலாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் கொண்ட திருத்தொண்டர் புராணத்தில் பொருத்தமான பாடல்களைத் தேர்ந்து எழுதிப் பாடுதல் ஓதுவார்களுக்கு எளிதன்று என்ற நினைவால், அவர்களுக்குப் பயன்படும் பொருட்டு இத்திரட்டு நம் முன்னோரால் தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டும். ஆறுமுகநாவலர் இதை எடுத்து அச்சேற்றினர் என்றே தெரிகிறது.

பஞ்சபுராணம் பாடிய ஓதுவார்கள் அந்தந்தத் தலத்திற்குரிய தேவாரங்கள் சிலவற்றை மனப்பாடம் செய்து பாடினார்கள். தலப்பாசுரங்கள் தெரியாதபோது, அகத்தியர் தேவாரத்திரட்டில் உள்ள பாசுரத்தைப் பாடுவது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. பாசுரம் இல்லாத தலங்களுக்கும் இதிலிருந்து பாடல்களைப் பாடி வந்தார்கள்.

இங்ஙனமாக இப்புத்தகம் தேவாரம் கற்று நன்றாகப் பாடவேண்டும் என்ற கருத்துடைய ஓதுவார்களுக்கும், தேவாரம் கற்க விரும்பினோர்க்கும், பேருதவியாக இருந்தது. திருப்பதிகம் விண்ணப்பித்தல் என்பது பஞ்சபுராணம் பாடுதலே; இவ்வருட்பாவே பஞ்சபுராணம் என்ற கருத்தும் நிலை பெறுவதாயிற்று. பன்னிரு திருமுறைகளும் பாடுகின்ற சந்தர்ப்பங்களில் திருமுறைக்கு ஒரு பாடல் வீதம் பாடுவார்கள். திருக்கோவையாரும், திருப்பல்லாண்டும் சேர 14 பாடல்களும் ஆகும்; திருப்பல்லாண்டு பஞ்சபுராணத்தில் ஒன்று. அவசியம் பாடியே ஆகவேண்டும். ஆனால் திருக்கோவையார் மட்டும் அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. எனினும் ஒன்பதாம் திருமுறை பாடும்போது, ஒரு பாடல் பாடினால் போதும். திருவிசைப்பா பாடினால் திருப்பல்லாண்டு பாட வேண்டியதில்லை. திருப்பல்லாண்டு பாடினால் திருவிசைப்பா பாடவேண்டியதில்லை என்று வயது முதிர்ந்த ஓதுவார்கள் கூறக்கேட்டு இருக்கிறோம்.

திருமுறை வரிசையிலேயே பாடல்களைப் பாடவேண்டும் என்பது மரபு. ஆனால் திருவாரூரில் மட்டும், திருக்கோவையாரைப் பெரியபுராணத்தின் பிறகே பாடுவது வழக்கமாயுள்ளதென்று சொல்வர். பழைய சம்பிரதாயங்களை நன்கு கேட்டறிந்து மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தாம் தலபுராணம் பாடுங்காலங்களில் உரியனவற்றை ஆங்காங்கு அமைத்துப் பாடும் பழக்கமுடையவர்கள். அவர்கள் பாடிய மாயூரப் புராணம் 1869 இல் அச்சாயிற்று. ஒரு தேசிகர் விருப்பத்தின்படி புராணத்தின் இறுதியில் சவுசவிதி, பற்கொம்புவிதி, நானவிதி, அனுட்டானவிதி, சூரியபூசாவிதி, போசனவிதி, சிவாலய தரிசனவிதி, செபவிதி, சமாதிவிதி ஆகிய பகுதிகளைத் தனிப்படலங்களாக 244 பாடல்களில் பாடிச் சேர்த்திருக்கிறார்கள். சிவாலய தரிசனவிதி, ஆறும் பாடலில், சிவபிரான் முன் நின்று என்ன அருட்பாடல்களைப் பாடவேண்டுமென்பதைக் கூறுகிறார்கள்.

''நிறையருட் பாடல் ஆகி
நிரம்புதே வாரம், யாரும்
அறைதிரு வாச கம்,சீர்
அமைஇசைப் பா,பல் லாண்டு,
குறைதவிர் புராணம் இன்ன
கொண்டுறத் துதித்தல் செய்து,
மறைபுகல் விபூதி மேனி
வளைந்திரு கையால் ஏற்க''

என்பது அந்தப் பாடல். இங்குப் பஞ்சபுராணம் என்ற பெயர் சொல்லாமல், ஐந்து அருள் நூல்களையும் பாடவேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பதும், இம்மரபின் பழைமையை நன்குணர்த்தும்.*

# கண்டவர் விண்டது

சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர், பேராசிரியர்
**திரு. ஔவை. சு. துரைசாமி, மதுரை**

''கண்டாரும் விண்டதில்லை; விண்டாரும் கண்டதில்லை'' என்பது நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் காணப்படுவது. இதன் கண், முன்னடியிலும் பின்னடியைத் திருவாசகத்தில், 'கீதங்கள் பாடுதல் ஆடுதலல்லால் கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை'' எனவரும் தொடர் உறுதிப்படுத்துகிறது. கண்டவர் விண்டிலர் என்ற கருத்து ஒருகால் என் மனத்தை இயக்கிற்று. சமய குரவர் பலரும் இறைவனைக் கண்டவர்களாயிற்றே என்ற எண்ணம் எழுந்தது. ''கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்'' எனத் திருநாவுக்கரசர் அருளிய திருமொழி நினைவுக்கு வரவும், அவர் கண்ட திறம் காண முயன்றேன். அம்முயற்சி இக்கட்டுரை :

சிவபரம்பொருள் காண்டற்கரியது. அதன் அருமையை, 'ஒருத்தரால் அறியவொண்ணாத் திருவுருவுடைய சோதி'' (23 : 2) என்றும்,

அண்டமார் இருளூடு கடந்து உம்பர்
உண்டு போலும் ஓர் ஒண்சுடர் அச்சுடர்
கண்டு இங்கு ஆர் அறிவார்'' (211-2)

என்றும்,

''எந்நிறம் என்று அமரர் பெரியார்
இன்னம் தாம் அறியார்'' (88-8)

என்றும், நம் அப்பர் அறிவிக்கின்றார். இங்கே ஒருத்தரால் என்றவிடத்துத்தொக்கி நிற்கும் உம்மையை விரித்து ஒருத்தராலும் எனக் கொள்ள வேண்டும். எத்துணையுயர்ந்தோராயினும் இறைவன் காண்பதற்கு அரியவன் என்பது கருத்து. ஒருத்தராலும் அறியவொண்ணாயின், அவனை நினைத்தலும் அடைதற்கு முயலலும் வீண் அன்றோ எனின், காணுவாறு இருளில் மறைந்து கிடந்து ஒழியர்து யாவரும் கண்டறிவதற்காகவே பேரொளியாய்ப் பிறங்குகின்றான் என்றற்கே 'திருவுருவுடைய சோதி', 'உம்பர் உண்டு போலும் ஓர் ஒண்சுடர்' என்று இயம்புகின்றார். அப்பேரொளிதான் எங்கே உளது என்பார்க்கு, அண்டத்து அப்பால் உளது என்பராய், 'இருநிலனும் விசும்பும் விண்ணும் ஏழுலகும் கடந்து அப்பால் நின்ற பேரொளி' என்று உரைக்கின்றார். அப்பேரொளியின் உண்மையுணர்ந்த விண்ணவரும் மண்ணகத்துப் பெரியோரும் அதன் நிறம்இன்னது என்று அவர்களால் அறிய முடியவில்லை; அதனால் ''எந்நிறம் என்று இன்னும் தாம் அறியார்'' என்று இயம்புகின்றார்.

பெரியோருள் அண்டம் கடந்து அதனைச் சூழ நிறைந்த இருள் கடந்து அதற்கு அப்பால் உள்ளது ஒரு பேரொளி என அறிந்தோர் உண்டு என்பது இனிதுபுலப்படவே, ''அண்டமார் இருளூடு கடந்து உம்பர் உண்டு போலும் ஓர் ஒண் சுடர்'' என்றார் போலும். அங்ஙனம் ஒளியைக் கண்டும் அதன் நிறம் உரு முதலிய கூறுகளை அறிய இயலாமை பற்றிக் ''கண்டு இங்கு யார் அறிவார்'' என்றார். ஒருத்தரும் இல்லை என்பதாம்.

எல்லாம் வல்ல இறைவன் ''காட்சிக்கு எளிய''னாதல் அவற்கு மாட்சியாக இருப்ப ஒருத்தராலும் அறியவொண்ணாதவனாக, காண்டற்கு அரியனாக இருப்பது எவ்வாறு பொருந்தும்? எனின் காண்டற்கு உரிய நெறியுளது ; அந் நெறியே நோக்கினால் மிக்க எளியனாய்த் தோன்றி இன்புறுத்துவன். விஞ்ஞான நெறியில் நுண்பொருள் காண விழைவார்க்கு அந் நெறிக்குரிய விஞ்ஞான அறிவு வேண்டும்; மருத்துவ நெறியில் முயல்வார்க்கு மருத்துவவறிவு முற்பட வேண்டும். பொறியியல் அறிவுடையார்க்கே பொறியியல் துறையின் நுண்மை தேர்ந்து புதுமை காண முடியும்.

அவ்வாறே, சிவத்தைக் காண்டற்குச் சிவ ஞானம் வேண்டப்படுகிறது. சிவஞான முடையார்க்குச் சிவம் பெறுதல் கூடும்.

இதுபற்றி ஆராய்ந்து சிவஞானம் கை வரப்பெற்ற மெய்கண்ட தேவர், சிவ பரம்பொருள் நமது இயற்கையறிவால் அறியப்படுவதன்று; அறியப்படாமையால் இல் பொருள் என்றும் சொல்ல முடியாது. சிவஞானத்தால் உணர்வார்க்குத் தெற் றென விளங்கும் செம்பொருள், சிவசத் தாம் என்பர். இதனை, ''உணர் உரு அசத்து எனின், உணராது இன்மையின், இருதிறனல்லது சிவசத்தாம்'' என்று கூறுகின்றார்.

சிவஞானம் பெறுவது எங்ஙனம் எனின், சிவநெறியின் முயல்வது. அறிவுத் துறை யில் முயலும் மாணவர்க்கு அந்நெறியில் மயக்கமுண்டாக்குங்கால் ஆசிரியன் வந்து அதனை நீக்கி உரிய நெறியை அறிவுறுத்து வதை நாம் காண்கின்றோம். அவ்வாறே சிவநெறிக்கண் முயலுங்கால் தோன்றும் அறியாமையைப் போக்கிச் சிவஞானத்தை அருளுவன். சிவநெறிக் கண் முயலும் நெறியும், அதன்கண் சிவபரம்பொருள் அருளும் திறமும், நமக்குச் சமய குரவ ரென்ற முறைமை தோன்ற,

''பொறிப் புலன்களைப் போக்கறுத்து உள்ளத்தை
நெறிப் படுத்து நினைப்பவர் சிந்தையுள்
அறிப்புறும் அமுதாயவன் ஏகம்பம்
குறிப் பினுற் சென்று கூடித் தொழுதுமே''
(162-4)

என்று நாவரசரே நவில்கின்றார்.

இங்ஙனம் பொதுப்படக் கூறிய அப்பர் பெருமான், தனக்கு இறைவன் சிவநெறி அருளிய திறத்தை ''நாயினும் கடைப்பட் டேனை நன்னெறி காட்டி ஆண்டாய்'' என்று உரைக்கின்றார். நன்னெறி காட்டிய வகையையும் நாவுக்கரசர் தெரிவிக்காமல் விடுகின்றாரில்லை. நமது உயிர், இருள் செய்யும் மலம் கலந்து, அதன் வழித் தோன்றும் வினை செய்து இடர்ப்பட்டுத் தெளிவு பெறாது தடுமாறித் தியங்குவது இயல்பு. அதனைக் கெடுத்துச் சிவ ஞானத்தைச் சிவபெருமான் அருளுகின்றான் என்று உரைக்கலுற்று,

''இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி
இடர்பாவம் கெடுத்து ஏழையேனை உய்யத்
தெருளாதசிந்தைதனைத் தெருட்டித்தன்போல்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை''

என்று பாடுகின்றார். சிந்தையைத் தெருட் டியது எவ்வாறு? இங்கே அஃது ஒருவாறு விளக்கப்படுகிறது. அதனைத் திருவெறும் பியூர்த் தாண்டகத்தில், ''தன்னையும் தன் திறத்தறியாப் பொறியிலேனைத் தன் திறமும் அறிவித்து நெறியும் காட்டி, அன்னையையும்அத்தனையும்போல அன்பாய், அடைந்தேனைத் தொடர்ந்து என்னை ஆளாக் கொண்ட தென் எறும்பியூர்மலை மேல் மாணிக்கத்தைச் செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே'' (305—1) என்று விளக்குகின்றார்.

இவ்வண்ணம் தன்னையும் தன் திறத்தை யும் அறிவித்து அதற்குரிய நெறியை யும் காட்டியபொழுது அந்நெறியைக் கடைப்பிடித்துச் செல்லும் தமக்கு இறை வன் காட்சியருளிய திறத்தை நாவுக்கரசர் நமக்கு அறிவிக்கின்றார். ஞான நூல், ''அந்நியமின்மையின் அரன்கழல் செலும்'' என்றும், ''அயரா அன்பின் அரன் கழல் செலும்'' என்றும் கூறுகின்றது. ஆயினும், உலகில் வேந்தன் அருளினலன்றி அவன் திருமுன் செல்ல ஏனோர்க்கு முடியாது; உலகியல் தலைவரும் அப்பெற்றியரே. அவ் வாறே இறைவனைக் காண்டற்கும் அவன் திருவருள் வேண்டும். அதுபற்றியே நாவுக் கரசர் ''அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும் அவன் அருளே கண்ணகக் காணின் அல்லால், இப்படியன் இந்நிறத்தன் இவ் வண்ணத்தன் இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாது'' என்று கூறுகின் றார்.

இயல்பிலேயே காணலாகாத நுண் ணிய பொருளைக் காண்டற்கென அருமை யான கருவிகள் அமைதல் போல, இறை வனைக் காண்டற்கு அவன் திருவருள் கருவி யாகும். ஆனல் அக்கருவிகட்கு அடிப் படை அறிவு ஆவது போலத் திருவருளும் அறிவு வடிவாய்க் காண்பார் அறிவிற் கலந்து அவனைக் காணச் செய்வதுதான் இங்கே அருளே கண்ணகக் காண்பது என்று கூறப்படுகிறது. வேந்தனதருளோ, தலைவனதருளோ அவனைச் சூழவுள்ளோ

ரது துணையால் பெறப்படுகிறது; இறைவன் திருவருள் எவ்வாறு எய்தும்? அவன் உலகியல் தலைவர் போல அன்றி, ''இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி, இயமானனாய் எறியும் காற்றுமாகி அருநிலைய திங்களாய் ஆகாசமாய் அட்டமூர்த்தியாய் இருத்தலின்'' அவனது அருள் பெறுமாறு யாங்ஙனம்? எனின், அவன் இரு நிலனுமாவன்; அல்லனுமாவன்; உயிர்கட்கு அருளல் வேண்டியே இவ்வாறு நில முதலியனவாகவும் அல்லனாகவும் உள்ளான். உமை கேள்வனான திருவுருவம் நமக்கு அருள்வது குறித்ததே என்பார்,

''விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர்
வேதவிதியல்லர் விண்ணும் நிலனும்
திரிதருவாயுவல்லர் செறுதீயுமல்லர்
தெளிநீருமல்லர் தெரியின்
அரிதரு கண்ணியாளை ஒருபாக மாக
அருள் காரணத்தின் வருவார்''

என்று அறிவிக்கின்றார்.

இவ்வாறு அருளுதல் காரணமாக எழுந்தருளும் இறைவன், நமக்கு அருளும் செயல் மிக்க வியப்பாக உளது. உயிரறிவு அது நின்ற உடம்பின் அமைவுக்கு ஏற்ப விளக்கமுறுகிறது. அது பற்றியே திருமூலர், ''உடம்பார் அழியில் உயிரார் அழிவர், திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்'' என்று கூறுகின்றார். இதனால், திருவருள் ஞானம் பெறுதற்கு உடம்பு பெருங் கருவியாவது தெற்றென விளங்கும்.

நமது உடம்பு, ஊன் உயிர் உணர்வு என்ற மூன்றுக்கும் உறைவிடம். அருள் ஒளி பெறுதற்குரியது உயிருணர்வாயினும், அதற்கு ஊனுடம்பு கொள்கல மாதலின் அதுவும் அருள் ஒளி நிறைதல் வேண்டும். ஊனும் உயிரும் உணர்வும், அருளில் தோய்ந்து ஒன்றாயினன்றி உண்மை ஞானம் கைவர முடியாது. இதனை நாவரசர், 'ஊனாகி உயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப் பிற அனைத்தும் நீயேயாகி, நான் ஏதும் அறியாதே என்னுள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்'' என்று உரைக்கின்றார். உயிர் உணரும் தன்மைத்தாயினும் உணர்வு இருக்குமிடம் உயிரே என்பது தோன்ற ''உயிராகி அதனுள் நின்ற உணர்வாகி'' என்று சுட்டிக் காட்டுகின்றார்.

இங்ஙனம், ஊனும் உயிரும் உணர்வுமாயினும் திருவருள் அவ்வாறு ஆவது உயிருணர்வால் அறியப்படுவதில்லை; உடம்பிற்குள் உடன் உறையினும், அதன் கண் உருவாகும் நோய் உயிர்க்குத் தெரிவதில்லை; அதுபோலத் திருவருளின் தோய்வும் உயிர்க்குத் தெரியாது போகிறது. அது விளங்குதற்கே ''நான் ஏதும் அறியாமே என்னுள் வந்து'' என்றும், உடலினுள் தோன்றிய நோய் விளைவிக்கும் துன்பத்தால் அதன் உண்மை வெளிப்படுவது போல, அதற்கு மறு தலையான திருவருள் உயிருணர்விற் கலந்து நல்லன தீயன காட்டும் போது அதன் உண்மை உணரப் படும். அதற்காகவே, ''என்னுள் வந்து நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்'' என்றும், ''அடியேற்குக் காணுகாட்டும் கண்ணும் கருகாவூர் எந்தை'' என்றும் நாவேந்தர் நவிற்றுகின்றார்.

நல்லறிவால் நோயுண்மை உணர்ந்தவன், மருத்துவவறிவு சிறந்தவனாயின் நோய் முதல் நாடுவன். அதுபோல, நன்ஞானிகள், முன்பு தெரியாதிருந்த நல்லனவும் தீயனவும் பின்பு தெரிகின்றபோது, அதற்குக் காரணம் திருவருளின் காட்டும் உதவியெனத் தெளிகின்றனர். நல்லதன் நலனும் தீயதன் தீமையும் காணுங்கால் இன்பம் பெருகுவது இயல்பாக அறிந்தது. அந்த இன்பமும் திருவருளின் பயன் என்பதைச் சிவஞானிகள் தெளிந்து, திருவருட்கு முதலாகிய சிவத்தைக் காண்பதற்கு விருப்புமிகுவர்.

இவ்விருப்ப மிகுதியால் திருநாவுக்கரசர் சிவத்தைக் காண முயல்கின்றார். காணும் திறம் யாது, காணப்படும் உருவும் அருவமுமாகிய உலகியற் பொருள்களையும் அவற்றின் செயல்களையும் அறிவதும், அறிந்தவற்றை மனத்தால் எண்ணுவதும், பின்பு மனத்தின்கண் உள்ள எண்ணங்களை உள்ளத்தின்கண் கொணர்ந்து உணர்வதும் என வரும் இவற்றை நால்வகைப்படுத்து முறையே வாயிற் காட்சி, மானதக் காட்சி, தன் வேதனைக் காட்சி, யோகக் காட்சி என்று கூறுவர். மானதக் காட்சி மானதம் என்றும், கனவு என்றும் இருவகைப்படும். இவைகள் முறையே பொறி புலன்களால் புறத்தே உலகப் பொருள்களை அறிவது வாயிற் காட்சி! பொறிகளை விடுத்து அவை காட்டியவற்றை உறக்கத்தில் மனத்தால்

காண்பது கனவுக் காட்சி; மனத்தின் நடுக் கூருகிய சித்தத்துள் சிந்தித்துணர்வது மானதக் காட்சி. இவை நிகழும்போது உயிருணர்வு முறையே புருவ நடுவிலும், கழுத்திலும் மார்பிலும் நிற்கும். மனத்தால் எண்ணியவற்றையே உறக்கத்தில் கனவின்கண் கண்டு உண்மை தலைப்படுமிடத்தும், பொறிகளாற் கண்டனவும் மனத்தால் எண்ணினவும் தம்முள் மயங்கி வேறு வேறு தோற்றங்களாய் உறக்கத்தில் கனவின்கண் தோன்றிப் பொய்ப்படுமிடத்தும், எய்தும் மானதக் காட்சி கனவே யாகும்.

இவற்றின் வேருகத் தன்வேதனைக் காட்சி, யோகக் காட்சி என இரண்டு உண்டு. அக் காட்சிகள் தருவன மனவெல்லைக்கு அப்பாற்படுதலால் அவை சொல்லுக்கு அகப்படுவதில்லை; இன்பம் துன்பம் என்பன உண்மையுணர்வேயாயினும் அவை உணர்வாய் ஒழிகின்றனவே யன்றி உரைப்பதற்கு அகப்படுவதில்லையன்றே!

அதனுல், கண் முதலிய பொறிகளாற் காணும் வாயிற் காட்சி, கனவுக் காட்சி, சிந்தைக் கண் வைத்துக் காணும் மானதக் காட்சி என்ற மூன்றுலும் சிவபரம் பொருளைத் தாம் கண்ட இயல்பை நாவுக்கரசர் ''பாவுற்றலர் செந்தமிழ் இன் சொல்'' வளப் பதிகங்களில் பகர்கின்றுர். கண்ணுகிய பொறி வாயிலாகச் சிவபரம் பொருளைத் திருப்பாசூரில்,

''எண்ணுகி எழுத்தாகி இயல்பு மாகி
 ஏழுலகும் தொழுதேத்திக் காண நின்ற
கண்ணுகி மணியாகிக் காட்சி யாகிக்
 காதலித்தங் கடியார்கள் பரவ நின்ற
பண்ணுகி இன்னமுதாம் பாசூர் மேய
 பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த
 வாறே''

எனவும், திருநாரையூரில்,

''அடியேற்கு நினைதோறும்
 அண்ணிக்கின்ற நாவானை
நாவினில் நல்லுரையாளுனை
 நாரையூர் நன்னகரில் கண்டேன் நானே''

எனவும் உரைக்கின்றுர். திருவாய்மூரில்,

பரிந்தார்க்கருளும் பரிசும் கண்டேன்
 பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
 மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்
 டேன்,
மருந்தாய்ப் பிணிதீர்க்குமாறு கண்டேன்
 வாய்மூர் அடிகளை நான் கண்டவாறே

எனக் கண்ட காட்சியை விரித்துக் கூறுகின்றுர்.

இவ்வாறு பல வகையிலும் பரமனை வாயிற் காட்சியாற் கண்டு மகிழ்ந்த நாவரசர்க்கு, ஆராமை மீதூர்கிறது. வேறு சில திருப்பதிகட்குச் சென்று வழிபடுகையில் அவ்வாராமை தீரக் காண்கின்றுர். கஞ்சனூர் சென்று கண்ணுதற் கடவுளைக் கண்டு பரவுகின்றுர். அக்காட்சியால் அவரது ஆர்வம் நிறைகிறது. அதனுல், ''கஞ்சனூர் ஆண்ட கோவைக் கற்பகத்தைக் கண்ணுரக் கண்டு உய்ந்தேனே'' என்று பாடி மகிழ்கின்றுர். கழுக்குன்றத்தில் பெற்ற சிவக் காட்சியை ''கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக் கற்பகத்தைக் கண்ணுரக் கண்டேன் நானே'' என்றும், கற்குடியில் பெற்ற காட்சியை, ''கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணுரக் கண்டேன் நானே'' என்றும் படிப்பவரும் படிக்கக் கேட்பவரும் மனமுருகுமாறு இயம்புகின்றுர்.

சிவ பரம் பொருளைக் கண்ணுரக் கண்டு இன்புற்ற திறம் கற்பகம் போல நாவரையர்க்கு இன்பப் பயன் தந்துள்ளது. அதனை வியந்தே தாண்டகந்தோறும் கற்பகம் என்று கனிந்து மொழிகின்றுர். மேலும் அக் காட்சி அவர்க்கு மிக்கதோர் இன்பத்தைச் செய்துளது. அதனுல், காளத்தியில் வழிபட்டுப் பாடிய திருத்தாண்டகத்தில்,

அண்ணுமலையான் காண் அடியாரீட்டம்
 அடியிணைகள் தொழுதேத்த அருளுவான்
 காண்
கண்ணுரக் காண்பார்க்கோர் காட்சியான் காண்
 காளத்தியான் அவன் என் கண்ணுளானே

என்று இசைக்கின்றுர்.

இங்ஙனம் நனவிற் கண்டு பாடிய நாவரசர், இறைவனைக் கனவிலும் கண்டு இன்புறுகின்றுர். திருவொற்றியூரில் வழிபட்டவர், ஒற்றிப் பெருமானைக் கனவிற் கண்டு தாம் பெற்ற பெரும் பயனை, ''ஒற்றியூர்

மேய ஒளிவண்ணனூர்க், கண்டேன் நான் கனவகத்தில் கண்டேற்கு என்றன் கடும் பிணியும் சுடுந்தொழிலும் கைவிட்டவே'' என்று உரைக்கின்றார். ஒருகால் அவர் ஆலவாய்ப் பெருமானைக் கனவில் கண்டார்; அக்காட்சி நனவுபோல் இன்புறுத்தினமை யின் அதனை, ''சிட்டனைத் திரு ஆலவாயில் கண்டேன் தேவனைக் கனவில் நான் கண்ட வாறே'' என்று பாடிக் காட்டுகின்றார். இவ்வாறே, திருநல்லூரில் கண்ட கனவை,

''செஞ்சுடர்ச் சோதிப் பவளத்திரள் திகழ் முத்தனைய
நஞ்சணிகண்டன் நல்லூர் உறைநம்பனை நான் ஒருகால்,
துஞ்சிடைக்கண்டு கனவின்தலைத்தொழுதேற்கு அவன்தான்
நெஞ்சிடைநின்று அகலான் பலகாலமும் நின்றனனே''

என்று உரைத்து, ''கனவிடைப் போந்த இறைவன், தமது நெஞ்சின் கண்ணே நிலைபெற்று விட்டான்; மறையவில்லை'' என்று தெரிவிக்கின்றார்.

இவ்வண்ணம் நனவிலும் கனவிலும் இறைவனைக் கண்டு இன்பம் எய்திய நாவுக்கரசர், பொறிவாயிற் காட்சியைப் போக் கறுத்துச் சிந்தைக்குள் நோக்கும் மானதக் காட்சியில் இறைவனைக் காண்கின்றார். அந் நிலையிற் பெற்ற காட்சியை, ''சிவனை நான் சிந்தையுட் கண்டவாறே'' என்று உரைக் கின்றார்.

சிவ பெருமான் சிந்தைக்குள் தோன்று வது எங்ஙனம்? சிந்திப்பவர் சிந்தையும் அதன்கண் பிறக்கும் தெளிவும் அவன் திரு வருளால் அமைந்து அவனே யாதலால் அவன் அங்கே தோன்றுவதில் ஐயமில்லை. இக் கருத்தைத் திருவாப்பாடி நேரிசையில், ''சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினுள் சிவனுமாகி வந்தனன் பயனுமாகி'' என்று அறிவிக்கின்றார். இதனால் தெளிந்த சிந் தையில் சிவம் தோன்றி இன்பம் செய்யும் என்பது இனிது விளங்குவது காணலாம். சிவனைச் சிந்தையிற் காண்பது பிறர் அறிய நிகழ்வதன்று; அதனால் பிறரும் அது செய் தல் வேண்டிக் கூறுபவர், ''தம் நெஞ்சம் தம் வழி நிற்கப்பெறின் அதன்கண் சிவனைக் காணலாம்; அவ்வாறு பெறாதவர் மூர்க்க ராய்ச் சிவனைக் காணாது வறிதே சாவர்; அவர் நெஞ்சமும் வன்மையுடையதொன் றாகும்; என் நெஞ்சில் எனது உள்ளம் ஈசனைக் கண்டது'' என்று கூறலுற்று,

''முன்நெஞ்சம்இன்றி மூர்க்கராய்ச் சாகின்றார்
தம் நெஞ்சம் தமக்குத் தாம் இலாதவர்;
வன்நெஞ்சம் அது நீங்குதல் வல்லிரே;
என் நெஞ்சில் ஈசனைக் கண்டது என்உள்ளமே''

என்று தெரிவிப்பது காண்க.

மேலும் இதன்கண் தன் நெஞ்சு தனக் கேயாக தன் வழி நிற்பதாக நிறுத்திக் கொண்ட வழி மூர்க்கத் தன்மை கெடும்; அது போதா; அதன்கண் சிவனைக் காண வேண்டும்; அக் காட்சியால் நெஞ்சம் வன்மை நீங்கி மென்மையும் கசிவும்பெறும்; அது பற்றியே ''வன்னெஞ்சம் அது நீங்கு தல் வல்லிரே'' என்று இசைக்கின்றார். மென்மையால் நன்மை யெய்திய நெஞ்சில் இறைவன் எழுந்தருளுகின்றான் என்ப தற்குச் சான்று வேறு வேண்டா என்பார், ''என் நெஞ்சில் ஈசனைக் கண்டது என் உள்ளமே'' என்று எடுத்துரைக்கின்றார்.

உடம்பு முழுதும் கண்ணுக்குத் தெரி யாத துவாரங்கள் நிறைந்ததாயினும், இதனுள் இருக்கும் மனத் தாமரையில் சிவபரம்பொருள் இருப்பன்; அவனை அதன்கண் வீற்றிருக்கக் காரணலாம். அவனை வானவர் முதலியவர்க்கும் காண்ப ரியன் என்பர்; மற்று யானோ, என் நெஞ் சத் தாமரையில் நன்கு கண்டேன் என்பா ராய்,

''அள்ளலைக் கடக்கவேண்டில்
அரனையே நினைமின் நீர்கள்
பொள்ளல் இக்காயம் தன்னுள்
புண்டரீகத்திருந்த
வள்ளலை வானவர்க்கும்
காண்பரி தாகிநின்ற
துள்ளலைத் துருத்தியானைத்
தொண்டனேன் கண்டவாறே''

என்று உரைக்கின்றார்.

அற்றேல், சிந்தையிற் சிவனைக் காண் டற்கு வழி யாது? நம் சமய குரவரான நாவுக்கரசர் அதனைக் கூறாமல் இல்லை, ''கொள்வோன் கொள் வகையறிந்து'' நல் லறிவு கொளுத்தும் ஞானாசிரியராதலால், சிவபரம்பொருளைச் சிந்தையிற் காண்டற் கெனத் திருக்கன்றாப்பூர்த் தாண்டகத்தில்,

''விடிவதுமே வெண்ணீற்றை நிறையப்பூசி,
வெளுத்தமைந்த கீளொடு கோவணமும் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய் என்றும்
செல்கதிக்கு வழிகாட்டும் சிவனே என்றும்
துடியனைய இடைமடவாள் பங்கா என்றும்
சுடலைதனில் நடமாடும் சோதீ என்றும்
கடிமலர் தூய்த் தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே''

என்று அறிவுறுத்துகின்றார்.

இதுகாறும் கூறியவற்றால், சமய குரவரான திருநாவுக்கரசர் சிவ பரம்பொருளைக் கண்ணாகிய பொறியாற் காணும் நனவிலும், உறக்கத்திற் காணும் கனவிலும், நனவில் பொறிகளின் நீங்கிய நிலையில் சிந்தையிலும் கண்டதும், கண்ட காட்சியை இனிய செந்தமிழில் பண்சுமந்த பாட்டில் தொடுத்து விண்டதும் கண்டோம். வாழ்க நாவுக்கரசர். வளர்க அவர் காட்டிய அருட் காட்சி. *

---

## (இராமபிரான்)

கற்பார் இராம பிரானை அல்லால் மற்றும் கற்பரோ?
புற்பா முதலாப் புல்லெறும்பு ஆதி ஒன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்,
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே!

## (கண்ணன் எம்பெருமான்)

உண்ணும் சோறு பருகும்நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர்மல்கி,
மண்ணினுள் அவன்சீர் வளம் மிக்கவனூர் வினவித்
திண்ணம் என் இளமான் புகும்ஊர் திருக்கோளூரே!

## (கலியும் கெடும்)

பொலிக பொலிக பொலிக! போயிற்று வல்லுயிர்ச்சாபம்,
நலியும் நரகமும் நைந்த, நமனுக்கு இங்கு யாதொன்றும் இல்லை,
கலியும் கெடும் கண்டுகொள்மின், கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்,
மலியப் புகுந்திசைப் பாடி ஆடி உழிதரக் கண்டோம்!

—நம்மாழ்வார்.

# சன்மார்க்கக் கோள்கைகளின் விளக்கம்

தவத்திரு ஊரன் அடிகள்,
வடலூர்

## கடவுள் ஒருவரே :

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்', 'ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வமும்' என்பர் திருமூலர். உடலுக்கு உயிர் ஒன்றே, அதுபோல உலகுக்குக் கடவுள் ஒருவரே. இருவர் மூவர் ஐவர் என்பது, உடலுக்கு உயிர் இரண்டு மூன்று ஐந்து என்பது போலாம். தெய்வங்கள் பல பல என்பார் திருவருள் விளக்கமில்லாதவர்கள், யானை கண்ட குருடர் போன்றவர்கள் என்பர் அடிகள். ''தெய்வங்கள் பல பல சிந்தை செய் வாரும்,சேர்கதி பலபல செப்புகின் றாரும், பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும், பொய்ச்சமயாதியை மெச்சுகின் றாரும், மெய்வந்த திருஅருள் விளக்கம் ஒன்றில்லார்'', ''எய்வகைசார் மதங்க ளிலே பொய்வகைச் சாத்திரங்கள் எடுத் துரைத்தே எமது தெய்வம் என்று கைவ கையே கதறுகின்றீர் தெய்வம் ஒன்றென் றறியீர் கரிபிடித்துக் கலகமிட்ட பெரிய ரினும் பெரியீர்'' என்பவை அடிகளின் திருவாக்குகள்.

## அவர் அருட்பெருஞ்சோதியார் :

ஒருவரே ஆகிய கடவுளை ஒளி (சோதி) வடிவில் வழிபட வேண்டும். ஒளி வழிபாடு எச்சமயத்தார்க்கும் பொருந்துவது. அடி கள் இளமையில் முருக உபாசகராகவும், பின்னர் சிவ பக்தராகவும், பின்னர் நட ராச அன்பராகவும் விளங்கினர். முடிவில் அருட்பெருஞ்சோதி அடியவரானர். சோதி வழிபாட்டையே வற்புறுத்தினர். அடிகளது முடிந்த முடிவான கொள்கை அருட்பெருஞ்சோதி வழிபாடே. அதற் கென அமைத்ததே உத்தர ஞான சிதம்பர மாகிய சத்திய ஞான சபை. அதற்கெனப் பாடியதே அருட்பெருஞ்சோதி அகவல். 'அருட்பெருஞ்சோதி, அருட்பெருஞ்சோதி' என்பது அடிகள் நமக்குத் தந்த மகா மந்திரம்.

## சிறு தெய்வ வழிபாடு கூடாது :

கருப்பு, காட்டேரி, பிடாரி முதலிய சிறு தெய்வங்களின் வழிபாட்டை அடிகள் வன் மையாகக் கண்டித்தார். அவற்றை 'நலி தரு சிறிய தெய்வம்', 'கலியுறு சிறிய தெய்வம்' என்கின்றார்.

கருப்பு, காட்டேரி, காளி, பிடாரி முதலிய சிறு தெய்வங்கள் ஆடு கோழிகளைப் பலி வாங்கின. பலி கொடுப்போர் வீரர் களானல், புலி, சிங்கம் முதலிய காட்டு விலங்குகளைப் பிடித்து வந்தல்லவோ பலி யிட வேண்டும். பலி கேட்கும் தெய்வங் களும் சக்தியுள்ளதாயிருந்தால், காட்டு விலங்குகளை யல்லவோ கேட்க வேண்டும். புலியையும் சிங்கத்தையும் வாகனமாக உடைய இத் தெய்வங்களுக்கு ஆடு கோழி எருமை பன்றிகளைப் பலி கொடுப்பானேன்? இவை சந்தையில் விற்பதாலா? சமைத்துத் தின்னும் ஆசையினலா? இக்காலத்தில் பலியிடுவதைத் தடுத்துச் சட்டமியற்றப் பட்டுவிட்டது. அடிகள் காலத்தில் சட்ட மில்லை, கேள்வி முறையில்லை. ஆயிரக் கணக்கான உயிர்கள் அங்கங்கே பலியா யின. அந்நாளில் அடிகள் உயிர்ப் பலியைக் கண்டித்துப் பாடியதன் பயனே, பின்னளில் பலித் தடைச் சட்டமாயிற்று.

## புலால் உண்ணலாகாது :

புலால் உண்பதைக் கண்டித்த அள வுக்கு அடிகள் வேறு எதையும் கண்டித்த தில்லை. புலால் மறுத்தலை வற்புறுத்திய அளவுக்கு வேறு எதையும் வற்புறுத்திய தில்லை. சாதி சமயம் முதலிய எல்லாவற் றுலும் ஒருமைப்பாட்டைக் கண்ட அடிகள், புலால் உண்பது ஒன்றை மட்டுமேகொண்டு மக்களை இரண்டு இனங்களாகப் பிரித்தார். 1. அக இனம், 2. புற இனம். புலால் உண்போர் புறவினத்தார். புலால் மறுத் தோர் அகவினத்தார். 'உயிர்க் கொலை யும் புலைப்பசிப்பும் உடையவர்களெல்லாம்

உறவினத்தாரல்லர். அவர் புற இனத்தார்' என இறைவனே தனக்கு அருளினன் என்பர். புலாலுண்பவராகிய புறவினத்தாரை அடிகள் தனது உடன் கூட்டத்திலும் சன்மார்க்க சங்கத்திலும் சேர்த்துக் கொண்டதே இல்லை. 'புலால் உண்ணும் மக்களைக் கண்டு மயங்கி உள்ளம் நடுங்கி ஆற்ருமல், எலும்பெல்லாம் கருக இளைத்தேன்' என இறைவனிடம் விண்ணப்பிக்கிருர். ஒருவன் ஆணைப் பெண்ணுக்கவும், பெண்ணை ஆணுக்கவும், இறந்தவரை எழுப்பவும் வல்லவனுயினும், அவன் புலாலுண்ணும் எண்ணமுடையவனுனல் ஞானியா கான் என்பது அடிகள் கொள்கை. இதைத் தமது குருவின் மீதும் இறைவன் மீதும் ஆணையிட்டு உரைக்கின்ருர். புலால் உண்ணும் பலரைப் புலால் உண்ணுதவராக மாற்றியிருக்கின்ருர். புலாலுண்பவரைச் சைவ உணவினராக மாற்றும் அற்புத ஆற்றலொன்று அடிகளிடம் காணப்பட்டதென்றும், அடிகளின் திருநோக்கம் ஒன்றே புலாலுணவில் ஒருவனுக்குள்ள ஆசையை ஒழிப்பதற்குப் போதுமானதென்றும் தொழுவூர் வேலாயுத முதலியார் கூறுவர்.

### சாதி சமய வேறுபாடுகள் கூடாது :

பிறப்பால் சாதி சமய வேறுபாடு கருதுவதை அடிகள் அறவே வெறுத்தார். சாதிகளும் சமயங்களும் பிறப்பால் ஏற்படவில்லை. தொழில் ஒழுக்கம் பற்றிச் சாதிகளும், தத்துவ ஒழுக்கம் பற்றிச் சமயங்களும் ஏற்பட்டன; இந் நாளில் அவை சமரச சன்மார்க்கம் விளங்குவதற்குத் தடைகளாக உள்ளன ; இத் தடைகள் தவிர்ந்தாலல்லாது இறையருள் கைகூடாது என்பது அடிகள் கொள்கை. மலை போன்ற இத் தடைகளை அடிகள் உளி கொண்டு பிளக்கவில்லை, வெடி வைத்தே தகர்த்தார், தூள் தூளாக்கினர். சாதி சமயங்களைக் கண்டித்துப் பாடிய பாடல்கள் பல.

'சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்! வீணே நீர் அலைந்து அலைந்து அழிதல் அழகல்லவே' என்பார். 'சாதி சமயங்களிலே வீதி பல வகுத்த சாத்திரக் குப்பைகள் எல்லாம் பாத்திரம் அன்று' என்பார். சாதியை வளர்க்கும் சாத்திரங்களைப் புன்செய் நிலத்துக்கு எருவாகப் போட வேண்டும், சாதி சமய மத வழக்கங்களைக் குழியில் தள்ளி மண்ணைப் போட்டு மூட வேண்டும் என்றும் கூறுவார். சாதி உடம்புக்கோ உயிருக்கோ என்பாராய் 'மேல் வருணம் தோல் வருணம் கண்டறிவார் இலை' என்பார்; 'எம்குலம் எம்இனம் என்பது தொண்ணூற்ரு றங்குலம்' என்பார். 96 அங்குலம்—எட்டுச் சாண். சாதி எண்சாண் உடம்புக்கே தவிர உயிருக்கில்லை என்பது கருத்து. சாதியும் மதமும் சமயமும் இறைவனைக் காணு என்பார், சாதியும் மதமும் சமயமும் பொய்யென இறைவன் உணர்த்தினன் என்பார். 'சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே' என இறைவனை வாழ்த்துவார். 'சாதி சமயச் சழக்கை விட்டேன் அருட்சோதியைக் கண்டேன்' என்பார். அந்தணர் சபாபதி சிவாசாரியர் முதல் பறையர் அமாவாசை வரை எல்லாச் சாதியாரும் அடிகளிடம் பழகினர். அடிகள் அனைவரையும் சமமாகவே கருதினர்.

### ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை :

எவ்வுயிரையும் தம்முயிர் போல் கருதுவதே ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை. இன்று நாம் பேசும் ஒருமைப்பாடு சாதாரண தேசிய ஒருமைப்பாடு (National Integration). ஆனல் அடிகள் கண்ட ஒருமைப்பாடோ அனைத்துலக (சர்வ தேச) ஒருமைப்பாடு (International Integration). அனைத்துலக ஒருமைப்பாடெனச் சொன்ணலும் சாலாது. அண்ட ஒருமைப்பாடு (Universal Integration) எனச் சொல்லல் பொருந்தும். அடிகளின் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுத் தத்துவத்திற்குமேல் ஒரு தத்துவம் இல்லை.

### சீவகாருண்ய ஒழுக்கம்

அடிகளின் கொள்கைகளுள் தலையாயது சீவகாருண்யம். 'சீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு' என்பது அடிகளின் கொள்கை. சீவகாருண்யத்தை அடிகள் இருவகையாக வற்புறுத்துவார். 1. புலால் மறுத்தல், 2. அற்ருர் அழி பசி தீர்த்தல். இவ்விரண்டையும் வற்புறுத்தி 'சீவகாருண்ய ஒழுக்கம்' என்னும் ஒரு நூலையே அடிகள் செய்திருக்கிருர்கள். ஏழைகளின் பசி தீர்த்தலாகிய சீவகாருண்ய ஒழுக்கத்தை நடத்தும் பொருட்டு, வடலூரில் சத்திய தரும சாலையை ஏற்படுத்தினர்கள்.

**புராணங்களும் சாத்திரங்களும் :**

வேதங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் கூறும் கதைகளையும் கற்பனைகளையும் அடிகள் ஒவ்வார். 'கலை உரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக' என்பார். புராணங்களும் சாத்திரங்களும் முடிவான உண்மை நிலையைத் தெரிவிக்க மாட்டா என்பது அடிகள் கருத்து.

**இறந்தவரைப் புதைக்க வேண்டும் :**

உயிர் நீங்கிய உடலைப் புதைக்கிறோம் அல்லது எரிக்கிறோம். இவ்விரண்டுமே உலகெங்கும் உள்ள பழக்கம். புதைப்பது மிகப் பழமையானது. எரிப்பது பின்னாளில் வந்தது. கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் புதைக்கிறார்கள்; எரிப்பதில்லை. நாம் இரண்டும் செய்கிறோம். துறவிகள் இறந்தால் எரிப்பதில்லை, சமாதி செய்கிறோம். குழந்தைகளும் கன்னிப் பெண்களும் சுமங்கலிகளும் இறந்தால் புதைக்கிறோம். அம்மை நோயால் இறந்தவர்களைப் புதைக்கிறோம். ஆயினும் புதைப்பது சிறுபான்மையாகவே இருக்கிறது. எரிப்பது பெரும்பான்மையாக உள்ளது. உயிர் போனபின் உடம்பை எப்படிச் செய்தாலென்ன எனச் சிலர் சமாதானமடைகின்றனர். புதைக்க வேண்டுமென்பதே அடிகள் கொள்கை. இதனை அடிகள் அழுத்தந் திருத்தமாகவும் வற்புறுத்தியும் கூறுகின்றார். எரிப்பவரை 'இனிச் சாகும் பிணங்களே' என்றும், 'கண்கெட்ட மாட்டினீரே' என்றும், 'இழுதையீரே' என்றும் சாடுகின்றார். 'பரன் அளிக்கும் தேகம் இது, சுடுவது அபராதம்', 'சுட்டால் அதுதான் கொலையாம்' என்று பாடுகிறார். சமாதி வற்புறுத்தலாக ஒரு பதிகத்தையே பாடியுள்ளார். சாமதி செய்வதை வற்புறுத்தித் தருமசாலையிலிருந்த அன்பர்களுக்கு எழுதிய கட்டளை 'சாலை சம்பந்திகளுக்கு இட்ட கட்டளை' என்றே வழங்குகிறது. புதைப்பது சிறந்ததா? எரிப்பது சிறந்ததா? என்ற வினா மேலை நாடுகளிலும் உள்ளது. அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் இதைப் பற்றித் தீராத விவாதஞ் செய்து கொண்டிருக்க, தத்துவ ஞானியாகிய நமது அடிகள் புதைக்க வேண்டுமென்று கட்டளையிட்டுள்ளார். சன்மார்க்க அன்பர்களும் அடிகளின் கட்டளையை அப்படியே பின்பற்றி வருகின்றனர்.

**சடங்குகள் வேண்டா**

இறந்தவர்களைக் குறித்துச் செய்யப்பெறும் திதி முதலிய சடங்குகள் தேவையற்றன என்பது அடிகள் கருத்து. தகனம் செய்யாமல் சமாதியில் வைக்க வேண்டும் என்றும், கர்ம காரியங்கள் ஒன்றும் செய்ய வேண்டாமென்றும் தெரிவிக்கத் தக்கவர்களுக்குத் தெரிவித்து ஒரு தினத்தில் நேரிட்டவர்களுக்கு நேரிட்ட மட்டில் அன்னதானம் செய்ய வேண்டும் என்றும் சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளையில் அடிகள் தம் கைப்படவே எழுதியிருக்கின்றார்.

**பொது நோக்கம் வேண்டும் :**

செய்கின்ற எல்லாச் செயல்களிலும் பொது நோக்கம் இருக்க வேண்டுமென அடிகள் வற்புறுத்துகின்றனர். கடவுள் வழிபாடு செய்வதுகூடத் தனக்கெனச் செய்யாது பொதுவாக எல்லாருக்குமாகச் செய்ய வேண்டும் என்பது அடிகளின் கொள்கை. இதைத் தமது உபதேசங்களில் பல இடத்தில் வற்புறுத்தியுள்ளார்.

# திருமூலர் காட்டும் கடவுள்

'திருக்குறள்வேள்' திரு. கு. வரதராசபிள்ளை அவர்கள், திருச்சிராப்பள்ளி.

**கடவுள் உண்மை :**

உலகத்தைக் காண்கிறோம். எத்துணையோ சீவராசிகள் உலகில் வாழ்கின்றன. அவையெல்லாம் ஒரு காலத்தில் தோன்றுகின்றன; இருக்கின்றன; பின் மறைகின்றன. இனி சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் முதலிய எண்ணற்ற கிரகங்கள் வான வீதியில் சுற்றிக்கொண்டு இருக்கின்றன. பருவ காலங்களில் காற்று வீசுகின்றது; பருவ மழை தவறாது பொழிகிறது. இத்துணையும் ஓர் ஒழுங்கில் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. அவ்வியக்கம் முறை தவறி மாறுபடுமாயின் என்ன நிகழும்? சிந்தித்துப் பாருங்கள். ஆதலால் இத்துணைக்கும் ஆதாரமாக இருந்து இயக்கிக்கொண்டு இருப்பதற்கு ஒரு பொருள் வேண்டும். அதுதான் கடவுள் என்பதாம். அதுவும் ஒன்றேயாகும். திருமூலர், ''ஒன்றே குலம்; ஒருவனே தேவன்'' என்று பறைசாற்றுகின்றார்.

இவ்வாறு கருணைபுரிந்து கொண்டிருக்கும் பெரும்பொருளை இல்லை என்று சொல்ல வேண்டாம் என்று ஆணையிடுகிறார். அப்பெருமான் புறத்தில் கடல்நீர் பொங்கி வாராது வடவாமுகாக்கினியைக் கடல் நடுவே வைத்தும், அகத்தே குடர்ப் பகுதியில் (Spleen Centre) சாடராக்கினியை வைத்தும் அழியாமல் காத்தருளுகின்றான். வடவாமுகாக்கினி இல்லையெனில் கடல்நீர் பொங்கி உலகம் அழியும். உடம்பில் குடர்ப்பகுதியில் அக்கினி இல்லையெனில் சீரணசக்தி இல்லாமல் உடம்பு அழியும். ஆக இவ்விரு உதவிகளை இறைவன் இடைவிடாது செய்வதைக் கண்டும் அவனை இல்லை என்று கூறலாமா என்று கேட்கிறார் ஆசிரியர்.

''வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே''

—திருமந்திரம், 23

**கடவுள் இயல்பு :**

இங்ஙனம் உலகத்தை ஒழுங்குபெற நடத்துகின்ற இறைவனாகிய சிவன் மிகுந்த ஆற்றலுடையவனாக இருக்க வேண்டும். சாதாரணமாக உலகியலில் ஒரு தொழிலை ஒழுங்காக ஆரம்பித்து நடைபெறச் சிறப்பு மிக்க ஆற்றல் வேண்டும் அல்லவா! அவ்வாறிருக்கப் பிரபஞ்சம் ஒழுங்குபெற நடைபெறுவதற்குச் சிறப்புமிக்க ஆற்றல் வேண்டுமே, அதுவே சத்தி என்பதாகும். இத்தகைய சத்தியோடு கூடியிருக்கின்ற சிவன் உயிர்களின் பொருட்டுப் பிரமன், திருமால் உருத்திரனாக இருந்து படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலைச் செய்கிறான். அவ்வாறு அவன் செய்கின்ற தொழில்களால் உயிர்கள் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களை அடைகின்றன.

இறைவன் இவ்வுறுதிப் பொருள்களை உயிர்கள் அடையுமாறு முத்தொழில்களைச் செய்தபோதிலும், அவ்வுயிர்களைப்போன்று உலக அனுபவத்தில் பந்தப்படமாட்டான். உலக அநுபவம் உயிர்களுக்கு மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐம்பொறிகளின் (அறி கருவிகள்) வாயிலாக வருகின்றது. அதனால் அவ்வுயிர்கள் இன்பமோ துன்பமோ அடைகின்றன. உலகப் பொருளைக் காணுகின்ற பொறிகளுக்குக் காட்டிக் காண்பது சீவன். உயிர்களுக்குப் பொருள்களைக் காட்டிக் காண்பவன் இறைவன். 'காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போற், காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்'' என்பார் மெய்கண்டார். ஆயினும் அவன் ஐம்பொறிகளின் வயப்பட்டு மயங்கமாட்டான். இறைவன் பொறிகளைக் கடந்தவன். ''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ்வார்'' என்பது பொதுமறையாகிய திருக்குறள்.

இனி, ஐந்து பொறிகளும் புறத்தில் புலனாகின்றன. கண்ணுக்குப் புலப்படாமல் நம் உடலில் ஆறு ஆதாரங்கள் அல்லது

இடங்கள் உள்ளன. அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன. அவற்றுள் மூலாதாரம் கருவாய் எருவாய் இரண்டுக்கும் இடையே இருப்பது; கருவாய் சுவாதிட்டானம்; மண்ணீரல் (Spleen Centre) மணிபூரகம்; இருதயம் (Heart) அநாகதம்; கண்டம் (Throat Centre) விசுத்தி; புருவ நடு ஆக்ஞையாகும். இந்த ஆறு ஆதாரங்களின் வழியே பல அனுபவங்களை உயிர்கள் பெறுகின்றன. இவற்றினூடே கலந்திருந்து உயிர்களுக்கு இறைவன் அனுபவத்தைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றான். ஆறு ஆதாரங்களுக்கு மேலாகச் சிரசின்மேல் ஏழாவது இடமாகிய சகஸ்ரதளம் என்ற ஆயிர இதழ்த் தாமரை ஒன்று உண்டு. அதற்குமேல் இறைவன் விளங்கிக் கொண்டு இருக்கின்றான். ஆறு ஆதாரங்களும் தூலமாகக் கண்ணுக்குப் புலனாகாவிட்டாலும் சூக்குமமாக உடம்பில் உள்ளன என்று உணர்தல் வேண்டும்.

இறைவன் நிலம் நீர் தீ காற்று ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களிலும், சந்திரன் சூரியன் ஆன்மா ஆகிய மூன்று பொருள்களிலும் கலந்து அவற்றின் இயக்கங்களுக்குக் காரணமாகவும் உள்ளான். இதனை அட்டமூர்த்தம் என்பர். இறைவன் ஒருவனே சத்தியோடு இரண்டாய், மும்மூர்த்திகளாய், உயிர்களுக்கு நான்கு உறுதிப் பொருள்களை அமைத்து, ஐந்து பொறிகளுக்கும் ஆற்றல் அளிப்பவனாய், ஆறாதாரங்களிலும் விரிந்து சகஸ்ரதளத்தின் மேல் பொருந்தி அட்டமூர்த்தமாயும் விளங்குகிறான்.

''ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே''
—திருமந்திரம், 1.

என்ற கடவுள் வாழ்த்துப் பாடல், இறைவனது இயல்பைத் தெளிவாய் விளக்குவதைக் காணலாம். அவனே சிவன் என்னும் பரம்பொருளாம்.

இனி, அட்டமூர்த்தமாய் விளங்கும் சிவபெருமான் ஒன்பது பேதமாக (நவந்தரு பேதம்) நடிக்கிறான் என்று சாத்திரம் கூறும். பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவம், விந்து, நாதம், சத்தி, சிவன் என்பன ஒன்பது பேதமாம். இவற்றுள் பிரமன் திருமால் உருத்திரன் மகேசுவரன் ஆகிய நான்கும் உருவமாகும். சதாசிவம் (இலிங்க வடிவம்) அருவுருவமாகும். இதனை உருவமாகவும் சொல்ல முடியாது; உருவம் இல்லை என்றும் சொல்ல முடியாது. ஆகவே இது அருவுருவமாகும். இதற்கு மேலாக விந்து நாதம் சத்தி சிவம் என்ற நான்கும் அருவம். ஆதலின் சிவம் ஒருவனே உருவாய் அருவுருவாய் அருவாய் ஒன்பது பேதமாக உயிர்களை ஆட்கொள்ளும் பொருட்டு நடிக்கிறான். ''அருவாய் உருவாய் அருவுருவாகிக் குருவாய் வரும்'' என்பது அவர் வாக்கு.

**உண்மை (சொரூப) நிலை :**

இத்துணை பேதங்களாக நடிக்கினும் சிவனுக்கு ஒரு நாமம் இல்லை. ஓர் உருவம் இல்லை. ஓர் ஊர் கிடையாது. நன்றுடையானாதலின் தீமையே இல்லாதவன். அவனே தேவர்களுக்கும் தேவனாவான்.

''உருவிலி ஊனிலி ஊனமொன் றில்லி
திருவிலி தீதிலி தேவர்க்குந் தேவன்''

என்பது அவர் வாக்கு. மாணிக்கவாசகப் பெருமான், ''ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'' என்று கூறுகிறார்.

**பொது (தடத்த) நிலை :**

ஆனால் நாமரூப பேதம் இல்லாதவனாயிருந்தும், அவனை இல்லாதவன் என்று கூற முடியுமா? அப்பெருமானுக்கு ஏழுலகமும் உருவமாகும்; அண்டமுகடு அவனுக்குத் திருமுடி; பாதாளம் அவனது திருவடி.

''முத்தண்ட வீரண்ட மேமுடி யாயினும்
அத்தன் உருவம் உலகே ழெனப்படும்
அத்தனின் பாதாளம் அளவுள்ள சேவடி
மத்தர் அதனை மகிழ்ந்துண ராரே''
—திருமந்திரம், 3004.

என்று அவனது அகண்டத் திருமேனியைப் போற்றுகிறார். ''பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர், போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே'' என்ற மாணிக்கவாசகர் வாக்கையும் ஒப்புநோக்கி மகிழ்க.

அதே சமயத்தில் அண்டத்தைக் கடந்து விளங்கும் பெருமையனுயினும் உயிர்களது உடம்பினுள் பொருந்தியிருக்கும் சிறுமையனுவான். ''அண்டம் கடந்துயர்ந்தோங்கும் பெருமையன் பிண்டம் கடந்த பிறவிச் சிறுமையன்'' பிண்டங்கள் அல்லது உடம்புகள் தோறும் உணர்வாக, உயிராக, புணர்வாக, புலவியாகச் சிவசத்தியினிடம் உள்ளான் இறைவன்.

''உணர்வும் அவனே உயிரும் அவனே
புணர்வும் அவனே புலவி அவனே
இணரும் அவன்தன்னை எண்ணலு மாகான்
துணரின் மலர்க்கந்தம் துன்னிநின் ருனே''
—திருமந்திரம், 2857.

இவ்வாறு ''பார் பதம் அண்டம் அனைத்துமாய்''ப் பரந்திருந்து உயிர்தொகுதிகளின் இதயத் தாமரையிலே உணர்வாக உயிராக இருக்கும் எளிமையனுமாவான்.

''இல்லதும் உள்ளதும் யாவையும் தானுகி
இல்லதும் உள்ளது மாயன்ரும் அண்ணலைச்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமென்
ருெல்லை உணர்ந்தால் உயிர்க்குயி ராகுமே''
—திருமந்திரம், 2335.

சிவபெருமான் எல்லாமாய் அல்லதுமாய்ப் பெருமைக்கும் பெருமையனுய்ச், சிறுமைக்கும் சிறுமையனுய் விளங்குபவனுவான்.

**சிவனது பெருமை :**

சிவபெருமானுக்குப் பெருமை கூற வந்த ஆசிரியர், அவன் பிரமன், திருமால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் ஆகிய ஐவருக்கும் ஆதியாவான். அவனே பிரமனுய்ப் படைத்தும், திருமாலாய்க் காத்தும், உருத்திரனுய் அழித்தும், மகேசுவரனுய் மறைத்தும், சதாசிவனுய் அருளியும் உலகினைப் புரந்து வருகின்ருன் என்கின்ருர். (404)

மாணிக்கவாசகர்,''படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை, காப்போற் காக்கும் கடவுள் காப்பவை, கரப்போன் கரப்பவை கருதாக் கருத்துடைக் கடவுள்'' என்று கூறுவதும் இக்கருத்தை வலியுறுத்துவது ஆகிறது.

படைத்தற் கடவுள் ஆகிய பிரமனும், காத்தற் கடவுளாகிய திருமாலும், நாமே பரம்பொருள் என்று ஒருகால் தருக்கி வாதிட்டனர். ஆனுல் சிவபெருமான் சோதிப் பிழம்பாகக் காட்சியளித்தபோது அவனது அடியையும் முடியையும் அவ்விருவரும் காணமுடியாது தவித்தனர் என்று புராணம் கூறும்.

''பிரமனும் மாலும் பிரானே நான் என்னப்
பிரமன் மால் தங்கள்தம் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்து முன்நிற்க
அரனடி தேடி அரற்றுகின் றேனே''
—திருமந்திரம், 372.

பிரமனும் மாலும் சிவனது அகண்ட வியாபகத்தில் அடங்கியிருப்பவராதலின், சிவனது முழு வடிவத்தையும் அறிய முடியாதவராயினர் என்பதே அதன்பொருள்.

"பிரம னரியென் றிருவருந்தம் பேதைமையால்
பரம மியாம்பரம் என்றவர்கள் பதைப்
பொடுங்க''

என்ற மாணிக்கவாசகர் வாக்கை ஒப்பு நோக்குக. இங்ஙனமாதலின்,

''சிவனேடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனேடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னெளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே''
—திருமந்திரம், 5.

சிவனுக்கு ஒப்பாகவுள்ளவர் யாவரும் இல்லை. அவனது பெருமையை யாராலும் அறிய முடியாது. அவன் அகண்டப் பொருளாதலின் எத்துணை அகலம் எத்துணை நீளம் என்று யாரும் அளவிட்டுக் கூறமுடியாது.

''ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
யாரறி வார்இந்த அகலமும் நீளமும்
பேரறி யாதபெருஞ் சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே''
—திருமந்திரம், 95.

என்று பெருஞ்சுடராக விளங்கும் பொருளின் வேரையும் காணுது, அதன் பெருமையை விளம்ப முற்படுகின்றேனே என்று ஆசிரியர் அங்கலாய்க்கிருர்.

கடவுள் என்ற பொருள் உண்டு என்பதும், அக்கடவுள் சிவன் என்பதும், அவன் உருவாய் அருவுருவாய் அருவாய் இவை கடந்ததாய் உள்ளான் என்பதும், அவன் அளக்கலாகாப் பெருமையும் அருமையும் உடையவன் என்பதும், புலனுகும் வண்ணம் ஆசிரியர் விளக்கியமை அறிந்து போற்றற்பாலது.

*

# அங்கயற்கண்ணி ஆனை விடு தூது

கவிஞர், புலவர் திரு. நெல்லை ஆ. கணபதி, எம். ஏ.

*[இதில் யானையைத் தூதுவிட அழைத்தல், அதற்குரிய காரணங்கள், யானையின் வேறு பெயர்கள், மதுரையின் மாட்சி, தோன்றிய வரலாறு, சங்கங்கள் வைத்தது, மீனாட்சியம்மையின் பிறப்பு, மதுரையை அரசாண்ட கதை, வடதிசைக்கு மீனாட்சியம்மை திக்குவிசயம் செய்தது, கயிலையில் முக்கண்ணனைக் கண்டது, காதல் கொண்டது, மதுரைக்குத் திரும்பித் திருமணம் செய்தது, மதுரையின் பல்வேறு சிறப்புக்கள், மீனாட்சியம்மையின் அரசுரிமைப் பகுப்புகள் ஆகிய மலை, நதி, நகர், காடு, மாலை, யானை, குதிரை, கொடி, முரசு, ஆணை போன்றவை கூறப்பட்டிருக்கின்றன. இதன்கண் 42 முதல் 48 வரையுள்ள கண்ணிகளில் அமைக்கப்பெற்றுள்ள குறிப்புச் சொற் பொருள் நலச் சிறப்புக்கள், பாராட்டுதற்குரியவை.*

*—ஆசிரியர்.]*

(காப்பு)

சீர்திகழும் கூடல் திருமதுரை மீனாட்சி
பேரிலொரு தூதுப் பிரபந்தம்!—நூறுவரி
நூலாய் இயற்றிடுமென் நோக்கம் நிறைவேற
ஆலவாய்ச் சொக்கா! அருள்!

(நூல்)

பிள்ளை முகமும்! பெரும்உருவும்! பாகனவன்
கிள்ளை மொழியினையே கேள்காதும்!—கொள்ளை இன்பம்

கண்டோர் அடையும் கவின்சிறப்பும்! போர்வேந்தர்
திண்டோள் துடிக்கச் செயும்திறனும்!—மண்ணுலகில்

அன்பிற்கே என்றும் அடிபணியும் நற்பாங்கும்!
பண்பில்லை என்றாலோ பாய்சினமும்!—எந்நாளும்

நம்பிக்கை கொண்டோர் நலனடைவார் என்பதனைத்
தம்பி கலப்புமணம் தான்செய்யத்—தும்பிக்கை

காட்டிக் குறவள்ளி காதல் நிறைவேற
ஆட்டிப் படைத்ததுவும்! ஆய்ந்ததனால்—பாட்டெழுதிக்

கூடல் நகரில் குடிகொள்ளும் மீனாட்சி!
ஆடல் அரசன் அவன்மனைவி!—பாடலெனின்

சின்னஞ் சிறுபெண்ணாய்த் தேடி அவைக்களத்தில்
முன்னம் இருந்தே முறுவலிக்கும்—அன்னவளைக்

கண்டு கவிஞன் கருத்தை எடுத்துரைக்கும்
தொண்டு இதுவென்றே தூதுரைப்பாய்! உண்டுபல

தூது உரைக்கும் தொழில்வல்ல ஆருயிர்கள்!
யாதும் உனக்கேஇணையாமோ?—மாதங்கம்!

வேழம்! களபம்! வியன்பகடு! கம்பமா! வாய்
நூலில் பலஉண்டு நும்பெயர்கள்!—கோலஞ்செய்

துங்கக் கரிமுகமென் றும்துதிப்பர்! மேலும் நீ
எங்கும் விரும்பும் இயல்புடையாய்!—அங்குசத்தார்

கைம்மாறே இன்றிக் களிப்படைவார்! ஆகையினால்
கைம்மா எனும்பேரும் கண்டுள்ளாய்!—பொய்ம்மாந்தர்

செய்யும் பழிக்குத் திருப்பிப் பழிவாங்கிக்
கொய்யும் உறுதிக் குணமுடையாய்!—வையகத்தில்

யானைவரும் பின்னே மணி யோசைவரும் முன்னேயென்றும்,
ஆனை இருந்தாலும் ஆயிரம்பொன்!—ஆனை

இறந்தாலும் ஆயிரம்பொன்! என்றும் புகழால்
சிறந்தாலும் நீதான் சிறந்தாய்!—அறைந்தாலும்

உன்முதுகில் ஏறித்தான் ஊரில் முரசறைவார்!
என்பதெல்லாம் எண்ணி எனக்காக—மன்பதையைக்

காக்கும் தலைவி! கருணைமிகு மீனாட்சி!
வாக்கும் செயலும் வளமடைய—ஆக்கமதைச்

செய்யும் இறைவி! திருதடாத கைப்பிராட்டி!
ஐயை! கயற்கண்ணி அம்பிகைதான்—வையகத்தின்

தேவி மலயத் துவசன் திருமகளாய்
மேவிப் பசுந்தமிழ்தான் மேலோங்கப்—பாவினங்கள்

காணும் புலவர் கடைத்தேறச் சங்கங்கள்
மூணும் அமைத்து மொழிகாத்துப்—பேணியவள்!

அன்னை மலைவல்லி! அம்மை! அபிராமி!
தன்னை வணங்குபவர் தம்வாழ்வு!—பன்னலமும்

கூடிப் பெருகுவதால் கடல் எனச்சான்றோர்
நாடி அழைத்தாரோ! நன்மாடம்—கூடியதால்

நன்மாடக் கூடலென நல்லோர் அழைத்தாரோ?
எந்நகரும் ஈடு இணையின்றித்—தன்னளவில்

கூடி வருவதனால் கூடலெனச் சொன்னாரோ!
நாடித் திசைவணிகர் நாள்தோறும்—தேடிவந்த

எந்நாட் டவர்க்கும் இறைவன் எனவாழும்
தென்னா டுடைய சிவன்போற்றிப்—பன்னாளும்

கூடும் நகர்சந்தை கூடலென ஆயிற்றோ?
பாடும் புலவர் படைச்சங்கம்—கூடியதால்

கூடலென ஆயிற்றோ? கோவேந்தர் பாண்டியரைத்
தேடிப் பரிசில் தினம் அடைவோர்—நாடிநிதம்

கூடுமிட மானதினால் கூடலென மாறியதோ?
ஆடல் அரவனவன் அம்பிகையைக்—கூடும்ஊர்

ஆனதினுல் கூடல் அமைந்ததுவோ? யாரறிவார்?
வானவரும் தேடி வரும்ஊராய்ப்—போனதுவோ?

ஆலைகள்தாம் கண்டதினுல் ஆலவாய் என்றுதமிழ்
நூலில் படைத்தாரோ? நுண்புலவர்—காலைமுதல்

மாலைவரை வாயால் மதுரத் தமிழ்க்கரும்பை
ஆலைபோல் நன்ருய் அரைத்ததினுல்—ஆலவாய்

என்ருல் மதுரம் இருக்கும் இடம்மதுரை
அன்றன்ரே! மாறன் அவன்முடவன்!—நன்றுஇடைச்

சங்க முடிவில் தலைநகராய் மாமதுரை
இங்குகடைச் சங்கம் இயற்றினுன்! சங்கமதன்

ஈற்றில் வழுதி இருந்தாண்டான்! யாவருமே
போற்றி வணங்கிப் பொழுதெல்லாம்—தோற்றுவித்த

ஆடித் திருநாளும் ஆவணிமூ லத்திருநாள்
கோடை முழுநிலாநாள் கூடுபவர்—கோடியிலும்

கூடி இருப்பார்கள்! கூக்குரலோ வானுலகைத்
தேடி இருக்கும்! செவியுடைக்கும்!—மாடுகட்டிப்

போரடித்தால் செந்நெல்தான் போகாது என்றுயானை
நூறுகட்டிப் போரடித்த நூற்சான்று—பாரறியும்

அங்கே வசிப்போர் அடைவார்நற் பேறுகளை
எங்கே நினைத்தாலும் இன்பொருள்தான்—பொங்கிவரும்

சீர்த்தி வளரும்பேர் கேட்டால் அறம்பெருகும்!
மூர்த்தி தலம்தீர்த்தம் முக்திதரும்!—பார்த்தெழுதி

உள்ளத்திற் சுந்தரனுர் ஓவியமாய் வைத்திருந்தே
கள்ளத் தனமாகக் கங்கையெனும்—வெள்ளத்தாய்

காணுத போதிவளைக் காதலித்தான்! அக்கயிலை
ஆணழகன் மீ(து)இவளும் அன்புகொள—நாணமெழ

முக்கண்ணப் பன்பார்க்க முத்திருமார் போஅகல
அக்கணமே அன்பழகன் ஆசியுடன்—இக்கணம் நீ

செல்மதுரை யாமும் திருமணம்தான் அங்குவந்து
கொள்வோமென அன்பில் குழைத்தொருசொல்—சொல்லியதும்

நாரா யணசாமி ராமன் இவள்அண்ணன்
பேரைத் தொழுதாள்! பெருஞ்செழியன்—ஊர்மதுரை

ஆதித்தன் தோன்ற அடைந்தாள்! நடராச
மாதவனை வா!நீ மணம்முடித்தே—ஆதரவாய்த்

தங்குஇரா சாராம், சந்திரன்போல் சண்முகமும்
பொங்கிச் சிதையாமல் போய்விடவென்—றங்குரைத்த

வார்த்தை நினைத்தாள்! வளர்காதல் பாசாங்கு
சேர்த்துச் சிரித்தாள்! தெரியாமல்—பார்த்தவர்கள்

என்ன இதன்பொருள்தான் என்றுலோ செந்தமிழின்
மன்னன் கருணைநிதி மட்டும்தான்—என்னையுணர்

வானென்றே எண்ணினாள்! வாளாது வீற்றிருந்தாள்!
போஎன்றே வந்தவரைப் போச்சொன்னாள்!—மாவீரம்

கொண்டே அரசுக் கொலுவிருந்த ஆற்றலெல்லாம்
உண்டோ எனும்ஐயம் உண்மையில்நாம்—கொண்டிடவே (50)

வாடி இருந்தாள்! வதுவை மணம்முடித்தாள்!
தேடிப் பழனிமலைத் தெய்வமகன்—நாடியபின்

கங்கை நதியாளின் கர்வம் அடக்கவைகை
இங்கே தவழட்டும்! எனச்செய்தாள்!—பொங்கிவரும்

ஆற்றை எதிர்த்தே அழகுதமிழ் ஏடுவரும்
சிற்றம் உடைய திருநாடு!—நேற்றுமின்றும்

என்றும் தமிழ்வளர ஏற்றமிகு பொற்கிழிதான்
ஒன்றை அளிக்கும் ஒருநகரம்!—கொன்றைப்பூ

மாலை யணிந்தார் மனைவி! பவளம்பொன்
மாலை யுடன்தமிழ்ப்பா மாலையினை—வேளையெல்லாம் (55)

தாங்கி இருப்பாள்! தமிழ்போல் மிகநன்றாய்
ஓங்கிவளர் யானை உலாவருவாள்!—வேங்கடத்தைத்

தாண்டும் குதிரைச் சவாரி வடதிசையில்
வேண்டும் பொழுதில் விரைந்தெழுவாள்!—ஆண்டபெரு

மானின் அவதார மச்சக் கொடி ஏற்றி
நாளுமர சாணை நடத்திடுவாள்! ஏழுலகும்

இன்பத் தமிழ்தான் எதிரொலிக்கும் பண்முரசை
அன்பாய்த் தினமும் அறைந்திடுவாள்!—மென்மொழிதான்

பேசும் கிளிபோல் பிடித்திருக்கும் பொற்கிளியை
வாசல் அடைந்தே வணங்கிவாய்—கூசாமல்

கேட்டுப்பார்! செம்பொற் கிளியைப் பரிசளிப்பாள்!
ஓட்டமாய் வா! வா! உடன்! (61)

# திருநல்லூர்ச் சிறப்பு

158591

திரு. என். சதாசிவ ஸ்தபதி,
கும்பகோணம்.

இம்மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும் அண்ணலாரை வழிபடுத லாகும். அவ்வாறு வழிபடுதற்குரிய இடங்களில், மூர்த்தி தலம் தீர்த்தம் பாடற் சிறப்பு விழாப் பொலிவு இவற்றுடன் விளங்கும் இத் திருநல்லூர், மிகப் பெருமையுடைதாகும்.

## இருப்பிடம் :

பொன்னம் பாலிக்கும் பொன்னியாகிய காவிரிக்குத் தென்கரையில் தஞ்சை மாவட்டம் பாவநாசத்திற்குக் கிழக்கு மூன்று கல் தொலைவில் உள்ளது.

## கோவில் அமைப்பு :

சம்பந்தர். அப்பர் இருவராலும் தேவாரப் பாடல்பெற்ற இத்திருக்கோயில் கோச் செங்கட் சோழனல் கட்டப்பட்ட எழுபது மாடக்கோயில்களில் ஒன்ருகும். ஏறத்தாழ 14 அடி உயரத்தில் கட்டு மலை மீது சுவாமி, அம்பிகையின் திருக்கோயில்கள் உள்ளன. இத்தகு இக்கோயிலை ஞான சம்பந்தர் ''மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே'' எனப் பாடியுள்ளார்.

## மூர்த்திகள் :

இத்தலத்து ஏகநாத நாயகராகிய இறைவன் ''சுந்தரநாதர், பஞ்சவர்ணேசுவரர், கலியாணசுந்தரர், ஆண்டார் எனப் பலத் திருப்பெயர்களுடன் சுயம்பு மூர்த்தியாய் விளங்குகிருர். பகல் 30 நாழிகையிலும் ஆறு நாழிகைக்கு ஒரு தடவை வெவ்வேறு வண்ணத்துடன் ஐவகை வண்ணத்துடன் தோன்றுகின்ருர். அம்பிகை கல்யாண சுந்தரி, வண்டுவாழ் குழலி, திருமலைச் சொக்கி என்ற பெயர்களுடன் அழைக்கப் பெறுகிருர். இன்னும் மற்ற பரிவார மூர்த்திகளும் சிறப்புடன் இங்கு உள்ளன.

அவற்றுள் தெற்குப் பிராகாரத்தில் வீற்றிருக்கும். அஷ்டபுஜ மகாகாளி இத் தவத்திற்கு வரும் பத்தர்களுக்கு மகா வரப்பிரசாதியாக இருந்து வேண்டும் வேண்டுதலுக்கு அருள்புரிகின்ருள்.

## தீர்த்தம் :

இத்தலத்தில் விளங்கும் தீர்த்தங்கள் பலவற்றுள், திருக்கோயிலுக்கு முன்னுல் பெரும்பரப்பில் பன்னிரு படித்துறைகளுடன் விளங்கும் ''சப்தசாகரம்'' என்னும் தீர்த்தம் மிகச் சிறப்புடையது. இத்திருக்குளமானது தன்பால் நீராடியோரது பிறவிப் பிணியையும் போக்கும் உடன் பிறவா மருந்தாய் விளங்குகிறது. அங்கமெலாம் குறைந்தழுகத் தொழு நோயினல் வருந்துபவராயினும், ஒரு மண்டலகாலம் இக் குளத்தின் பன்னிரு துறைகளிலும் நீராடி, இவ்வாலயத்தையும் பன்னிருமுறை வலம் வருவரேல் அவர்தம் பெருநோய் விலகும். பாண்டவர்களின் தாயாகிய குந்திதேவிக்காகச் சிவபிரான் இத்திருக் குளத்தில் ஒரு மாசி மகத்தன்று ஏழுகடலையும் வருவித்த காரணத்தால் 'சப்தசாகரம்' ஏழுகடல் என, இக்குளம் இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது.

## புராணச் சிறப்பு :

இத்தலத்தின் பெருமையைப் பவுடிகோத்திரம், பிர்மாண்டம், காருடம் என்றும் வடமொழி நூல்களிலும், வைத்தியநாத நாவலர் எழுதிய 1,000 பாக்களுக்குமேல் அமைந்த திருநல்லூர்ப் புராணம் என்னும் தமிழ் நூலிலும் விரிவாகக் காணலாம்.

## வழிபட்டு உயர்ந்தோர் :

அகத்தியர் வழிபட்டு அம்மையப்பரின் திருமணக்கோலத்தை இங்குக் கண்டுகளித்தார். பிரமன், திருமால். தேவர்கள், பிருங்கி மற்றும் பலமுனிவர்களும் அடியவர்களும் வழிபட்டு உய்ந்தனர்.

**அமர்நீதி நாயனர் :**

பழையாறை நகரில் தோன்றிய வணிகர் குலக் கோவலனுகிய அமர்நீதியார் இத்தலத்தில் திருமடம் கட்டிக்கொண்டு வாழ்ந்து அடியவர்களுக்குக் கோவணம், ஆடை, அமுது, அளித்துப் பின் இறைவனுல் ஆட்கொள்ளப் பெற்ருர்.

**திருநாவுக்கரசர் :**

சொல்லின் வேந்தராகிய திருநாவுக்கரசர் திருச்சத்திமுற்றம் என்ற தலத்தில் எமபயம் அகலத் தம் தலைமீது இறைவனை திருவடி சூட்டி அருளுமாறு வேண்டினர். அதற்கு இறைவன் இத்தலத்திற்கு வருமாறு பணிந்து தம் திருவடியை அவர் தம் தலையில் சூட்டியருள அதனுல் மகிழ்ந்த திருநாவுக்கரசர்.

நினைந்துருகு மடியாரை நையவைத்தார்
  நில்லாமே தீவினைகள் நீங்கவைத்தார்
சினந்திருகுகளிற்றுரிவைப் போர்வைவைத்தார்
  செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்தவானேர்
இனந்திருவி மணிமகுடத் தேறத்துற்ற
  இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல்வைத்தார்
  நல்லூரெம் பெருமானர் நல்லவாறே.

என்று பாடி அக மகிழ்ந்து இத்தலத்தே பன்னள் தங்கிப் பெரும்பேறு பெற்ருர்.

தேவாரத்தில் சம்பந்தர் அப்பர் பாடலையும், அருணகிரியாரது திருப்புகழ்ப் பாடலையும் பெற்ற இத்தலம், திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமாய் விளங்குகிறது.

ஆகவே பல்வகைச் சிறப்புகளையும் ஒருங்கே அமையப் பெற்று விளங்கும் இத்தலத்தினை, அன்பராயினேர் தரிசித்துப் பெரும் பயன் பெறுவார்களாக!

திருச்சிற்றம்பலம்.

---

**ஒரு நாள் காண வாராயே !**

மாயக் கூத்தா! வாமனு! வினையேன் கண்ணு! கண்கைகால்
தூய செய்ய மலர்களாச் சோதிச் செவ்வாய் முகிழதா,
சாயல் சாமத் திருமேனி தண்பா சடையா! தாமரைநீள்
வாசத் தடம்போல் வருவானே! ஒருநாள் காண வாராயே!

**ஒரு நாள் வந்து தோன்ருயே !**

கொண்டல் வண்ணு! குடக்கூத்தா! வினையேன் கண்ணு! கண்ணு! என்
அண்ட வாணு! என்றென்னை ஆளக் கூப்பிட் டழைத்தக்கால்,
விண்டன் மேல்தான் மண்மேல்தான் விரிநீர்க் கடல்தான் மற்றுத்தான்
தொண்ட னேன்உன் கழல்காண ஒருநாள் வந்து தோன்ருயே!

**குருகூர்ச் சடகோபன் !**

'எங்கே காண்கேன் ஈன்துழாய் அம்மான் தன்னையான்?' என்றென்று
அங்கே தாழ்ந்த சொற்களால் அந்தண் குருகூர்ச் சடகோபன்,
செங்கேழ் சொன்ன ஆயிரத்துள் இவையும் பத்தும் வல்லார்கள்,
இங்கே காண இப்பிறப்பே மகிழ்வர் எல்லியும் காலையே.

—நம்மாழ்வார்.

—oOo—

# "கல்வெட்டுக்களில் சித்திரைத் திங்கள்"

திரு. கே. சிதரன், எம். ஏ.,
திருவரங்கம்.

''மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்'' கலந்த மாதமான சித்திரைத் திங்களுடன் தமிழர்களின் ஆண்டு துவங்குகிறது. சித்திரை மாதம் இளவேனிற் காலமென அழைக்கப்படுகிறது. இம்மாதத்தில் இன்பத்தைத்தரும் வசந்த காலம் தொடங்குகிறது. மாரவேள் விழாக் காலமென, சித்திரை, பங்குனி மாதங்கள் இலக்கியங்களில் போற்றப்படுகின்றன. மாந்தளிர் விரிய வருகின்ற இளவேனிற் காலம் என்று பரிபாடல் போற்றுகின்றது.

''வரி யரி ஆனு முகிழ்விரி சினைய
மாந்தீந்தளிரொடு வாழை இலை மயக்கி
ஆய்ந்து அளவா ஒசை அறையூஉப்பறை அறையப்
போந்தது வையைப் புனல்.''

—பரிபாடல்

**சித்திரையின் சிறப்புகள் :**

சேக்கிழார் பெரிய புராணத்தை ஒரு சித்திரைத் திருவாதிரை நாளில் தொடங்கி அடுத்த சித்திரைத் திருவாதிரையில் முடித்தருளினர். திருஞான சம்பந்தர் திருப்பதிகம் அருளிச் செய்யத் தொடங்கியதும் சித்திரைத் திருவாதிரை நாளாகும். அப்பர் சிவஞான வடிவாக இறைவன் திருவடி நிழல் அடைந்ததும் சித்திரைச் சதய நாளாகும்.

**கல்வெட்டுக்களில் சித்திரைத் திங்கள் :**

இத்தகைய சிறப்புகளைப் பெற்ற சித்திரைத் திங்களில் விழாக்களை நடத்தத் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் தானமளித்து, அதைக் கல்வெட்டுக்களாகப் பொறித்தனர். அக் கல்வெட்டுக்கள் கூறும் சில செய்திகளை இனி நோக்குவோம்.

நன்னிலம் தாலுக்காவைச் சேர்ந்த திருச்செங்காட்டங்குடிக் கோயிலில் சித்திரைப் பரணித் திருவிழாவின் போது, இறைவனுக்குவேண்டிய பிரசாதங்களைப் படைக்கத் திருச்சிற்றம்பலப் பல்லவரையன்என்பவன், நிலம் தானமாக அளித்தான் என்று மூன்றாம் இராசேந்திரன் காலத்துக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. (1913-இன் 69). சுந்தர மூர்த்தி நாயனாரான நம்பியாரூரரின் கோயிலில், சித்திரை விழா நடத்துவதற்கு உரிய செலவுக்காக ஒருவர் நிலம் ஒன்றும், வீடு கட்டும் மனையொன்றும், தானமாக அளித்தார் எனத் தஞ்சை மாவட்டம் கூகூர்க் கோயிலில் உள்ள முதலாம் இராசராசன் கல்வெட்டு கூறுகின்றது. சிதம்பரத்தில் மூன்றாம் குலோத்துங்கன் செய்த திருப்பணிகளைப் பற்றிக் கூறும் பொழுது, அவன் சித்திரை விழா நடத்தியதாக அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது.

''எத்தரையும் தொழும் இறைவற்கு
எதிரம்பலம் செம் பொன் வேய்ந்து
சித்திரை விழா அமைத்து இறைவி
திருக்கோபுரஞ் செம் பொன் வேய்ந்து''

என்பது மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டு.

தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவக்கரைக் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்திலும், புரட்டாசி மாதத்து ஓண நட்சத்திரத்திலும், இறைவனுடைய சிறப்பான திருமஞ்சனத்திற்குத் தானமளிக்கப்பட்டது என்று முதலாம் ஆதித்தனது 16-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கூறுகின்றது.

சித்திரை மாதத்தில் பத்து நாட்கள் திருவிழா நடத்தத் தானமளிக்கப்பட்டதாக 23-ஆம் ஆண்டு மாறவர்மனுடைய வெள்ளனூர்க் கல்வெட்டு கூறுகின்றது.

(1914-இன் 207) இம் மாதத்தில் இறைவன் முன்பு சாந்திக் கூத்து ஆடுவதற்காக பெண் ஒருத்திக்கு நிலம் வழங்கப்பட்டதாக விக்கிரம சோழனின் 14-ஆம் ஆண்டு திருவேங்கவாசல் கல்வெட்டு கூறுகின்றது. (1914-இன் 253). சோழப் பேரரசியான செம்பியன் மாதேவியின் பிறந்த நாளான சித்திரை மாதத்தின் கேட்டை நாள், செம்பியன் மாதேவி கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சித்திரை விழாவையொட்டித் தரிசனம் செய்ய வரும் அந்தணர்களுக்கும், சிவ யோகிகளுக்கும் உணவு அளிப்பதற்காக நன்கொடை வழங்கப்பட்டதாகத் திருச்சி மலைக்கோயில், திருநெடுங்குளம் ஆகிய கோயில் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

### கல்வெட்டுகளில் தண்ணீர்ப் பந்தல் :

சித்திரை மாதத்தில் வெய்யிலின் வெம்மையால் நாவறட்சி தோன்றும். இதைத் தணிப்பதற்காக மக்கள் செல்லும் வழிகளில், தண்ணீர்ப் பந்தல்கள் வைத்திருப்பர். இம் மாதிரியான தண்ணீர்ப் பந்தல்கள் அக்காலத்தில் இருந்தன எனச் சில கல்வெட்டுகள் கூறுகின்றன.

முதலாம் இராசராசனின் பணிமகனுன கண்ணன் ஆரூரன் என்பவன், உக்கல் பெரு வழியில் இராசராசன் பெயரால் ஒரு கிணறும், தண்ணீர்த் தொட்டியும் அமைத்தான். கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பாருக்கும், தண்ணீர்ப் பந்தலில் நீர் வழங்குபவர்க்கும் கூலியாக நாள் தோறும் இரண்டு குறுணி நெல் தானமாக அளித்தான் என்று உக்கல் கல்வெட்டு கூறுகின்றது (1893-இன் 22).

நாகநந்தி கிரமவித்தன் என்பவன் உத்திரமேரூர்க் கோயில் பிரமாண மண்டபத்தில் பங்குனி மாதம் முதல் கார்த்திகை மாதம்வரை ஒரு தண்ணீர்ப்பந்தல்அமைக்க 25 கழஞ்சுப் பொன்னை நன்கொடையாக அளிக்க, அந் நன்கொடையைப் பெற்ற உள்ளூர்ச் சபையினர் அவ்வறத்தைப் பாதுகாக்கும் ஏரி வாரியத்தாரிடம் ஒப்படைத்ததாக இராசகேசரிவர்மன் 26-ஆம் ஆண்டுக் கல்வெட்டு கூறுகின்றது.

ஆகவே இத்தகைய சிறப்பு வாய்ந்த ''சிவம் பெருக்கும் சித்திரை'' மாதத்தில் எல்லா நலன்களையும் அடைய இறைவனைப் போற்றி வணங்குவோமாக!

---

### மற்றொன்று இலம் கதியே

தாள தாமரைத் தடமணி வயல்திரு மோகூர்
நாளும் மேவிநன்கு அமர்ந்துநின்று அசுரரைத் தகர்க்கும்,
தோளும் நான்குடைச் சுரிகுழல் கமலக்கண் கனிவாய்க்,
காள மேகத்தை அன்றி, மற் றொன்றிலம் கதியே.

### கெடும் இடராய எல்லாம்

கெடும் இட ராய எல்லாம் கேசவா என்ன, நாளும்
கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுககில்லார்,
விடமுடை அரவிற்பள்ளி விரும்பினன், சுரும்பலற்றும்
தடமுடை வயல்அனந்த புரநகர்ப் புகுதும் இன்றே.

### நடமினோ நமர்கள் உள்ளீர்!

கடுவினை களைய லாகும் காமனைப் பயந்த காளை,
இடவகை கொண்ட தென்பர் எழில்அணி அனந்தபுரம்,
படமுடை அரவிற் பள்ளி பயின்றவன் பாதம் காண,
நடமினோ நமர்கள் உள்ளீர்! நாம்உமக்கு அறியச் சொன்னோம்!

—நம்மாழ்வார்.

# "தமிழ் ஞான சம்பந்தன்"

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை:**

"ஆறதே றும்சடை யான்அருள்
மேவ, அவனியர்க்கு
வீறதே றும்தமி ழால்வழி
கண்டவன்; மென்கிளிமாந்
தேறல் கோதித் தூறு சண்பகம்
தாவிச் செழுங்கமுகின்
தாற தேறும்பொழிற் சண்பையர்
காவலன் சம்பந்தனே"
—நம்பியாண்டார் நம்பிகள்

"தமிழ்ஞான சம்பந்தன்" என்னும் தொடர், சிவநெறிப் பெருந் தலைவராகிய திருஞான சம்பந்தர், தம்மைத் தாமே பெருமித முறையாற் குறித்துக் கொள்ளும் ஓர் அழகிய இனிய தொடராகும். இத் தொடரால் சம்பந்தர் தம்மை ஏறத்தாழ நாற்பத்தைந்து (45) இடங்களில் குறித்துக் கொண்டிருப்பதனை, அவர்தம் திருப்பதி கங்களிற் காணலாம். இங்ஙனம் தமது பெயரைத் தமிழோடு இயைத்துப் புணர்த்துக் கூறிக்கொண்டு மகிழ்ந்த சிறப்பு, நம் திருஞானசம்பந்தப் பெருமான் ஒருவர்க்கே உரியதாக விளங்குகின்றது.

தமிழ் மொழிக்கே ஒருபெருங் கலங்கரை விளக்கம்போல இஞ்ஞான்றும் நின்று நிலவி எழிலுற விளங்கித் திகழ்ந்து வரும் அரிய பெரிய இலக்கண நூலை எத்துணையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே செய்தருளிய ஆசிரியர் தொல்காப்பியரும், அவரை அடுத்துத் தோன்றி, அவர்தம் நெறியினையே பின்பற்றி உலகம் முழுவதும் ஒருங்கே புகழும் ஒப்புயர்வற்ற நீதிநூலாகிய திருக்குறளை அருளிச் செய்த தெய்வப் புலவர் திருவள்ளுவரும், வேறுபிற சான்றோர்கள் எவரும், தம்மைத் தமிழ்த் தொல்காப்பியன், தமிழ்த் திருவள்ளுவன், தமிழ் இளங்கோ என்று குறிப்பிட்டுக்கொண்டு பெருமிதம் பாராட்டி மகிழ்ந்தின்புறுதலை நாம் யாண்டும் காண்கின்றிலம். மற்று, நம் திருஞானசம்பந்தர் ஒருவர் மட்டுமே இங்ஙனம் கூறி மகிழ்ந்து கொள்ளுகின்றார். இவ்வருமைப் பாட்டினை எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் எல்லையில்லாத ஒருவகை இன்பவுணர்ச்சி நம்மிடையே பெருக்கெடுத்தூறிப் பொங்கி நிற்கின்றது. ஆ! ஞான சம்பந்தப் பெருமானின் தமிழ் நலங்களை யாம் என்னென்பேம்?

எத்துணையோ பலவகையிற் சிறப்பு உடையதாகக் கருதப்படும் இவ் இருபதாம் நூற்றாண்டிலும்கூட, தம் தாய்மொழியாகிய நம் அருமைத் தமிழ் மொழியின் மீது அன்பும் ஆர்வமும் சிறிதும் இல்லாது, அயல்மொழிகளின் மயலே மிக்கு வறிதுழலும் எண்ணிறந்தோர் பல்லாயிரவர், தமிழகத்தின்கண் இன்னும் உளராதலை நாம் கண்ணிற்கண்டு வருகின்றோம். இங்ஙனமாகவும், 1,300 ஆண்டுகட்கு முன்பே அளவிறந்த பேரார்வத்துடன் தம்மைத் "தமிழ்ஞான சம்பந்தன்" "தமிழ் ஞான சம்பந்தன்" எனக் குறிப்பிட்டுக் கொண்ட சிறப்பினராய சான்றோர் ஒருவர் இருந்தனரெனின், அவரது சிறப்பு நம்மனோர்க்கு நினைத்தொறும் நினைத்தொறும் எத்துணை வியப்பும் விம்மிதமும் பயக்கின்றது? அத் தகைய ஞானசம்பந்தரின் தமிழன்பும் ஆர்வமும் இனைத்தென எம் ஒரு நாவாற் கூறல் ஒல்லுமோ?

"சுவாமி வேதாசலம்" அவர்கள் தம்மை மறைமலை அடிகள் எனவும், "சூரிய நாராயண சாத்திரியார்" தம்மைப் பரிதிமாற் கலைஞர் எனவும் வழங்கிக் கொண்டமைக்கு ஏதோ ஒரு நோக்கமும் குறிக்கோ

---

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்த, திருச்சி அருள்நெறித் திருக்கூட்டத்தின் 20-ஆம் ஆண்டு விழாவில், சான்றோர் திரு. ப. மூக்கப்பிள்ளை அவர்கள் தலைமையில், "சைவத் திருமுறைகள்" என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது. (24—2—74).
—ஆசிரியர்.

ளும் இருந்தாற் போலவே, நம் ஞான சம்பந்தப் பெருமான் தம்மைத் ''தமிழ் ஞான சம்பந்தன்'' எனக் குறித்துக் கொண்டமைக்கும் ஏதேனும் குறிக்கோள் இருந்திருத்தல் வேண்டும்.

### தமிழ்ப் பண்பின் நிலைக்களன்

ஞானசம்பந்தன் என்னும் சொல்லுக்கு முன்னே 'தமிழ்' என்னும் சொல் வந்தியைந்து ஓர் அடைமொழி போல நிற்க, ''தமிழ்ஞான சம்பந்தன்'' என்னும் தொடர் அமைந்துள்ளது. அடைமொழிகளெல்லாம் பிறிதின் இயைபு நீக்கல் (அந்நிய யோக வியவச் சேதம்), இயைபின்மை நீக்கல் (அயோக வியவச்சேதம்) என்னும் இருதிறம் குறித்து வரும் என ஆசிரியர் சிவஞான முனிவர், தமது சிவ ஞானபோத வுரைக்கண் விளக்குவர். செந்தாமரை என்புழிச் செம்மை என்னும் அடை, வெண்டாமரையின் வேறுயது என்று விளக்குதற்குப் பிறிதின் இயைபு நீக்க வரும். ஆயின், செஞ்ஞாயிறு என்புழியோ செம்மை என்னும் அடை அங்ஙனமின்றி, இருக்கும் ஞாயிறு ஒன்றே யாதலின் வேறு பிரித்துக் காட்ட வேண்டாது, ஞாயிறு இத்தகையது என அதன் பண்பை மட்டும் விளக்குதற்கு இயைபின்மை நீக்க வரும். ''தமிழ் ஞான சம்பந்தன்'' என்னும் தொடரில் 'தமிழ்' என்னும் சொல், ஞானசம்பந்தர்க்கு முன்னும் பின்னும் அவரைப்போல ஞானசம்பந்தம் பெற்று விளங்கியவர்கள் வேறு பிறர் எவரும் இலராதலின், பிறிதின் இயைபு நீக்க வந்தது அன்று! ஞான சம்பந்தரின் பண்பு இத்தகையது என விளக்குதற்காக இயைபின்மை நீக்கவே வந்தது. எனவே, தமிழ்ப் பண்பாடுகள் பலவற்றிற்கும் நிலைக்களனாகத் திகழ்பவர் ஞான சம்பந்தப் பெருமானே யாவர் என்பது தெள்ளிதின் உணரப்படும்.

### தமிழும் சிவமும்

தமிழும் சிவமும் ஒன்றினென்று வேறு பிரிக்க முடியாதவை. தமிழே சிவம், சிவமே தமிழ்! இந்நாளில் ஒருசிலர் தம்மைத் தமிழர் என்று கூறிக்கொள்ளுகின்றனராயினும், சிவமெனும் செம்பொருளுணர்ச்சியின்றி அதனை வெறுத்து ஒதுக்கும் நிலையிலுள்ளனர். வேறுசிலர் தம்மைச் சிவநெறியாளர் என்று கூறிக் கொள்ளுவராயினும், சிவநெறி வளர்த்த சீரிய சான்றோர்கள் போற்றிக் காத்த செந்தமிழ்மொழியின்பாற் போதிய அறிவும் ஆர்வமும் இன்றி, அதனை எளிதாக எண்ணிப் புறக்கணிக்கும் மனப்பான்மையுடன் இருந்து வருகின்றனர். இவ்விரு திறத்தினரும் ஒவ்வொரு வகையில் குறைபாடு உடையவரே ஆவர். சிவம் வாழ்ந்தாலன்றித் தமிழ் வளர்ந்து பயனில்லை; தமிழ் வளர்ந்தாலன்றிச் சிவம் வாழ்தல் இயலாது என்னும் உண்மையை இவர்கள் இருவரும் உணர்தல் வேண்டும். ''தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார்'' எனச் சேக்கிழார் சிறப்பிக்கும் ஞானசம்பந்தரைச் 'சிவம் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று கூறாமல் 'தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என நம்பியாரூரர் குறித்த கருத்தின் நலம் யாது? 'சிவம் பரப்பும் ஞானசம்பந்தன்' எனல் வேண்டிய கருத்தினையே யன்றோ, அவர் ''தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' என்றார். எனவே நல்ல தமிழர்கள் சிவநெறியினையும், நல்ல சிவநெறியினர்கள் தமிழினையும், தமது உயிரினும் இனியதாகப் போற்றி ஓம்பும் இன்றியமையாப் பெருங் கடமை யுடையராதல் புலப்படும்.

### தமிழ்ப் பெருந்தலைவர்

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளில் உயர்ந்த நல்ல பண்புகள், ஒரு சில வற்றையேனும் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். தன்னைப்பற்றி நினைப்பவர்கள் அப்பண்புகளுக்காகவே தன்னை நினைவு கூரும் வகையில், அப்பண்புகளோடு ஒருவனது வாழ்க்கை இரண்டற ஒன்றிவிடுதல் வேண்டும். அத்தகைய ஒருவனது வாழ்க்கையே சிறந்த பண்பட்ட வாழ்க்கையாகும். ஓர் ஆசிரியன் தான் எழுதும் நூலிலும், ஒரு கவிஞன் தான்பாடும் பாடலிலும், ஒரு கலைஞன் தான் அமைக்கும் கலைத்திறனிலும், தத்தமக்கே உரிய சிறந்த பண்புகள் இயல்பாக முழுவதும் வெளிப்பட்டு நிழலாடும் நிலையில், எப்பொழுது வெற்றி எய்துகின்றார்களோ, அப்பொழுதே அவர்கள் தத்தம் துறைகளில் முழுநிறைவும் தேர்ச்சியும் பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

சேக்கிழாரின் பெரிய புராணத்திலும், மணிமொழியாரின் திருவாசகத்திலும், அவரவர்க்குரிய சிறப்பியற் பண்புகள் இயல்பாக முழுவதும், தாமே அழகுற வெளிப்பட்டு நிழலாடித் திகழ்தலை அறிஞர்கள் அனைவரும் உணர்வர். மனித வாழ்க்கையின் முழுநோக்கம் உயர்ந்த நல்ல சிறந்த பண்புகளை வளர்ச்சியுறச் செய்து கொள்வதேயாதலின், சிறந்த சான்றோர்கள் எனப்படுவோருள் எவரை நாம் நினைவு கூர நேர்ந்தாலும், முதற்கண் அவர்களுடைய ஒப்புயர்வற்ற சிறந்த பண்புகளையே நாம் நினைவு கூர்வோம். ஞானியார் அடிகள், மறைமலை அடிகள், திரு. வி. கலியாணசுந்தரனுர், பண்டிதமணி கதிரேசனுர், நாவலர் வேங்கடசாமி நாட்டார் போன்ற பெருமக்களையும், காந்தியடிகள், விவேகானந்தர், இராமகிருஷ்ணர், இராமலிங்கர்போன்ற சான்றோர்களையும் நினைவு கூரும் போதெல்லாம், அவரவர்களின் தனிச் சிறப்பான பண்புகளும் கொள்கைகளுமே நம் நினைவுக்கு வருகின்றன அல்லவா?

அது போலவே ஞானசம்பந்தர் என்றதுமே, நமக்கு அவர்தம் தமிழ்ப் பண்பும் தமிழ்ப் பற்றும் தமிழார்வமும் பிறவுமே நினைவுக்கு வருகின்றன. ஞானசம்பந்தரை நினைத்தால் தமிழும், தமிழை நினைத்தால் ஞானசம்பந்தரும் நினைவுக்கு வருதல் நல்லறிஞர்க்கெல்லாம் இயல்பாக உள்ளது. ஞானசம்பந்தரை நினைவு கூர்ந்த நம்பியாரூரர் ''நாவின்மிசை யரையன் ஞெடு தமிழ்ஞான சம்பந்தன்'', ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'', ''நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்'' எனத் தமிழோடு இணைத்தே நினைவு கூர்ந்து பாராட்டியுரைத்தமையும் கருதற்பாலது. சேக்கிழார் பெருந்தகையும் ''முத்தமிழ் விரகர், வண்டமிழ் நாயகர், செந்தமிழ் ஞான சம்பந்தர், வண்டமிழின் மொழி விரகர், மதுர முத்தமிழ் வாசகர், அருந்தமிழ் ஆகரர், இயலிசைத் தலைவனுர்'' எனத் தமிழோடு இணைத்தே ஞானசம்பந்தரைப் புகழ்தல் காணலாம். இங்ஙனம் தம்மை நினைவு கூர்வோர் யாவரும் தமிழோடு சேர்த்தே தம்மை நினைவுகூரும் வண்ணம், தமிழுக்கென வாழ்க்கை நடத்துதலையே ஞானசம்பந்தர் தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் போலும்! அக்குறிக்கோளினையே அவர் ''தமிழ்ஞான சம்பந்தன்'' எனத் தம்மை வழங்கிக் கொண்டமையால், வெளியிட்டருளினராதல் வேண்டும்.

## தமிழிற் புதுவகைக் கவிதைகள்

ஞானசம்பந்தர் ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றிமை மிக்க சிறந்த பெருங் கவிஞராவர். அவரால் தமிழ்மொழியின் கவிதை வளம் பல்லாற்ருனும் வளர்ந்து செழித்துச் சிறந்தோங்கியது! இந்நூற்ருண்டில், ஆசிரியர் மறைமலையடிகளார் அவர்களின் அரும்பெருந் தொண்டால் தமிழில் நல்ல உரைநடை நூல்கள் மிகப் பலவாய்ப் பெருகி வளம் பெற்ருற் போலவும், தென்கலைச் செல்வர் பேரறிஞர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களால் பழந்தமிழ்ச் சங்க இலக்கிய நூல்கள் பதிப்பிக்கப் பெற்றுப் புத்துயிர் பெற்ருற் போலவும், கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரால் நாட்டுப்பற்றினை ஊட்டும் புதுவகைக் கவிதைகள் பலப்பல தோன்றி வருதல் போலவும், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களால் சீர்திருத்த மறுமலர்ச்சிப் புரட்சிக் கவிதைகள் பல தோன்றி வளர்ந்து வருதல் போலவும், சங்க காலத்திற்குப் பின்னர்-இற்றைக்கு 1,300 ஆண்டுகட்கு முன்னர்ப் - புதியதொரு கவிதை இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டுவளர்த்த மாபெருஞ் சிறப்பும் மாட்சிமையும் வாய்ந்தவர், ஞானசம்பந்தரே யாவர் என்பது நம்மனோர் ஆராய்ந்துணர் தற்குரியது! ஆசிரியர் மறைமலையடிகள்,

''வருக்கைச் சுளையும் பொருக்கரை மாவும்
கொழுங்கனி வாழையும் செழுஞ்சுவைக் கன்னலும்
ஒருங்குதலை மயங்கிய அரும்பெருங் கலவையின்
அருஞ்சொல் வழக்கமும் திருந்திய நடையும்
வண்ணவேற் றுமையும் தண்ணெனும் ஒழுக்கமும்
ஒன்றி நிரம்பிய குன்ருத் திருப்புகழ்
வேறுவே றியம்பிய வீறுறு தவத்தின்
அருண கிரிஎனும் பெரியன்''

எனப் புகழ்ந்து பாராட்டும் பெருநலம் மிகுந்த கவிஞர் பெருமாஞகிய அருணகிரியார் தாமே, ''புமியதனிற் ப்ரபுவான புகலியில் வித்தகர்போல, அமிர்த கவித் தொடை பாட அடிமைதனக் கருள்வாயே'' என இறைவனை வேண்டுவராயின், ஞானசம்பந்தப் பெருந்தகையின் தமிழ்க் கவிதை நலத்தின் சிறப்பு, எத்துணை மேம்பாடுடையதாக இருத்தல் வேண்டும் என்பதனை நாம் ஒருவாறு கருதியுணரலாம்.

ஞான சம்பந்தர் தமிழ்க் கவிதைகளில் தமக்கு முன்னும் பின்னும் இல்லாத முறைகளில், நிகழ்த்திக் காட்டிய அற்புதங்களும் அருமைப்பாடுகளும் மிகப் பலவாகும். சங்ககாலக் கவிதைகளின் அமைப்பிற்கு அறவே புதியனவாகிய பலதிறக் கவிதைகளை, முதன் முதற் பாடிக்காட்டி வழி வகுத்தவர் ஞான சம்பந்தப் பெருந்தகையே. பலவகை விருத்தப்பாடல்களை மட்டுமேயன்றித் திருவிராகம், வழிமொழித் திருவிராகம், திருவிருக்குக்குறள், மொழி மாற்று, மாலைமாற்று, திருத்தாளச் சதி, யாழ்மூரி, ஏகபாதம், திருவெழு கூற்றிருக்கை, சக்கரமாற்று, கோமூத்திரி, இயமகம், கூடசதுக்கம் என்பனபோலும் பலதிற அமைப்புள்ள வியத்தகு தமிழ்ப் பாடல்களை, முதன் முதல் அருளிச் செய்தவர் நம் அருமை ஞானசம்பந்தப் பெருமானேயாம். தமிழில் இத்தகைய புதிய பாடல்களை ஞானசம்பந்தர் ஒருவரே முதன்முதற் புதிதாகப் பாடிக் காட்டினர் என்பதனை,

''செந்தமிழ் மாலை விகற்பச்
செய்யுட்க ளால், மொழிமாற்றும்
வந்தசொற் சீர்மாலை மாற்றும்,
வழிமொழி எல்லா மடக்கும்,
சந்த இயமகம், ஏகபாதம்,
தமிழ் இருக்குக்குறள் சாத்தி,
எந்தைக் கெழுகூற் றிருக்கை,
ஈரடி, ஈரடி வைப்பு;''

''நாலடி மேல்வைப்பு, மேன்மை
நடையின் முடுகும் இராகம்,
சால்பினில் சக்கரம் ஆதி
விகற்பங்கள், சாற்றும் பதிக
மூல இலக்கிய மாக,
எல்லாப் பொருள்களும் முற்ற,
ஞாலத் துயர்காழி யாரைப்
பாடினர் ஞானசம் பந்தர்''

எனச் சேக்கிழார் பிரான் விளக்கியருள்வதோடு, அவைகளை ''மூல இலக்கியம்'' எனவும் விதந்துரைத்துப் போற்றிப் புகழ்ந்துள்ளமை, இச் செய்திக்குக் கரிபோக்கி மெய்ப்பிப்பதாகும். எனவே, இங்ஙனம் பலதிறப் புதிய அமைப்புள்ள பாடல்களை முதன்முதற் பாடித் தமிழ் மொழியை வளர்த்தற்குத் தாம் மேற்கொண்ட குறிக்கோளினையே, ஞானசம்பந்தர் தம்மைத் ''தமிழ்ஞான சம்பந்தர்'' எனக் குறித்துக் கொண்டதனுற் புலப்படுத்தினர் போலும்!

திருஞான சம்பந்தப் பெருமானுக்குத் தமிழின்பால் இருந்த அன்பும் ஈடுபாடும் ஆர்வமும் அளப்பரியன. அதனுலேயே அவர் தம்மைத் ''தமிழ்விரகர்'' என்று அடிக்கடி குறிப்பிட்டுக் கொள்வது வழக்கம். அவருக்கு முன்னும் பின்னும் இருந்த எவரும் இத்தகைய இணையற்ற தமிழார்வத்தினை வெளியிட்டிருக்கக் காண்கிலம். 'நும் சிவபெருமான் எங்குள்ளான்?' என எவரேனும் வினவின், அவர் காசியிலோ காஞ்சியிலோ கயிலாயத்திலோ இருக்கிறுர் என்று கூருமல், 'எம் சிவபெருமான் எங்கெங்கே தமிழின் நீர்மை பேசப்பெறுகின்றதோ, அங்கெல்லாம் இருப்பார், எங்கெங்கே பலவகை இன்னியங்கள் இயம்பத் தமிழிசைப் பாடப்பெறுகின்றதோ அங்கெல்லாம் எங்கள் சிவபெருமான் எழுந்தருளித் திகழ்வார்' என்று குறிப்பிடுகின்றுர்.

''தமிழின் நீர்மை பேசித்
தாளம் வீணை பண்ணி நல்ல
முழவம் மொந்தை மல்கு பாடல்
செய்கை இடம் ஓவார்;
குமிழின் மேனியது தந்து
கோல நீர்மையது கொண்டார்
கமழும் சோலைக் கானூர் மேய
பவள வண்ணரே''

தமிழின்பால் அவருக்கிருந்த எல்லையற்ற அன்புதான் என்னே! இந்நாளில் அண்மைக் காலத்தில், ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணேம்'' என்று பாரதியாரும், ''தமிழன் என்றேர் இனமுண்டு; தனியே அதற்கோர் குணமுண்டு...'', ''தமிழன் என்று சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா!'' என்று நாமக்கல் கவிஞரும், ''தமிழுக்கு அமுதென்று பேர் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்களும், அழகுறப் பாடிப் பரப்பிய தமிழ் உணர்ச்சியினை, இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே எழுப்பிப் பரப்பி வளர்த்த, ஞானசம்பந்தப் பெருமானின் நற்றமிழ்ப் பற்றினை, நல்லோர் எல்லோரும் நயந்து பாராட்டிப் போற்றக் கடமைப்பட்டவர் ஆவர்.

## தமிழ் இயக்கம்

இனி, ஞானசம்பந்தர் வாழ்ந்த கால நிலையையும் ஈண்டு ஒருசிறிது கருதுதல் இயைபுடையதாகும். ஞானசம்பந்தர்

கி.பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்தவர் என்பது, பேராசிரியர் மனேன்மணீயம் சுந்தரம்பிள்ளை அவர்கள்போன்ற ஆராய்ச்சியாளர்களின் துணிபு. அவர் காலத்தில் வடநாட்டில் ஹர்ஷன் என்னும் பேரரசன் (கி.பி. 606-647) ஆண்டு வந்தான். சாளுக்கிய நாட்டில் இரண்டாம் புலிகேசி (610-642) என்னும் மன்னன் செங்கோல் செலுத்தினன். காஞ்சிபுரத்தில் மகேந்திரவர்ம பல்லவனும் (கி.பி. 600-630), அவனது புதல்வனுகிய நரசிம்மவர்ம பல்லவனும் (630-655) அரசோச்சினர். மதுரையில் மாறவர்மன் அரிகேசரி என்னும் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் (640-680) அரசு கட்டில் வீற்றிருந்தான். ஞானசம்பந்தரோடு கூடியளவளாவி, அவரோடு ஒருங்கிருந்து உடனுறைவின் பயன்பெற்ற 'செருவடிதோள்-சீருலாம் சிறுத்தொண்டர்' பம்பாய்க்கருகேயுள்ள வாதாபி என்னுமிடத்தில் நிகழ்ந்த போரில் (கி.பி. 642) இரண்டாம் புலிகேசியை வென்று, 'அந்நகரையழித்து, அங்கே ஒரு வெற்றித்தூணை நாட்டினர். ஞானசம்பந்தர் தோன்றிய இத்தகைய காலத்தில், வேற்றுமக்கள் பலர் தமிழ்நாட்டிற் புகுந்து கலந்ததோடன்றி, ஆட்சி புரியும் வலிமையும் பெற்று விளங்கியதனுல், தமிழக மக்களுக்குப் பல வகை இடுக்கண்கள் பெருகி இருந்தன. தமிழ் வேந்தர்களாய ''தென்னர் சேரர் சோழர்''களின் ஆட்சிநிலை குலைந்துபோகப் பல்லவர் களப்பிரர் முதலிய வேற்றரசர்களின் ஆட்சியும் தமிழகத்தில் ஏற்பட்டிருந்தது. வேற்றுநாட்டு மக்கள் பலர் தமிழகத்தில் பெருந்திரளாகப் போந்து கலந்து, தங்களது பொருந்தாத கொள்கைகள் தீயபழக்க வழக்கச் செயல்கள் முதலியவற்றைத் தமிழ் மக்களிடையே திணித்துப் பரப்பி வந்தார்கள்.

தமிழ்ச் சங்ககால நிலை மாறியொழிந்து, தமிழ் மொழியானது கற்பாரும் கேட்பாருமின்றித் தளர்ச்சியுறுவதாயிற்று. தமிழ் மக்களின் பழம்பெருங் கோட்பாடுகட்கும் பண்பாடுகட்கும் சிறிதும் பொருந்தாத புதிய பல வேற்றுக் கொள்கைகள், தமிழகத்தில் ஆக்கம் பெறலாயின. அவ்வேற்றுக் கொள்கைகளோடு வேற்று மொழிகள் பலவும், தமிழ்நாட்டில் புகுத்திப் போற்றி வளர்க்கப் பெற்றமையால், தமிழ் மக்களே தமிழ்மொழியைப் புறக்கணித்து ஒதுக்கும் நிலையுற்றனர். பல மொழிகள் கலந்து மிடைந்து வழங்கியதனுல், தமிழ் தன் தூய்மையும் சிறப்பும் குன்றி இழிநிலை எய்தி நின்றது.

தமிழகத்தார் அனைவரும் தமிழ் பயிலுதல் வேண்டும் என வற்புறுத்துதற் பொருட்டே, ஞானசம்பந்தர் தமது பதிகம் ஒவ்வொன்றின் ஈற்றிலும் தாம் பாடிய 'தமிழ்' கற்பவர்கள், இன்னின்ன பயன்களைப் பெறுவார்கள் எனத் தவருது கூறுதலை, ஒரு கடப்பாடாகக் கொண்டனராதல் வேண்டும். பலமொழிகள் ஒரு நாட்டிற் புகுந்து கலந்து வழங்கும்போது, அவைகள் தத்தம் தூய்மை இழந்து, அழகு குன்றிப் போதல் திண்ணம். அதனைத் தடுத்து நல்ல தூய திருந்திய சிறந்த செந்தமிழ் வழக்கினையே பரப்புதற்கு, ஞான சம்பந்தர் பாடுபட்டனராதல் வேண்டும். அதுபற்றியே அவர், தமிழை ''நற்றமிழ்-செந்தமிழ் - அருந்தமிழ் - ஞானத்தமிழ் - இன்றமிழ் - தண்டமிழ்'' எனப் பலவாறு பண்பறிந்து பாராட்டி மகிழ்ந்தருள்கின்ருர். எத்துணையோ பலர் இஞ்ஞான்று தமிழை எழுதியும் பேசியும் வருகின்றனராயினும், மறைமலையடிகள் பேசியும் எழுதியும் வந்த தமிழே நல்லதமிழ்-இனிய தமிழ் - தூயதமிழ் - சிறந்த தமிழ் - தனித் தமிழ் எனப் பலவகையாற் பாராட்டப் படுதல்போல, கொச்சைத் தமிழ் வழக்கு மிக்கிருந்த காலையில் ஞானசம்பந்தர்பாடிப் பரப்பிய தமிழே மிகவும் நலம் சிறந்ததாக இருந்திருத்தல் வேண்டும். அவரே ''நல்லவாய இன்தமிழ் நவிலும் ஞானசம்பந்தன்'' ''நல்ல செந்தமிழ் வல்லவன்'' என்றெல்லாம் கூறிக் கொள்ளுதல் காணலாம்.

''ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்'' என்றபடி வேற்றுமக்கள் செல்வமும் செல்வாக்கும் சிறப்பும் மிக்கு வீறித் திகழ்ந்து விளங்கவும், தமிழகத்திலேயே தமிழ் மக்கள் தாழ்ந்து கிடந்து அடிமைகள்போல உரிமையுணர்வு குன்றி நின்றபொழுது, தமிழர்களுக்குத் தன்மானம் மிக்க தமிழுணர்ச்சியும் தமிழ்ப்பற்றும் உண்டாக்குதற் பொருட்டே, ஞானசம்பந்தர் தம்மைத் ''தமிழ்ஞான சம்பந்தன்'' எனப் பலகாற் குறிப்பிட்டுக் கொண்டனராதல்வேண்டும்.

பண்டை நாளில் தமிழ்ச் சொற்கள் பல முதல் நிலையளவாகவே நின்று வழங்கி, முருகு-முருகன், அரசு-அரசன், வேந்து-

வேந்தன் என்றாற்போலப் பொருளுணர்த்தி வந்தன வாதலின், அம்முறைமை, கருதி யாராய்ந்தால், ''தமிழ்ஞானசம்பந்தன்'' என்னும் தொடரில் உள்ள 'தமிழ்' என்பது 'தமிழன்' என்னும் பொருளுணர்த்துவ தாகக் கொள்ளலாம். கொண்டால், அத் தொடர் இருபெயரொட்டுப் பண்புத் தொகையாய்த் ''தமிழனாகிய ஞான சம் பந்தன்'' எனப் பொருள்படும். படவே, முதன்முதல் இற்றைக்கு 1300 ஆண்டுகட்கு முன்னரே, 'தமிழன்' என்று மார்புதட்டித் தம்மைக் கூறிக்கொண்டு, பெருமிதம் அடைந்த முதற்பெரும் பழந்தமிழர், ஞானசம்பந்தரே யாதலை யுணர்ந்து நாம் கழிபேருவகை எய்தலாம்.

''சந்துசேனன் - இந்துசேனன் -கந்து சேனன் - தருமசேனன் - கனகசேனன் - கனகநந்தி - புட்பநந்தி -பவணநந்தி-சுனக நந்தி - குனகநந்தி - திவண நந்தி'' முதலிய வேற்றுமக்களின் தலைவர்கள் பெருகித் தமிழுக்கும் தமிழர்க்கும் கேடு சூழ்ந்து வந்தபோது, ஞானசம்பந்தரே தமிழையும் தமிழரையும் பாதுகாத்து நலம்செய்யும் தலைவராக முற்போந்து, மாபெரும் தமிழி யக்கம் ஒன்றைத் தொடங்கிப் ''பற்பல ஆயிரம் தொண்டரோடும்'' அதனை நன் கினிது நடாத்தி, அவ்வேற்றுவர்களின் தீய குணம் செயல் கொள்கைகள் முதலிய வற்றைக் கடிந்தொழித் தருளினார். இதனையே, ''தமிழ்நாதன் ஞானசம்பந் தன்'' ''தமிழ்க்கிழமை ஞானன்'', ''நற்ற மிழ்க்கின்றுணை ஞானசம்பந்தன்'' ''நல் லோர் நற்றுணையாம் பெருந்தன்மை ஞான சம்பந்தன்'' ''நாடமர் ஞானசம்பந்தன்'' என்னும் தொடர்கள் புலப்படுத்துகின்றன.

இங்ஙனம், மாபெருந் தமிழியக்கம் ஒன்று நடந்து வெற்றியுற்ற சிறப்பின் உண்மையினை, ஆசிரியர் சேக்கிழார் தாமும் ''தேனலர் கொன்றை யார்தம் திருநெறி நடந்த தன்றே'' எனக் கூறியருளி இருத்தல் காணலாம். அம்மாபெரும் தமிழியக்கத் திற்குத் தலைவராக முன்னின்று நடாத்திய ருளிய தன்மை புலப்படவே, ''காழியர் கோன்-சிரபுரத் தலைவன்-புகலிவேந்தன் - சண்பைமன் - கழுமலநகரிறை'' என்பன போன்ற தொடர்மொழிகள் அருளிச் செய் யப்பட்டனபோலும்! மக்களுக்கு நாட்டுப் பற்றினை ஊட்டுதற்குரிய வாயிலாகவும், ஞானசம்பந்தர் இவ்வாறு அருளிச் செய்தி ருத்தல் கூடும். ''தமிழ்விரகன் -தமிழின் விரகன் - தமிழ்கெழு விரகன் -முத்தமிழ் விரகன் -தமிழொடு விரகினன் -பெருகிய தமிழ்விரகினன்'' எனப் பலவகையாக, அவர் பலகாலும் தம்மைச் சுட்டிக் கொள்ளுதலால், அவரது அளவிறந்த தமிழார்வம் இனைத்தென்பது உணரப்படும். ஞானசம்பந்தர்க்கு முன்னரும் பின்னரும் இங்ஙனம் ''தமிழ்'' ''தமிழ்'' என்று, தமிழையே உயிர்ப்பாகக் கொண்டு நின்ற வேறொருவரைக் காண்டல் இயலாது. தமிழ்மொழியன்பு ஆர்வம் பற்று என்பன வற்றிற்கெல்லாம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குபவர் ஞானசம்பந்தரே. ஞானசம்பந்தரின் இத்தகைய தமிழ்நலங் கள் பலவும் கருதியன்றோ, ''அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறை வெல்ல'' அவர் தோன்றியருளினர் எனச் சேக்கிழார் பெருமான் கட்டுரைத் தருள்கின்றார்!

**தமிழ்க்கெனவே வாழ்ந்த தகைமை :**

இனி, இறுதியாக ஒன்று கூறி அமைதல் சாலும்! ''தமிழ் ஞானசம்பந்தன்'' என்னும் தொடரில் உள்ள 'தமிழ்' என்பது தமிழ்மொழி ஒன்றனை மட்டுமே குறித்து நில்லாமல், தமிழ்ச் சார்புடைய எல்லா வற்றையும் ஒருசேரத் தழீஇ யுணர்த்தும் தன்மைத்தாக விளங்குகின்றது. ஞான சம்பந்தர் தமிழ்மொழியை மட்டுமன்றித் தமிழ்ப் பண்பாடுகள் அனைத்தையும் காத்து வளர்த்தருளிய சான்றோராவர். அவர் தமது வாழ்க்கை முழுவதும் தமிழ்ச் சார்பான பலவற்றையும் காத்துப் புரந் தருளுதற்கே மிகப் பெருந் தொண்டாற்றி னார். அவர் தம் வாழ்க்கையினையும் சொற் செயல்களையும் நீள நினைந்து காண வல்ல வர்கள், இவ்வுண்மையை நன்கினிது செவ் விதின் உணரப் பெறுவார்கள். ஞான சம்பந்தர் தமது உலகியல் வாழ்க்கையின் முடிந்தநிலையில், இறைவனோடு இரண்டறக் கலந்தின்புறும் பெருவாழ்வு பெற விரும்பி வேண்டுகோள் செய்த திருப்பாடலால், தமது வாழ்க்கை முழுவதும் தமிழ்ப் பண் பாட்டினைப் பாதுகாக்கவே அவர் பாடு பட்ட அருமையும்; தமக்குப் பின்னரும் தாம் வளர்த்த தமிழ்ப் பண்பாடுகள் பல வும், பின்வரும் தொண்டர்களால் போற்றி ஓம்பப்பட வேண்டும் என்னும் அவரது உள்ளார்ந்த பெருவிருப்பமும்; அங்ஙனம்

தமக்குப் பின்வரும் தொண்டர்கள் செய்தல் வேண்டுமாயின், தம் வாழ்க்கையிலும், சொற் செயல்களிலும், முன்னுக்குப் பின்னர் எத்தகையதொரு முரண்பாடும் மாசு மறுவும் இருத்தலாகாதே என, அஞ்சிக் கவன்று நின்ற பொறுப்புணர்ச்சி மிக்க, அவர்தம் கடமை ஆர்வமும்; மலையிலக்கென வெளிப்பட்டு நிற்றல் காணலாம். இஃதன்றோ தலைவரெனப்படுவோர் எல்லார்க்கும் இருத்தற்குரிய சிறந்த பண்பாகும்!

தம் வாழ்நாள் முழுவதும் நாட்டின் மூலை முடுக்கர் எங்கணும் சென்று, தாம் பரப்பிய சீரிய கொள்கைகளும் பாடல்களும், எக்காலமும் பொய்யாது மெய்யாக நிலைபெற்றுத் திகழ்தல் வேண்டுமாயின், அக்கொள்கைகளையும் பாடல்களையும் பரப்பிய தமது சொற் செயல்களில் எவ்வகையிலும் சிறிதும் முரண்பாடு நேரலாகாது என்றும்; அங்ஙனம் ஒருகால் நேர்ந்து விடுமாயின், தாம் தம் வாழ்க்கை முழுவதும் பரப்பி வந்த தமிழ்க் கொள்கைகளையும் பண்பாடுகளையுமெல்லாம் பின்வரும் தொண்டர்கள் சிறிதும் மதிக்காமல் இகழ்ந்து வெறுத்தொதுக்கி விடுவார்கள் என்றும்; அத்தகையதொரு தீயசூழ்நிலை நேராவண்ணம் 'நல்லூர்ப் பெருமணம் மேய நம்பான்' தமக்கு அருள்செய்தல் வேண்டும் என்றும்; திருஞானசம்பந்தர் இறைவனை வழுத்தி,

''கல்லூர்ப் பெருமணம் வேண்டா! கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில!
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்!
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே!''

என அருளிச் செய்துள்ள திருப்பாடல், அவர்தம் வாழ்க்கையின் முழுச்சிறப்பினையும் தெளிவுறத் தெருட்டுகின்ற தன்றோ? ஞானசம்பந்தரின் தமிழ்ப் பண்பாடுகள் பலவற்றையும் விளக்கும் தலைமணி போலும் சிறப்பினதாதற்கு, சொல்லும் செயலும் வேறுபடுதல் கூடாது என விரும்பும் அவர்தம் மாசற்றுச் சிறந்த தூய பண்பொன்றே போதுவதாகும். இன்னோரன்ன தமிழ்ப் பண்புகள் பலவும், ஞானசம்பந்தர்பாற் புகல் அடைந்து கிடந்தன எனல் மிகையன்று!

**சமுதாயத் தலைவர் :**

ஞானசம்பந்தர் வெறும் சமயத் தலைவர் மட்டுமல்லர், மாபெரும் சமுதாயத் தலைவரும் ஆவர். ''பல்வேறு கொள்கைகளாலும் சூழ்நிலைகளாலும் சிதறுண்டு கிடக்கும் ஒரு நாட்டின் மக்களை, அவர்கள் பேசும் தாய்மொழியின் வாயிலாகவே ஒன்றுபடுத்திக் கிளர்ந்து எழச்செய்ய முடியும்'' என்னும் மனவியல் உண்மையினை, ஞானசம்பந்தப் பெருமான் நன்கினிது உணர்ந்திருந்தார். அதனால் அவர் நாளும் இன்னிசையால் தமிழைப் பெரிதும் போற்றிப் பரப்பினர். அவரைச் சுற்றி எப்போதும் பற்பல ஆயிரம் தொண்டர்கள் இடைவிடாது சூழ்ந்திருந்தனர் எனப்பெரிய புராணம் கூறுகின்றது. இதனால் ஞான சம்பந்தப் பெருமானே, முதன்முதலில் பல்லாயிரக்கணக்கான மக்களின் உள்ளங்களில் தமிழ் உணர்ச்சி பெருகி ஊற்றெடுக்கும்படி செய்தவர்; தமிழுக்கென ஒரு மாபெரும் மக்கள் இயக்கத்தைத் தோற்றுவித்தவர் என்பதை உணரலாம். ஞான சம்பந்தப் பெருமான் செய்தருளிய தமிழ் இயக்கக் கிளர்ச்சியின் பயனாகவே, தமிழகத்தில் இசையும் நடனமும் சிற்பமும் ஓவியமும் ஆகிய கலைகள் பலவும் பெரிதும் தழைத்தோங்கலாயின. தமிழ்ப் பண்புகளுக்கு மாறுபட்டிருந்த பல்லவர்கள் முதலிய மன்னர்களும்கூட, நாளடைவில் காலப்போக்கில் தமிழ்ப்பண்பு தழுவித் தமிழ் வண்ணமாயினர்.

**முடிவுரை :**

இதுகாறும் கூறிவந்தவாற்றால், ஞான சம்பந்தப்பெருமானின் தமிழ் நலங்களுள் ஒருசில, ''தமிழ்ஞான சம்பந்தன்'' என்னும் தொடரை அடிப்படையாகக்கொண்டு இயன்றவரை ஒருவாறு விளக்கப்பெற்றன. ''விரிப்பிற் பெருகியும் தொகுப்பின் எஞ்சியும்'' செல்லும் நீர்மை மிக்க, அவர்தம் அளவிறந்த பலதிறத் தமிழ் நலங்களையெல்லாம் விரித்துரைத்து ஒருவரையறைக் குட்படுத்துதல், எம்போலும் எளியோர்க்கியல்வதன்று. தமிழன்பும் ஆர்வமும் மிக்க உண்மைத் தமிழர் அனைவரும் ''தமிழ் ஞான சம்பந்த''ப் பெருமானைத் தம் மனமொழி மெய்களால் வாழ்த்தியும் வணங்கியும், வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, இன்பமெல்லாம் எய்துவார்களாக!

—ஆசிரியர்.

# அருளுணர்வு

மாட்சிமிகு திரு. எஸ். மகராஜன் அவர்கள், B.A., B.L.,
நீதிபதி, உயர்நீதி மன்றம், சென்னை.

தன்னலக் கலப்பில்லாத அன்பை அருள் என்று சொன்னார் வள்ளுவர். அருளால் நிறைந்து ததும்புகிறவர்கள் எப்படியிருப்பார்கள், அவர்களுடைய வாழ்க்கைமுறை எவ்வாறு இருக்கும் என்பதை இந்த அதிகாரத்தில் விளக்குகிறார். இன்னொரு உயிருக்குத் துன்பம் வந்தால் அருளாளர்கள் அதைச் சகிக்க மாட்டார்கள். நாமெல்லாம் நமக்கு அல்லது நம் குடும்பத்துக்குத் துன்பம் வந்தால் பதைபதைப்போம்; அயலானுக்கு வந்த துன்பம் நம்மைப் பாதிப்பதில்லை. அருளாளர்கள் அப்படி இருக்க மாட்டார்கள். "He is the truly cultured man who has a sense of contemporary tragedy." என்று சொன்னார் ஒரு ஆங்கில அறிஞர். நாம் வாழும் இவ்வுலகத்திலே தொலை தூரத்துக்கப்பால் உள்ள ஒரு நாட்டில் ஓருயிர் அல்லலுறுகிறது என்று தெரிந்தால் அவர்களுக்கு உறக்கம் வராது. பங்களா தேசிலே லட்சக்கணக்கான மக்கள் அல்லற்படுகிறார்களே, வியட்நாமிலே குருதி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறதே, என்று நாள்தோறும் கேட்டுக் கொண்டிருக்கும் நாம் குத்துக்கல்லாகவல்லவா இருக்கிறோம்; கொஞ்சங்கூட நமக்கு மனவேதனை ஏற்படுவதில்லை. எல்லாம் கருணையில்லாத காரணந்தான்.

உன் உடம்பைக் கொழுக்க வைப்பதற்காக இன்னொரு உடம்பைக் கொன்று, நெய்யும் கடுகும் போட்டுத் தாளித்து உண்கிறாயே நீ, உனக்கெப்படி அருள் உண்டாகும்? என்று கேட்கிறார் குறளாசிரியர்.

''தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது
ஊனுண்பான்,
எங்ஙனம் ஆளும் அருள்?''

உலக மக்கள் அமைதியாக, இன்பமாக வாழவேண்டும் என்றால், ஒவ்வொருவரும் பிற உயிர்களை மதிக்க வேண்டும், போற்ற வேண்டும். அதுவே அறங்களில் எல்லாம் தலையாய அறம். பிற உயிர்களை மதிக்கா விட்டாலும் துன்புறுத்தாமலாவது இருக்கலாம். துன்புறுத்தாமல் இருந்தாலே அதை அறவினையென்று சொல்லலாம். அப்படிச் செய்யாமல், பிற உயிர்களைக் கொல்லுவோமானால், தின்பதற்காகவே கொல்லுவோமானால், பிற உயிர்களை அவமதிக்கும் குணமே நம்மிடம் வளர்ந்து பெருகும். பிறரை அவமதிப்பதிலிருந்து முளைப்பவை தான் மற்றக் கெட்ட குணங்கள் எல்லாம்.

''அறவினை யாதெனில் கொல்லாமை, கோறல்
பிறவினை எல்லாம் தரும்''.

கொலைகாரன் வாழ்க்கைப் பிரச்சினைகளை அணுகும் முறையே அலாதியாயிருக்கும். ஈவு இரக்கம் இல்லாமல் அணுகுவான். ஆனால், கொல்லாமையை விரதமாக மேற்கொண்டவன் வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கருணையோடு, பரிவோடு, தியாக புத்தியோடு அணுகுவான். மனித வாழ்க்கை பக்திக்கும் வணக்கத்துக்கும் உரியது என்று அவன் எண்ணுவான். இப்பேர்ப்பட்ட பக்தனை, தியாகியை, உலகங்கள் எல்லாம் கைகூப்பித் தொழும் என்று உறுதி கூறுகிறார் வள்ளுவர். ''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்''.

நான் கொல்லவில்லையே.- மற்றவன் கொன்ற பிராணியின் புலாலைத்தானே விலை கொடுத்து வாங்கி உண்ணுகிறேன், என்று வாதம் செய்கிறோம் நாம். வள்ளுவருடைய எதிர் வாதம் இது: ''ஊன் தின்பதற்கு ஆள் இல்லையென்றால், அதை விற்றுப் பிழைப்பவர்களும் இல்லாமல் போய்விடுவார்கள்.''

''தினற் பொருட்டால் கொல்லாது உலகெனின்
யாரும்
விலைப் பொருட்டால் ஊன்தருவார் இல்''

பொல்லாத ஆசாமி இந்த வள்ளுவர்! வாதத்தாலும் அவரை வெல்ல முடியாது.*




மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் தொகுப்புக் கோயில்களின் சார்பில், திருப்பரங்குன்றத்தில், இலவசச் சித்த வைத்தியசாலைத் திறப்பு விழா நிகழ்ந்தபொழுது, அறங்காவலர் குழுத்தலைவர் திரு. லெ. நாராயணன் செட்டியார், திரு. காவேரி மணியம், B.SC., B.L., M.L.A., திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன், M.L.A., நிர்வாக அதிகாரி திரு. என். எஸ். இராமச்சந்திரன், B.A., B.L., முதலிய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர். (3—3—1974)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-600034
Printed at Tamil Arasu Press, Madras-600002. Editor : N. R. Murugavell, M.A., M.O.L.